REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 நவம்பர் 23 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 278 | Tuesday 23, November, 2021 | 20பக்கங்கள் | 30/-

ஆட்சி மாறினாலும் அரசின் கொள்கை மாறாது முன்னெடுப்பது அவசியம்

இந்தியா போன்றதொரு திட்டம் எமக்கு அவசியம்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

இந்தியாவில் நீண்ட காலங்களுக்கு கொள்கை தயாரிக்கப்பட்டு எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. எமது நாட்டிலும் அவ்வாறு சகல தரப்பினரும் இணைந்து தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு முன்னெடுத்தாலே நாட்டை முன்னேற்ற முடியும் என அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட 2 ஆம் வாசிப்பு 06

கனடாவில் இரு TNA எம்.பிக்கள் அவமதிப்பு குறித்து நாமல் கவலை

ஐக்கியம், பேச்சுவார்த்தையே சிறந்தது என டுவிட்டரில் பதிவு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோருக்காக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குரல் கொடுத்துள்ளார். கனடாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் எதிர்ப்பு போராட்டம் நடத்தியிருந்தனர்.

இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சு வார்த்தை நடத்த 06

அனைத்து மாவட்டங்களிலும் மீண்டும் ஆயுதம் தாங்கிய முப்படையினர்!

பாதுகாப்பு முன்னேற்பாடாக ஜனாதிபதி ஏற்பாடு

வர்த்தமானியும் வெளியிடப்பட்டது

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடற்பரப்புகளில் பாதுகாப்பைப் பேணுவதற்காக நாட்டின் அனைத்து ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கும் அழைப்பு விடுக்கும் 06

உர இறக்குமதி தொடர்பான தீர்மானம்;

எந்த மாற்றமும் இல்லை

சேதன விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு மட்டுமே நிவாரணம்

ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டமாக தெரிவிப்பு 03

உணவுப் பற்றாக்குறை என எதிரணி வீண் புரளி;

நாட்டில் உணவுக்கு பற்றாக்குறை இல்லை

இன்றைய ஆட்சியில் மோசடிக்கு இடமில்லை

ஜனாதிபதி 05 சதம் மோசடி செய்ததாக நிரூபித்தால் அவர் சார்பில் நான் உடனடியாக பதவி விலகுவேன் என்கிறார் அமைச்சர் மஹிந்தானந்த

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

உணவுப் பற்றாக்குறை தொடர்பில் வீண் அச்சம் ஏற்படுத்த எதிரணி முயன்றாலும் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படாது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

இந்த ஆட்சியில் மோசடிக்கு இடமில்லை என்று தெரிவித்த அவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 5 சதமாவது மோசடி செய்திருந்தால் நிரூபியுங்கள். 06

வரவு செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு விவாதம்;

மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது

ஆதரவு 153; எதிராக 60 மட்டுமே பதிவு

மு.கா, மக்கள் காங்கிரஸ், ம.ம.மு எம்.பிக்கள் ஆறுபேர் ஆதரவாக வாக்களிப்பு 06

14,021 GS பிரிவுகளுக்கும் 4,917 உள்ளூராட்சி சபைகளுக்கும்

வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டுக்கும் சமமான நிதி

கொவிட்டினால் பாதிக்கப்பட்டோருக்கு முன்னுரிமை 03

அருட்தந்தையிடம் 5 மணிநேர வாக்கு மூலம்

மூன்றாவது தடவையாக ஆஜரானார்

மூன்றாவது நாளாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முற்பகல் ஆஜரான அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ வாக்குமூலம் 06

உணவு பொதி, தேநீர் விலைகள் இன்று முதல் அதிகரிக்கின்றன

உணவு பொதி மற்றும் தேநீர் கோப்பை ஒன்றின் விலையை அதிகரிப்பதற்கு உணவக உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில் இன்று (23) முதல் 06

ஐ.நா. வின் உயரதிகாரி இன்று இலங்கை வருகிறார்

முக்கிய பிரமுகர்களை சந்திப்பார்

ஐ.நா.வின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான உதவி பொதுச் செயலாளர் நாயகம் மொஹமட் காலித் கியாரி இன்று (23) இலங்கை வருகிறார். இவர் 25 வரை இலங்கையில் தங்கியிருப்பார். 06

தோட்டத்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்;

முதலாளிமார் சம்மேளனமும் தொழிற்சங்கங்களும் சந்திப்பு

சம்பள நிர்ணயசபையினூடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் நிர்ணயிக்கப்பட்டதையடுத்து அந்த மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் மற்றும் தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொழில் பிணக்குகளை பொலிஸ் நிலையத்தின் ஊடாக தீர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை தொடர்பில் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் முதலாளிமார் சம்மேளனத்திடம் எடுத்துரைத்துள்ளன.

அதற்கமைய வேலை நாட்களை அதிகரித்து 06

இலங்கைக்கு வருகை தந்துள்ள அரூஸிய்யத்துல் காதிரிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் அஷ்ஷெய்க் அப்ழலுல் உலமா கலாநிதி தைக்கா அஹ்மத் நாஸிர் ஆலிம் நேற்று (22) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார். அருகில் பிரதமரின் முஸ்லிம் விவகாரங்களுக்கான இணைப்பாளர் அஸ்ஸெய்யித் ஹசன் மௌலானா, பிரதமரின் இணைப்புச் செயலாளர் பர்ஸான் மன்ஸூர், ஏற்பாட்டுக்குழு தலைவர் மொஹிதீன் காதர், ஒருங்கிணைப்பாளர் முய்னுதீன் பின் மொஹமட் ஆகியோரும் இந்த சந்திப்பின்போது கலந்து கொண்டனர்.

விருந்துபசார நிகழ்வினை சுற்றிவளைத்த பொலிஸார்

ஐஸ், கேரள கஞ்சாவுடன் 12 பேர் கைது

மாத்தறை, வெலிகம பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியொன்றில் விருந்துபசார நிகழ்வினை சுற்றிவளைத்த பொலிஸார் போதைப்பொருளுடன் 12 நபர்களை கைதுசெய்துள்ளனர்.

இந்த விருந்துபசார நிகழ்வு ஆன்லைனில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்களிடம் இருந்து 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்;

தன் மீதான குற்றச்சாட்டை முற்றாக மறுதலித்த பூஜித

அவருக்கு எதிராக 388 குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் குறித்து புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்த போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை மற்றும் கடமையைச் செய்யத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களை 06

மூத்த பத்திரிகையாளர் கானமயில்நாதன் நேற்று காலமானார்

மூத்த ஊடகவியலாளரும், உதயன் பத்திரிகை ஆசிரியருமான ம.வ. கானமயில்நாதன் நேற்று (22) தனது 79 ஆவது வயதில் காலமானார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த ம.வ. கானமயில்நாதன் 1942 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி பிறந்தார். 06

மாத்தறை சிறைக்கு சென்ற கஜேந்திரகுமார்

தமிழ் அரசியல் கைதியுடன் பேச்சு 03

நினைவேந்தல் உரிமையை எவருமே தடுக்க முடியாது

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ! 03

மேலும் 15 இலட்சம் பைஸர் நேற்று நாட்டை வந்தடைவு

நெதர்லாந்திலிருந்து விமான மூலம் வந்தது

மேலும் 15 இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் நேற்று (22) காலை நாட்டை வந்தடைந்துள்ளன.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பைஸர் தடுப்பூசிகளே இவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடுப்பூசிகள் நெதர்லாந்தில் இருந்து துபாய் 06

புறக்கோட்டையில் சுமைதூக்கும்

பணியாளர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில்!

கூலியை அதிகரிக்குமாறு கோரிக்கை

கொழும்பு புறக்கோட்டை 5ஆம் குறுக்குத்தெரு சுமைத் தூக்கும் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களுக்கு வழங்கப்படும் கூலியை அதிகரிக்குமாறு வலியுறுத்தி 06

"கொல்பவன் வெல்வான்" என பெயர் பொறித்த

புலிகளின் அதிசக்தி வாய்ந்த கிளைமோர் கண்டுபிடிப்பு

வேலணை அம்பிகா நகர் பகுதியில் மீட்பு

விடுதலைப் புலிகளின் தயாரிப்பான அதிசக்திவாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்று புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தின் யாழ்ப்பாணம் 51ஆவது படைத்தளம் தெரிவித்துள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேலணை அம்பிகா நகர் பகுதியில் நேற்று (22) 06

விக்கல் வீராச்சாமி

கனடாவில TNA எம்பி மாருக்கு எதிரா ஆர்ப்பாட்டம், வவுனியாவில MP ஸ்ரீதரன்ர கொடும்பாவிய எரிக்கிறாங்க என்ன நடக்குது....

சனத்த நெடுகலும் ஒரே மாதிரி ஏமாத்த முடியாது, இவங்க இனி வேற மாதிரி டெக்னிக்கா ஏமாத்த முயற்சித்தாத்தான் பிழைக்கலாம்...!!!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஈராண்டுப் பதவிக் காலத்தையிட்டு ஜனாதிபதி ஊடகப் பிரிவு தயாரித்த, "சவால்களுக்கு மத்தியில் சுபீட்சத்தின் ஈராண்டு" தலைப்பிலான நூலின் மும்மொழிப் பதிப்புகள், விசேட தொலைக்காட்சி நிகழ்ச்சியின் இறுவட்டு மற்றும் 'Signature of THE EXECUTIVE' சஞ்சிகையின் முதல் பிரதி ஆகியன ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுதேவ ஹெட்டிஆரச்சி (19) கையளித்தார். அநுராதபுரம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க, ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க உள்ளிட்ட ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிக்குழாம் அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களுக்கும் இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அநுராதபுரத்தில் அமைந்துள்ள அமைச்சரின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது ஆளும் பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்து தற்போதைய சூழ்நிலையில் தொடர்ந்தும் எமது அரசியல் மற்றும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் முபாறக் அப்துல் மஜீத், உப செயலாளர் முஜாஹித் முஹம்மது, தேசிய அமைப்பாளர் முஹம்மது சதீக் மற்றும் கொள்கை பரப்பு செயலாளர் ஸப்வான் முஹம்மது சல்மான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள மனோ கணேசன் MP நலம் பெற வேண்டி விஜேட பூஜை வழிபாடுகள் கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றது. இதில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும், முன்னாள் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான பிரகாஷ் கணேசன் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

பாடசாலைகளில் தொழில்வாண்மை கல்வித்திட்டம் அறிமுகம்

கல்லொழுவை அல் அமானில் விஷேட செயலமர்வு

பாடசாலை கல்வியில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தும் எண்ணக்கருவின் கீழ், தொழில் வாண்மைக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், பாடசாலை மட்டத்தில் தொழில் வாண்மை ஆசிரியர்களை உருவாக்கும் செயலமர்வுகளை நடத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மினுவாங்கொடை கல்வி வலயத்திலுள்ள கல்லொழுவை, அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட 11 ஆசிரியர்களுக்கான செயலமர்வு அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இச்செயலமர்வை 'வெற்றிகரமான செயற்திட்ட முன்மொழிவு' எனும் தலைப்பில், தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளர் எம். ஜே.எம். சனீர் நடத்தினார்.

அல் அமான் அதிபர் எம்.ரீ.எம். ஆஸிம் வழிகாட்டலில், முழு நாள் செயலமர்வாக நடைபெற்ற இந்நிகழ்வின் நிறைவில் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 'இது காத்திரமான செயலமர்வாக அமையப்பெற்றதாகக் குறிப்பிட்ட வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம். ஆஸிம், எதிர்காலத்திலும் இதுபோன்ற செயலமர்வுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கொவிட் 19 தொற்று காரணமாக நாட்டின் கல்வித்துறை பாரிய சவாலை எதிர்கொண்டது என்றாலும் தற்போது நிலைமை ஓரளவு சீரடைந்து காணப்படும் நிலையில், 'பாடசாலை மட்ட தொழில் வாண்மை ஆசிரியர் அபிவிருத்தித் திட்டத்தை' (SBATD) முதன்மைப் படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அம்பாந்தோட்டையில் 'மிஹிந்து நிவஹன' தேசிய விழா ஆரம்பம்

புத்த சாசனத்திற்கு தனது பிள்ளைகளை அர்ப்பணித்த பெற்றோர்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'மிஹிந்து நிவஹன' திட்டத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தேசிய விழா கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்தவின் தலைமையில் புராதன வனவாசகுடா விகாரையில் நேற்று முன்தினம் (21) நடைபெற்றது.

இங்குவண. கட்டுவெவே பியனந்த தேரரின் பெற்றோரின் சார்பில் அம்பாந்தோட்டை, வீரகெட்டிய, வீரகெட்டிய கிழக்கு (கட்டுவெள) பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய வீட்டிற்கான அடிக்கல் நடும் வைபவம் அமைச்சர் இந்திக அனுருத்தவின் பங்களிப்புடன் நடைபெற்றது.

'மிஹிந்து நிவஹன' திட்டம் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட 124 பௌத்த துறவிகளின் பெற்றோர்களுக்கு வீடமைப்புத் திட்டத்திற்கான காசோலைகள் வழங்கும் வைபவம் இங்கு பிரதானமாக இடம் பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய, பௌத்த விவகார அமைச்சு, கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சும் இணைந்து 'மிஹிந்து நிவஹன' வீடமைப்புத் திட்டத்தை நாடு பூராகவும் செயற்படுத்தி வருகிறது.

இதன் முதலாவது கட்டத்தின் கீழ் நாடு பூராகவும் 2,000 வீடுகள் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதோடு இதற்காக 120 கோடி ரூபா நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர்களான அஜித் ராஜபக்ஷ, உபுல் கலப்பதி மற்றும் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்தன, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உப தலைவர் அருண தசனாயக்க, அதன் பொதுமுகாமையாளர் கே.ஏ. ஜானக, பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அரூஸிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர் பேருவளை விஜயம்

பேருவளை விசேட நிருபர்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அரூஸியதுல் காதிரிய்யா தரீக்காவின் புதிய ஆன்மீகத் தலைவர் சங்கைக்குறிய அஷ்செய்க் நாஸிர் ஆலிம் பின் முஹம்மத் சுகைப் ஆலிம் அரூஸியதுல் காதிரி நாளை 24 ஆம் திகதி பேருவளைக்கு விஜயம் செய்கிறார்.

இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான வரலாற்று பிரசித்திபெற்ற பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலில் 24 ஆம் திகதி காலை 8 மணிக்கு இவருக்கு வரவேற்பளிக்கப்படவுள்ளது.

பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் கலாபீட மௌலவி அஸ்வர் அஸாயிதீன் (அல் அஸ்ஹரி) தலைமையில் நடைபெறும் வரவேற்புநிகழ்வில் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், அரசியல்வாதிகள் உட்பட பலரும் கலந்து கொள்வர்.

அதேவேளை, இவர் கெச்சிமலை தர்காவுக்கும் நாளைய தினம் விஜயம் செய்யவுள்ளார். அரூஸியதுல் காதிரிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவராக இருந்து அண்மையில் இறையடி சேர்ந்த தென்னிந்தியாவைச் சேர்ந்த பிரபல மார்க்கஅறிஞர் கலாநிதி மௌலவி அப்ழலுல் உலமா தைக்கா சுஹைப் ஆலிம் அவர்களின் மறைவிற்கு பின்னர் இத்தரீக்காவின் புதிய ஆன்மீகத் தலைவராக அவரது புதல்வர் சங்கைக்குறிய தைக்கா நாஸிர் ஆலிம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்திகார் ஜெமீலின் மாமனார் காலமானார்

பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த மாணிக்க வியாபாரி மன்ஸூர் ஹாஜியார் (வயது 84) நேற்று அதிகாலை சீனன்கோட்டை இல்லத்தில் காலமானார்.

மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான அன்னார், ஐக்கிய மக்கள் சக்தி பேருவளைத் தொகுதி அமைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான இப்திகார் ஜெமீலின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று மாலை சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், ஊர்பிரமுகர்கள், அரசியல் கட்சிகளைச்சேர்ந்த முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

புத்தளத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் பாலாவி முல்லை ஸ்கீம் கிராமத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முல்லை ஸ்கீம் Social Aid சமூக அமைப்பின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

Social Aid அமைப்பின் தலைவர் அப்துல் ரஹீம் ஜபருல்லாஹ் தலைமையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் (21) மாலை முல்லை ஸ்கீம் நூரானிய்யா ஜும்ஆ மஸ்ஜிதில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முல்லை ஸ்கீம் நூரானிய்யா ஜும்ஆ மஸ்ஜித் உப தலைவர் ஏ.சி.முஹம்மது ரிபாய், செயலாளர் ஜே. சிப்லி ஆசிரியர், ஆலோசகர் எஸ்.எம்.ஐயூப் ஆசிரியர், உட்பட நிர்வாக சபையினரும், Social Aid சமூக அமைப்பின் செயலாளர் எப்.நிப்ராஜ், பொருளாளர் வை.சுஹைல் உட்பட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அண்மையில் பெய்த கடும் மழையினால் பாலாவி முல்லை ஸ்கீம் கிராமத்தின் ஒரு தாழ் நிலப்பகுதி வெள்ளத்தினால் மூழ்கியது.

இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பிரதேசத்தில் உள்ள தனவந்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் தொழில் நிமித்தம் வெளிநாடுகளில் வாழும் முல்லை ஸ்கீம் சகோதரர்கள் உள்ளிட்டோரிடம் இருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட உலர் உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பன 77 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2021 நவம்பர் 23 செவ்வாய்க்கிழமை

தொழுகை நேரம்
22 முதல் 24வரை
சுபஹ் - 04.43
லுஹர் - 11.58
அஸர் - 03.20
மஃரிப் - 05.51
இஷா - 07.04

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் கார்த்திகை 7
ராகுகாலம் : பகல் : 03.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 01.30 - 3.00வரை
யோகம்: மரணசித்த யோகம்
திதி: சதுர்த்தி

இராசி பலன்கள்
மேஷம் - வெற்றி
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - சுகம்
தனுசு - செலவு
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - செலவு
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

நேற்று முதல் மறுஅறிவித்தல் வரை

கொன்சியூலர் பிரிவில் மட்டுப்படுத்திய சேவை

வெளிநாட்டு அமைச்சு அறிவிப்பு

வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் விவகார பிரிவின் இலத்திரனியல் ஆவணச் சான்றிதழ் சேவைகள் நேற்று (22) முதல் 150 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மின்னணு ஆவணச் சான்றளிப்பு முறைமையில் (eDAS)) ஏற்பட்ட கோளாறு காரணமாக கடந்த வாரம் சான்றளிப்பு சேவைகள் பாதிக்கப்பட்டதாகவும் இதனால், சேவைகளை வழங்குவதில் நீண்ட கால தாமதம் ஏற்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் கிளை சான்றளிப்பு முறைமையும் பாதிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு தற்போது நிலைமையை சரிசெய்வதில் ஈடுபட்டுள்ளதுடன், அதுவரை சான்றளிப்பு சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினைகள் சீர் செய்யப்பட்டவுடன்

06

14,021 GS பிரிவுகளுக்கும் 4,917 உள்ளூராட்சி சபைகளுக்கும்

வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டுக்கும் சமமான நிதி

கொவிட்டினால் பாதிக்கப்பட்டோருக்கு முன்னுரிமை

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

முழுநாட்டையும் ஒன்றாக கருதி வடக்கு கிழக்கு உட்பட 14,021 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 4917 உள்ளூராட்சி பிரிவுகளுக்கும் கட்சி, இன மத குல பேதமின்றி ஒரே அளவான நிதி வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். கொவிட்டினால் அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பினர் குறித்து வரவு செலவுத் திட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் உள்ளடங்காக சகல தரப்பினருக்கும் நிவாரணம் வழங்க பின் நிற்க மாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2022 வரவுசெலவுத்

06

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்:

மூடுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் அவசரமாக எடுத்ததல்ல

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதற்கு மேற்கொண்ட தீர்மானம் திடீரென மேற்கொண்டதல்ல என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் உதய கம்மன்பில பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெளிநாட்டு செலாவணியை முகாமைத்துவம் செய்துகொள்வதற்காகவே மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்கவே

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை யுகதனவிய மின் உற்பத்தி நிலையத்தின் இயற்கை திரவ எரிவாயு விநியோகத்தின் ஏகபோக உரிமையை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு நான் ஒருபோதும் இணங்கப்போவதில்லை என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்களான சமிந்திர விஜேசிறி மற்றும் ஹேஷா விதானகே ஆகியோரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்கள் தமது கேள்விகளின் போது,

மசகு எண்ணெய் கொண்டுவருவதை நிறுத்தியுள்ளதால் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருக்கின்றது.

அதன் காரணமாக நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது.

அதனால் தற்போது நாட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும் எரிபொருள் தொகை போதுமானதா மற்றும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்ற உத்தரவாதத்தை மக்களுக்கு வழங்கமுடியுமா?

அத்துடன் கெரவலப்பிடிய யுகதனவிய மின்உற்பத்தி நிலையத்தின் இயற்கை திரவ எரிவாயு விநியோகிக்கும் ஏகபோக உரிமையை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எடுத்திருக்கும் ஒப்பந்தத்தின் உண்மை நிலை என்ன என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

அமைச்சர் தொடர்ந்தும் அதற்கு பதிலளிக்கையில்;

நான் பெற்றோலிய வளத்துறை அமைச்சராக இருக்கும்வரை எரிபொருள் கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்கப்போவதில்லை. அதற்கு இடமளிப்பதும்

06

கொவிட் நெருக்கடிக்கு மத்தியிலும்:

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றத் தவறவில்லை

- அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

கொவிட் நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்றத் தவறவில்லை என ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நெருக்கடியான சூழ்நிலையிலும் 36.000 பேருக்கு அரசாங்கத்தினால் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்கள் என்ன செய்தது என கேட்போருக்கு எமது அரசாங்கம் ஊழல் மோசடியை ஒழித்து நாட்டில் சிறந்த ஆட்சியை நிலைநாட்டியுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்: நாட்டையும் நாட்டின் பாதுகாப்பையும் இல்லாதொழித்து அரசியல் பழிவாங்கலையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்ட எதிர்கட்சியினர் தற்போது நாட்டை பொறுப்பேற்கத் தயார் என கூறி வருகின்றனர்.

அவர்களின் அரசியல் பழிவாங்கல் செயற்பாடே நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள வழிவகுத்தது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வீதி அபிவிருத்தி திட்டங்களில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது. ஊழல் மோசடிகள் மலிந்த காலமாக அதனைக் குறிப்பிட முடியும்.

எதிர்க்கட்சியில் சிலர் பட்டினி பற்றி சபையில் பேசுகின்றனர். நாட்டில் எவரும் பட்டினியை எதிர்கொள்வதற்கு எமது அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது.

வெறும் வார்த்தைக்கு மட்டும் மட்டுப்படுத்தாது சாதாரண மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை இம்முறை வரவுசெலவுத் திட்டம் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் 'மைத்திரி ஆட்சியில் நிலையான நாடு', '100 நாள் வேலைத் திட்டம்' என ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் எதையும் மேற்கொள்ள முடியாமல் போனது. அக்காலத்தில் மத்திய வங்கியின் பணத்தை செலவழித்தே தேர்தல் நடத்தினார்கள். கொள்கைகளும் வேலைத்திட்டங்களும் தொடர்ச்சியாக மாறிக்கொண்டே இருந்தன. நாட்டுக்கோ மக்களுக்கோ எதுவும் கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உரம் இறக்குமதி தொடர்பான தீர்மானம்; எந்த மாற்றமும் இல்லை

ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டமாக தெரிவிப்பு

- சேதன விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு மட்டுமே நிவாரணம்

உர இறக்குமதி தொடர்பான தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று (22) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலின் போது அவர் இதனை தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடக பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அத்துடன், அரசாங்கம் என்ற ரீதியில் சேதன விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு மாத்திரமே நிவாரணங்கள் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். மரக்கறிகள், சோளம் மற்றும் ஏனைய தானிய பயிர்ச்செய்கைக்காக தனியார் துறையினூடாக விவசாய இரசாயனங்களை இறக்குமதி செய்யுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

பசுமை விவசாய பொருளாதாரமே அரசாங்கத்தின் கொள்கை எனவும் ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் நிவாரண திட்டத்தின் கீழ் இரசாயன

06

மாணவர், இளைஞர் மத்தியில் டெல்டா திரிபு பரவும் அபாயம்

அவதானமாக இருக்க அமைச்சர் சன்ன வலியுறுத்து

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் புதிய டெல்டா உப வைரஸ் திரிபு பரவும் அபாயம் அதிகமாக காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, புதிய டெல்டா திரிபின் உப பரம்பரை பாடசாலை மாணவர்கள் மத்தியில் பரவும் அபாயம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதேவேளை, பாடசாலைகளுக்குள்ளும் வெளியிலும் மாணவர்கள் கூடுவதை கட்டுப்படுத்தி, நோய் பரவுவதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் என சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றாளர்களுக்கு ஏற்படும் கொவிட் தொற்றுக்கு பின்னரான நோய் நிலைமையொன்று

06

நினைவேந்தல் உரிமையை எவருமே தடுக்க முடியாது

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் !

இலங்கையில் போரின்போதும் வன்முறைகளின்போதும் உயிரிழந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை – அவர்களின் உறவுகள் நினைவேந்தும் உரிமையை எவரும் தடுக்கவே முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படுவதற்கு நீதிமன்றங்கள் ஊடான தடையுத்தரவைப் பொலிஸார் பெற்று வருகின்றனர். இது இந்த அரசின் திட்டமிட்ட செயல் என்று தமிழ் அரசியல்வாதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நல்லாட்சி அரசில் மாவீரர் நாள் நினைவேந்தல் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆட்சியில் அனுமதி ஏன் மறுக்கப்படுகின்றது எனவும் தமிழ் அரசியல்வாதிகள் சீற்றத்துடன் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கடந்த காலங்களில் போரின்போதும் வன்முறைகளின்போதும் பலர்

06

மினுவாங்கொட ரெஜி ரனதுங்க ஆண்கள் கல்லூரியில் 6 ஆம் ஆண்டு தொடக்கம் 9ஆம் ஆண்டு வரை வகுப்புகள் நேற்று ஆரம்பமாகின. (படம்: கெலும் லியனகே)

மினுவாங்கொட நாலந்த ஆண்கள் கல்லூரியில் 6 ஆம் ஆண்டு தொடக்கம் 9ஆம் ஆண்டு வரை வகுப்புகள் நேற்று ஆரம்பமாகின. படம்: கெலும் லியனகே

பாடசாலைகள் நேற்று வழமைக்கு திரும்பின

மாணவரது வரவும் திருப்தியளிப்பு

கொவிட் தொற்று காரணமாக நாடளாவிய ரீதியில் இடை நிறுத்தப்பட்டிருந்த பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் நேற்று முதல் முழுமையாக ஆரம்பமாகியுள்ளன.

நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளிலும் அனைத்து வகுப்பு மாணவர்களுக்குமான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தடிமன், இருமல், காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் காணப்படும் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் எனவும் கல்வி அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

அரசாங்க அறிவித்தல்

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்படும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

(அடிப்படை : 2013 = 100)

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிக்கப்பட்ட 2021 ஒக்டோபர் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் **150.6 (நூற்றி ஐம்பது தசம் ஆறு)** என பொது அறிவித்தலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பி.எம்.பி.அநுரகுமார,
தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபர பதில் பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
த.பெ.இல.121, பத்தரமுல்ல.
22.11.2021

நாணய மாற்று

நாணயம்	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	143.01	149.30
கனடியன் டொலர்	156.79	162.96
யூரோ	223.85	232.26
ஜப்பான் யென்	1.7169	1.7858
சிங்கப்பூர் டொலர்	145.77	150.65
ஸ்டேலிங் பவுன்ஸ்	265.16	273.85
சுவிஸ் பிராங்க்	211.85	219.78
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	534.00	கட்டார் ரியால்	55.29
குவைத் டினார்	665.86	சவூதி ரியால்	53.68
ஓமான் ரியால்	522.98	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.81

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் கார்த்திகை மாதம் 07ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 17

குறள் தரும் சிந்தனை

கூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
கூழ்வாரைக் கூழ்ந்து கொளல்

கண்ணாக இருந்து ஏனையும் கண்டறிந்து கூறும் அறிஞர் பெருமக்களைச் சூழ வைத்துக் கொண்டிருப்பதே ஆட்சியாளர்க்கு நன்மை பயக்கும்.

வீழ்ச்சி நிலையிலிருந்து மீண்டும் தீவிரமடையும் கொவிட் தொற்று!

நாட்டில் கடந்த ஜூலை மாதத்தின் பிற்பகுதி முதல் கொவிட் 19 தொற்று மூன்றாவது அலையாக ஆரம்பமானது. ஆன போதிலும் எடுத்த எடுப்பிலேயே இத்தொற்று கட்டுப்பாட்டுக்கான தனிமைப்படுத்தல் ஊரடங்கு உள்ளிட்ட ஏனைய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து நாட்டை முழுமையாக முடக்காத வகையில் கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக திருமண வைபவங்கள், மரண வீடுகளில் இடம்பெறும் இறுதிக் கிரியை நிகழ்வுகள் என்பவற்றில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை, அரச, தனியார் அலுவலகங்களுக்கு கடமைக்கு அழைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை, சமய வழிபாட்டு தலங்களில் சமய வழிபாடுகளில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை, பயணிகள் பஸ் வண்டிகள், ரயில்களில் ஆசனங்களுக்கு ஏற்ப பயணிப்பவர்களின் எண்ணிக்கை என்பன வரையறுக்கப்பட்டன. அத்தோடு மாகாணங்களுக்கு இடையில் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதோடு அநாவசியமான பயணங்களுக்கும் நடமாட்டங்களுக்கும் தடையும் விதிக்கப்பட்டது.

இவ்வாறு இத்தொற்றின் தீவிரத்தைக் கட்டுப்படுத்தி அதனை பெருவீழ்ச்சி நிலைக்கு கொண்டு வரும் நோக்கில் பலவிதமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனாலும் இக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் மக்களில் பெரும்பாலானவர்கள் கவனயீனமாகவும் உதாசீனமாகவும் நடந்து கொள்ளவே செய்தனர். அதன் விளைவாக இத்தொற்றுக்கு உள்ளானர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்தே சென்றது.

இதன் காரணத்தினால் நாட்டை முழுமையாக முடக்க வேண்டிய இக்கட்டான நிலை உருவானது. மக்களின் ஆரோக்கிய நலன்களுக்கு முன்னுரிமையளித்து இத்தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு, பயணக் கட்டுப்பாட்டு உள்ளிட்ட இத்தொற்று கட்டுப்பாட்டுக்கான அனைத்து நடவடிக்கைகளும் இறுக்கமான முறையில் அமுல் படுத்தப்பட்டன. இதன் பயனாக சுமார் ஆறு வாரங்களானதும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை குறைவடையத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து இத்தொற்று பெருவீழ்ச்சி நிலைக்கு வரத் தொடங்கியது.

இந்நிலையில், இத்தொற்று கட்டுப்பாட்டுக்கான இறுக்கமான நடவடிக்கைகளில் கட்டம் கட்டமாக தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டு நாட்டில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் நாட்டில் இத்தொற்று முழுமையான கட்டுப்பாட்டை அடைந்து விடல்லை என்பதை மறந்து விடலாகாது. மக்களின் பொருளாதார நலன்களை முன்னிலைப்படுத்தியே இத்தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதன் காரணத்தினால்தான் இத்தொற்றை தவிர்த்துக் கொள்வதற்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்களைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தொழுகுமாறு சுகாதார தரப்பினரும் மருத்துவ நிபுணர்களும் மக்களிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இருந்த போதிலும நாட்டின் சனத்தொகையில் பெரும் பகுதியினருக்கு இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி பெற்றுக் கொடுக்கப்பட்டு இருப்பதாலும் கடந்த சில வாரங்களாக இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாலும் இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் மீண்டும் அசிரத்தையும் கவனயீனமும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனை நாடெங்கிலும் பரவலாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதன் விளைவாக, 'இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை 15 , 20 வீதம் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ள சுகாதார அமைச்சின் கொவிட் 19 தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான பிரதான தொடர்பாளர் டொக்டர் அன்வர் ஹம்தானி, 'யாழ்ப்பாணம், அம்பாறை, கம்பஹா, குருநாகல், அநுராதபுரம், பொலன்னறுவை, பதுளை ஆகிய மாவட்டங்களில் இவ்வதிகரிப்பை அவதானிக்க முடிகின்றது. அதனால் இம்மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு இத்தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பூஸ்டர் தடுப்பூசியை உடனடியாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, 'இந்த நிலைமை நீடிக்குமாயின் நாட்டை மீண்டும் முடக்க வேண்டிய நிலையே ஏற்படும். அதன் விளைவாக மக்களின் வாழ்வாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்படக் கூடிய நிலைக்கு முகம் கொடுக்க நேரிடலாம். அத்தோடு சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகளைக் கூட மட்டுப்படுத்த வேண்டிய நிலைக்கு உள்ளாகலாம்' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆகவே கொவிட் 19 தொற்று தொடர்பில் கடந்த காலங்களில் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களையாவது கருத்தில் கொண்டு இத்தொற்று குறித்து கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொள்வதை ஒவ்வொருவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இத்தொற்று மீண்டும் தீவிரமடைவதையும் நாடு முடக்கப்படுவதையும் தவிர்த்துக் கொள்ள முடியும். அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 'தொலஸ் மகே பகன' கலாசார திட்டம்

கலைஞர்களை உருவாக்குவதிலும், அவர்களது கலைகளை ஊக்குவிப்பதிலும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 'தொலஸ் மகே பகன' தேசிய வேலைத் திட்டம் பிரதேச செயலகங்கள் தோறும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரதேச செயலகங்களின் கீழ் வழி நடத்தப்படுகின்ற கலாசார அதிகார சபைகள் மற்றும் கலாசாரப் பிரிவுகள் மூலம் கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்புரைக்கமைவான இவ்வாறான முன்மொழிவுகளுக்கு செயலுருக்கம் கொடுப்பதில் கல்முனை பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் பங்களிப்புக்கள் அளப்பரியதாகும்.

கலாசார விழாக்களை ஒருங்கிணைத்தல், பாடசாலை மாணவர்களின் கலை மேம்பாட்டினை ஊக்குவித்தல், சுவதம் கலைஞர் விருது வழங்கல், கலை மன்றங்களுக்கான செயற்பாட்டு ஊக்குவிப்பு காசோலைகளை வழங்கல் மற்றும் பிரதேச செயலக அலுவலகர்களின் திறமைகளை மேம்படுத்துதல் எனப் பல்வேறு செயற்பாடுகளிலும் கல்முனை பிரதேச செயலகம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

கல்முனை பிரதேச செயலக கலாசார அதிகாரசபையின் ஆலாசனைக்கிணங்க கலாசார உத்தியோகத்தர் எம். எச்.பௌசுல் ஹிபானாவின் ஒருங்கிணைப்பில் செயற்றிட்டங்கள் கலைவடிவமாகி வருகின்றன.

கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்புரைக்கமைய பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கிடையிலான விவாத மேடை அரங்கமொன்று அண்மையில் காலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பௌசுல் ஹிபானா தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி மேற்படி நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கலைஞர்களை ஊக்கப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். பிறை எப்.எப்.எம். பிரதிப் பணிப்பாளரும் கலாசார அதிகார சபையின் உப செயலாளருமான பஸீர் அப்துல் கையூம் நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

'சமூக ஊடகங்களின் ஆக்கிரமிப்பில் குடும்பம் மற்றும் சமூகங்களுக்கிடையிலான இடைத்தொடர்புகள் சாதகமாக வளர்ச்சி அடைந்துள்ளதா?இல்லையா?' என்னும் தலைப்பில் விவாதம் இடம் பெற்றது. கல்முனை வலயக்கல்வி பணிமனையின் கணக்காளர் வை.ஹபிபுல் லாஹ், நிந்தவூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ஜெசான் ஆசீக், கவிஞர் சோலைக்கிளி ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர்.

சமூக ஊடகங்களின் ஆக்கிரமிப்பில் குடும்பம் மற்றும் சமூகங்களுக்கிடையிலான இடைத் தொடர்புகள் சாதகமாக இல்லை என்ற அணியினரே விவாதத்தில் வெற்றியீட்டினர்.

கலந்து கொண்டோருக்கு சான்றிதழ்களும் வெற்றியீட்டியவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. 'தொலஸ் மகே பகன' தேசிய வேலைத்திட்டத்தின் மற்றுமொரு நிகழ்வாக கலை உணர்வுகளை வெளி உலகத்திற்குப் பரவலாகும் நோக்கில் கலை மன்றங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி பிரதம கலந்து கொண்டு கலை மன்றங்களின் தலைவர்களுக்கு காசோலைகளை வழங்கி வைத்தார்.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் டி.எம் றிம்சான், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளரும், கலாச்சார அதிகார சபையின் பிரதித் தலைவருமான ஏ.ஆர். எம்.சாலீஹ், நிருவாக உத்தியோகத்தர் எம்.என். எம்.ரம்சான், கலாசார உத்தியோகத்தர் பௌசுல் ஹிபானா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஜெஸ்மி எம்.மூஸா
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

மணமகள் அலங்கார துறையாளர்களுக்கு NVQ தரச் சான்றிதழ் வழங்கும் திட்டம்

சுபீட்சத்தின் நோக்கு அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் பல்வகை தொழில் துறைகளில் நிபுணத்துவம் இல்லாமல் தொழில் புரியும் நிலையை 2025 ஆண்டளவில் மட்டுப்படுத்தும் செயல் திட்டத்தின் கீழ் மணமகள் அலங்காரத் துறையாளர்களுக்கு NVQ தர சான்றிதழ் வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி ,ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் இராஜாங்க அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி தொழில் கல்வி ஆணைக்குழு (TVEC) நிறுவனங்களினால் குறிப்பிட்ட துறை சார்ந்த தொழில் துறையாளர்களுக்கான முந்திய அறிவு அடிப்படையில் மதிப்பீட்டு முறைமையின் (RPL) கீழ் மணமகள் அலங்கரிப்பாளர்களுக்கு நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி NVQ 4 மட்டத்துக்கு தகுதி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் திறன் அபிவிருத்தி ,தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் இராஜாங்க அமைச்சர் வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல தலைமையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அமைச்சின் அதிகாரிகள் மற்றும் நிறுவனத் தலைவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட முந்திய அறிவின் அடிப்படையில் மதிப்பீட்டுமுறைமை (RPL) ஆய்வின் மூலம் மணமகள் அலங்கரிப்பாளர் தொழில்துறையாளர்கள் 1300 பேரளவில் சான்றிதழ் பெற தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் முதலாம், இரண்டாம் கட்ட தொகுதியினருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களில் கல்வி வாய்ப்பு கிடைக்காத இளைஞர், யுவதிகளுக்கு தொழில் சந்தைக்கு தரமான விதத்தில் பயிற்சியளித்து தொழில் துறைக்கான முறையான சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதே இந்த அமைச்சின் கீழ் வரும் பல்வகை தொழிற் பயிற்சி நிறுவனங்களின் இலக்காகும். 1990 மற்றும் 1991 மூன்றாம் நிலை தொழிற் கல்வி துறைசார் சட்டமூலத்தின் அடிப்படையில் TVEC ஆணைக் குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

நடிகர் சூரியாவுக்கு புதிதாக வந்துள்ள மற்றொரு சிக்கல்!

பிரபல நடிகர் சூர்யாவுக்கு இன்னொரு சிக்கல் வந்துள்ளது. இதையொட்டிய எச்சரிக்கையும் பறந்து வந்துள்ளது. 'ஜெய்பீம்' படம் இப்போது வரை மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. எனினும் சில காட்சிகளில் வன்னியர் சமுதாயம் இழிவுபடுத்தப்பட்டிருப்பதாக சர்ச்சைகள் எழுந்தன.

இதுதொடர்பாக பா.ம.க இளைஞரணி தலைவர் அன்புமணி ராமதாஸ், நடிகர் சூர்யாவிடம் பல கேள்விகளை முன்வைத்தார். இதற்கு சூர்யாவும் பதில் சொல்லி இருந்தார். விளக்கமும் தந்திருந்தார். அத்துடன், "படைப்பு சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் வராமல் காக்கப்பட வேண்டும் என்பதை நீங்களும் ஏற்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று பதிலடி தந்திருந்தார்.

ஆனாலும் ஆத்திரம், அதிருப்தி குறையாத பா.ம.க தொடர்ந்து வருத்தத்திலேயே உள்ளது. இதனால், சூர்யாவை எட்டி உதைத்தால் பரிசு, 5 கோடி ரூபா நஷ்டஈடு தர வேண்டும் என்று அறிவித்து, அது தொடர்பான சர்ச்சைகள் வந்தவண்ணம் உள்ளன. இதனால், சூர்யாவுக்கு துப்பாக்கி எந்திய பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழலில்தான் இன்னொரு பிரச்சினை கிளம்பி உள்ளது.

கடலூரில் விருத்தாசலம் அடுத்த முதனை என்ற கிராமத்தை சேர்ந்தவர் ராசாகண்ணு என்பவர். இவரை கம்மாபுரம் பொலிசார் அடித்து கொலை செய்த வழக்கை மையமாக வைத்து தான் ஜெய்பீம் படமும் எடுக்கப்பட்டுள்ளது. இந்த படத்தில் அனைத்து சமுதாயத்தினரும் ஒற்றுமையாக வாழும் முதனை கிராமத்தில் சாதிய வன்மத்தோடு ஒரு சாதியை மட்டும் தவறாக காட்சிப்படுத்தி இருப்பதாக சொல்லி, அந்த கிராம மக்கள் திடீரென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். படத்தின் தயாரிப்பாளர் சூர்யா இதற்கு மன்னிப்பு கேட்டே ஆக வேண்டும் என்று கண்டன முழக்கங்களுடன் எச்சரிக்கை விடுத்தனர். தகவலறிந்த ஊமங்கலம் பொலிசார் சமாதானம் செய்தனர். சூர்யா மன்னிப்பு கேட்கா விட்டால் மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்று சொல்லி விட்டு, அங்கிருந்து கலைந்து சென்றனர் மக்கள். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

ஏற்கனவே ஜெய் பீம் படத்தில் வன்னியர்கள் தவறாக சித்தரிக்கப்பட்டதாக குற்றச்சாட்டு இன்னும் அடங்காத நிலையில், இப்போது கிராம மக்கள் போராட்டத்தில் களமிறிங்கியுள்ளது சூர்யா தரப்புக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்ல, படம் வந்து இத்தனை நாள் ஆகியும் இதுகுறித்து யாருமே பேசப்படாத நிலையில், கிராம மக்கள் திடீரென இன்று குற்றஞ்சாட்டி போராட்டம் செய்ய என்ன காரணம்? இது யாருடைய தூண்டுதல்? என்ற சந்தேகத்தையும் சிலர் கிளப்பி விட்டு வருகின்றனர்.

பார்வையாலும், வார்த்தைகளாலும் பக்தர்களுக்கு அருள் புரிந்த பகவான்

96 ஆவது ஜனன தினம் இன்று

பகவான் சத்யசாயி பாபா தனது ஸ்பரிசத்தாலும், பார்வையாலும், வார்த்தைகளாலும் ஏராளமான பக்தர்களுக்கு அருள் புரிந்திருக்கிறார். 'ஆத்மீகம் என்பது அனுபூதியே' என்பது ஆன்றோர் வாக்கு. இந்த அனுபூதியைத் தனது பக்தர்களுக்கு வழங்குவது அவதார நோக்கங்களுள் பிரதானமானதெனலாம். பக்தர்களின் ஆத்மாவின் அடித்தளத்தில் அவர் ஏற்படுத்துகின்ற அனுபவங்கள் மூலமாகவே பக்தர்களை, அவர்களின் வாழ்க்கை முறையை முழுமையாக மாற்றி அமைக்கின்றார் பகவான்.

இது மாபெரும் அற்புதமாகும். அற்புதங்களால் மட்டுமல்லாமல் தனது அருளுரைகளாலும் அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞானத்தைப் புகட்டுகிறார். அவருடைய அருளுரைகள் அனைத்தும் வேதங்கள், உபநிஷதங்கள், பகவத்கீதை, பிரம்மசூத்திரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. வேதங்களில் உபநிஷதங்கள் ஞானகாண்டம் எனப் போற்றப்படுவதையும் உபநிஷதம், பகவத்கீதை, பிரம்மசூத்திரம் ஆகிய மூன்றும் 'பிரஸ்தானத்திரயம்' (முதன்மையான மூன்று) என மதிக்கப்படுவதையும் இங்கு நாம் நினைவிற்கொள்ள வேண்டும். சனாதன தர்மம் என்பது சாசுவதமான, நிலையான, அழிவற்ற தர்மம் எனப் பொருள் கொள்ளலாம். பரதத்துவ விளக்கங்களுக்கு ஏற்ற வகையில் வாழ்வதே சனாதன தர்மம் எனப் படுகின்றது. பரதத்துவ விளக்கம் அல்லது மெய்ப்பொருள் விளக்கம் அல்லது மெய்ப்பொருள் ஆராய்ச்சி என்பது உலகின் தத்துவஞான வரலாற்றில் மிகத் தொன்மையான காலம் தொடக்கம் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளமையை நாம் அறியக் கூடியதாக உள்ளது.

இம்மை என்று சொல்லப்படும் இவ்வுலக வாழ்கையைப் பற்றியும் மறுமை என்று சொல்லப்படும் சுவர்க்கம் முதலிய மறுவுலகம் பற்றியும் பகர்வது வேதம். அதாவது புலன்கள் மூலம் நுகரப்படுகின்ற பிரபஞ்ச வாழ்க்கையைப் பற்றிப் பேசுவது வேதம். புலன்களுக்கும் மனதுக்கும் அப்பால் உள்ள மெய்ப் பொருள் பற்றி போதிப்பது வேதாந்தம் எனலாம்.

'இந்தியாவிலும் பிற நாடுகளிலும் தோன்றியுள்ள எல்லா மதங்களின் அடிப்படைத் தத்துவங்களையும் வேதாந்தத்தில் காணலாம். வேதாந்தத்தில் இல்லாத கோட்பாடு உலகில் எந்த மதத்திலுமே இல்லையென்று உறுதி கூறலாம். மதங்களுக்கெல்லாம் தாய்மதமாய் இருப்பது வேதாந்தம்.

அத்வைத சம்பிரதாயத்திற்குச் சிறந்த முன் மாதிரியாயிருப்பவர் ஸ்ரீ சங்கராச்சாரியார் ஆவர். அத்வைதம் என்பது இரண்டற்றது எனப் பொருள்படுகிறது. ஜகத், ஜீவன் என்று சொல்லப்படுபவை வேறு. பரம்பொருள் வேறு அல்ல. உள்ளது ஒரே பொருள். பிரம்ம ஞானத்தில் பிரம்மம் ஒன்றே எங்கும் உள்ளது. நதி கடலில் லயமாவது போன்று ஞானமடைந்த ஜீவன் பரத்தில் கலக்கிறான். இது அத்வைதம் புகட்டும் முக்தி. அதை மேலும் தெளிவாகக் கூறுவதானால் கடலில் தோன்றி கடலில் நிலைபெற்றிருக்கும் அலையானது. தனது நாமரூபத்தை அழித்து விடும் போது பழையபடி கடலாகின்றது. அப்படி முக்தி நிலையில் ஜீவன் பரத்தில் ஒன்றுபடுகிறான்.

'ஒருவர் முந்திய பிறவிகளில் செய்த பாவ, புண்ணியங்களுக்கேற்ப உலக மேடையில் அவர் பெற்ற பாத்திரம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. அனைத்தும் பிரமை என்பதை உணரும்போது நீ பிரம்மத்தைக் காண்பாய். அதே போல நீயே பிரம்மம் என்பதை உணர்ந்தால் உன்னை விட்டுப் பிரமை விலகி விடும். நீ யாரென்பதை உணர முயன்றால் நிச்சயம் நீ சத்தியத்தை அறிவாய்'

'கடவுள் உன் இதயத்தில் இருக்கிறார். ஆனால் அவரை உன்னால் உணர முடிவதில்லை. உன் அகங்காரம் மற்றும் தேகப் பற்று என்னும் சுவர்கள் தெய்வக் காட்சியை மறைக்கின்றன.'

'எப்போதும் நீ உன்னை உடல், மனம், சித்தம் என்றே எண்ணிக் கொண்டிருந்தால், நீ கடவுள்தான் என்ற உண்மையை எப்படி உணர்வாய்? உடல், மனம், சித்தம், அறிவு ஆகியவை வெறும் கருவிகள்தான் ; நீ அதன் தலைவன். அதுதான் ஆத்மா. ஆத்மா எங்கும் நிறைந்தது. பிரம்மமும் ஆத்மாவும் ஒன்றேதான். எங்கும் நிறைந்து எப்போதும் விரிவடைகின்ற தெய்வீகக் கோட்பாடே பிரம்மம்.'

இருமையைக் கடந்து ஒருமை எய்தும் போது அகங்காரமும் பற்றும் அழிந்து போகும். கடவுள் அழிவற்றவர். அழிவதனுள்ளும் இருக்கிறார். அழிவது மற்றும் அழிவற்றதன் நிரந்தர சத்தியத்தை உணரும்போது மனங்கடந்த ஒருமை அனுபவமாகும். மாயைக்கு அப்பாற்பட்ட கடவுளே மாயைக்குக் காரணமாகவும் ஆகிறார். மாயத் திரை அகலும்போது தெய்வீகம் புலப்படும்.

ஜோசப் நேசராஜா...✍
மட்டக்களப்பு

சைவத் தமிழ் பண்பாட்டு கலாசார விழுமியங்களை கடைப்பிடித்து வாழ்ந்த சைவப்புலவர் செல்லத்துரை

'தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் கொள்ளப்படும்' என்பதற்கமைய மறைந்தும் இன்றும் பலருடைய உள்ளத்திற் வாழ்ந்து கொண்டிருப்பவர் சைவப் புலவர் சு.செல்லத்துரை. சைவப் புலவர் பட்டம் பெற்று தமிழ், சைவ சமயத்தைக் கற்பிக்கும் ஆசிரியராகப் பணிபுரிந்தாலும் தன்னுடைய ஆற்றலால் சிறந்த நாடகக் கலைஞனாகத் திகழ்ந்தவர்.

யாழ்ப்பாணம் இளவாலையில் பிறந்து வாழ்ந்தாலும் மன்னாரில் கற்பித்த காலத்தில் மன்னார் மக்களின் மனதில் இடம்பிடித்தவர். முதுமைக் காலத்தில் கொழும்பு மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் பிரகாசித்தவர். இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தை வளர்த்தெடுத்தவர்களில் பெரும் பங்காற்றியவர். ஆசிரியத்துறையிலும், அதிபராகவும் மிளிர்ந்து பல மாணாக்கர்களை தமிழ் பேசும் நல்லுலகத்து மாமனிதர்களாக்கிய பெருமைக்குரியவர்.

நாடகத்துறையில் பல பாத்திரங்களாக நடித்தது மட்டுமல்லாது பல நாடகங்களையும், வில்லிசைகளையும் எழுதிய பெருமைக்குரியவர். பாடசாலை தமிழ்த் தினப் போட்டிகளுக்குரிய நாடகங்களையும் இசை நாடகங்களையும் எழுதி பயிற்றுவித்து பல பரிசில்களையும் பெற்றுக் கொடுத்தவர். ஆசிரியப் பணியில் மட்டுமன்றி அதிபர் பதவி வகித்த காலத்தில் சிறந்த நிர்வாகியாக இருந்து அனைத்தையும் திட்டமிட்டு அனைவரையும் மனிதாபிமானத்துடன் அரவணைத்து செயற்பட்டவர்.

பாடசாலைக்காலங்களில் துவிச்சக்கர வண்டியில் சென்று வந்தாலும் அறுபது வயதில் ஓய்வு பெற்றபின் பல பணிகளில் தன்னை ஆட்படுத்தியமையால் மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி விரைவுபடுத்திய பெருமைக்குரியவர். தன் சொந்த வாழ்வில் சைவத் தமிழ் பண்பாட்டு கலாசார விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்த பெருமைக்குரியவர். சைவ சமய தீட்சை பெற்று நித்திய அனுஸ்டானங்களைக் கடைப்பிடித்தல், சைவ உணவு உண்ணல், பசுவை வளர்த்தல், ஆலய வழிபாட்டில் ஈடுபடல், உறவினர் விருந்தினர்களைப் பேணுவதில் அவருக்கு நிகர் அவரே. எங்கு சென்றாலும் வெள்ளை வேட்டி, தேசிய உடை, உத்தரியச் சால்வை, விபூதிக் குறி, சந்தனத் திலகமுடன் எப்போதும் காண முடியும்.

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் தன்னுடைய வாண்மையினால் பிரகாசித்தவர். கொழும்பு சென்று வாழ்ந்த காலத்தில் தலைநகரில் செல்லாத இடமில்லை என்று கூறுமளவிற்கு அகில இலங்கை சைவப் புலவர் சங்கம், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த பயிற்சி மையம், திருமுறைப் பயிற்சி மையம், கொழும்பு தமிழ்ச் சங்கம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என பல்வேறு பட்ட நிறுவனங்களூடாகவும் செயற்பாடுகளைப் பல காலம் நிகழ்த்தியவர். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாக பல மாநாடுகள், கருத்தரங்குகள் என தமிழ் பேசும் நல்லுள்ளங்கள் வாழும் பிரதேசம் எங்கும் சென்று சைவத்தையும், தமிழையும், சைவ சித்தாந்தத்தையும் ஒளிவீசச் செய்தவர்.

கட்டுரையாளருடன் சைவப்புலவர் சு. செல்லத்துரை (இடப்பக்கம்)

கடல் கடந்து லண்டன் மாநகர் சென்று அங்கும் சைவத் தமிழ் கலாசாரப் பண்பாடுகளை மிளிரச் செய்த பெருமைக்குரியவர் சைவப் புலவர் சு. செல்லத்துரை அவர்கள். அகில இலங்கை சைவப் புலவர் சங்க வகுப்புக்கள், பரீட்சைகள், சைவ மாநாடுகள், சைவ நாதம் நூல் வெளியீடு என பல்வகைப்பட்ட பணிகளை இரு பெரும் தூண்கள் எனக் கூறுமளவிற்கு சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளையுடன் இணைந்து செயற்பட்டவர். இதனால் பலரதும் பராட்டைப் பெற்றவர். சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழாவை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடத்தித் தானும் சென்று பலருக்கும் பல வகையிலும் பயன் பெற வழி காட்டியவர்.

இவரின் செயற்பாடுகளுக்கு கிடைத்த பட்டங்கள், பரிசில்கள் விருதுகள் சொல்லிலடங்காதவை. இவற்றிற்கு மகுடம் வைத்தால் போல்

அமரத்துவம் அடைந்த ஒரு மாத நிறைவு நேற்றுமுன்தினம்

பெருவிழாவாகக் கொண்டாடியதோடு மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் அகில இலங்கை சைவப்புலவர் சங்க சைவ மாநாடுகள், பட்டமளிப்பு விழாக்களை அந்தந்த மாவட்ட சைவப் புலவர்களையும் இணைத்து திறம்பட ஆற்றியவர்.

2010 ஆம் ஆண்டில் துணைவியாரை இழந்து தவித்தாலும் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என தன் பணிகளை குறைவற நிறைவேற்றியவர். ஆண்டு தோறும் பலநூல்களை மனைவி ஞாபகார்த்தமாக எழுதி வெளியிட்டவர். திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த, திருமுறைப் பயிற்சிமையமூடாக தென்னிந்திய, வடஇந்திய தலயாத்திரைகளை இலங்கை அரசு கலாபூசணம் விருது வழங்கி கௌரவித்தது.

திருமூலரின் ஐப்பசிப் பரணி நன்னாளில் இவ்வுலகை நீத்து செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ் பல்லோரும் ஏற்றிப் பணிய வாழ்ந்தாலும் இவ்வுலகில் பெரும் இடைவெளி ஒன்று தோன்றியுள்ளது. கல்வி அறிவும், பாண்டித்தியமும், மனிதாபிமானமும், சைவப்பண்பாடும் கொண்ட அன்னாரைப் போல் இனியார், இனியார் உளர் என்றே சைவ உலகம் சிந்திக்கின்றது.

சைவப்புலவர்
செ.கந்தசத்தியதாசன் ...✍

அனைத்து வகுப்புகளும் ஆரம்பம்;

ஒன்லைன் கல்விக் கலாசாரத்திலிருந்து மாணவரை மீட்டெடுப்பது அவசியம்!

கொவிட் 19 வைரஸ் பரவல் நிலை காரணமாக நாடளாவிய ரீதியில் மூடப்பட்ட பாடசாலைகளில் அனைத்து வகுப்புகளும் நேற்று மீளத் திறக்கப்பட்டுள்ளன. சுகாதார வழிகாட்டல்களுக்கமைவாக அனைத்து வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

200 மாணவர்களுக்குட்பட்ட பாடசாலைகள் கடந்த ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை கல்வி நடவடிக்கைகளுக்காக மீளத் திறக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கல்வி செயற்பாடுகள் ஆரம்பமாகின. அதேபோன்று தரம் 10 மற்றும் க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நவம்பர் 08 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின.

ஏனைய 6 முதல் 9 வரையான தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் நேற்று ஆரம்பமாகியன. இவ்வாறு மீளத் திறக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு தங்களது பிள்ளைகளின்

மீள்திரும்பலை பெற்றோர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

'உங்கள் பிள்ளைகளின் கல்வியை தொடர்ச்சியாக உறுதிப்படுத்துங்கள், கண்காணியுங்கள், ஓய்வு நேரத்தினைத் திட்டமிடுங்கள், உடற்பயிற்சி ஆன்மீகச் செயற்பாடுகளுக்கு இடமளியுங்கள், பயனற்ற பொருத்தமில்லாத இணையப் பாவனையைத் தவிர்க்க அறிவூட்டுங்கள், பாதுகாப்பினை உறுதிப்படுத்த தனித்திருப்பதனை

தவிருங்கள், குடும்ப வன்முறையை இல்லாதொழியுங்கள், பாதுகாப்பான பாடசாலை மீள்திரும்பலை உறுதிப்படுத்துங்கள் அதற்காக பிள்ளைகளைத் தயார்படுத்துங்கள்

என கிழக்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி விடயங்களடங்கிய விழிப்புணர்வுப் பதாதைகள் கிழக்கு மாகாணத்தின் முக்கிய இடங்களில் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதால், மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதில் பெற்றோர் சவால்களை எதிர்கொள்ள நேரிடலாம். அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு தங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு தொடர்ச்சியாக அனுப்பி வைத்து கல்வியை உறுதிப்படுத்துவது பெற்றாரின் தலையாய கடமையாகும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் கல்வியியலாளர்களும் வலியுறுத்துகின்றனர்.

பாடசாலைகள் நீண்ட காலம் மூடப்பட்டிருந்ததனால், மாணவர்களுக்கு இணையக்கல்வி வழங்கப்பட்டது. இக்காலப் பகுதியில் மாணவர்கள் கைப்பேசிப் பாவனையை வழக்கமாக்கிக் கொண்டனர். யார் விரும்பியோ விரும்பாமலோ மாணவர் கைகளுக்கு கைப்பேசி இலகுவாகச் சென்றடைந்து விட்டது. இச்சூழலை மாற்றி, கைப்பேசியை மாணவர்களிடமிருந்து பிரித்து, மாணவர்களை மீண்டும் பாடசாலைக் கல்வியுடன் இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் துறையினருக்குண்டு. இது அவ்வளவு இலகுவான காரியமல்ல. மாணவர்களின் உளவியலோடு தொடர்புபட்டது. இதனைபக்குவமாக கையாள வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

மாணவர்களை கைப்பேசிப் பாவனையிலிருந்து உடனடியாக விடுபடச் செய்வதில் பெற்றோர் அதிக சவால்களை எதிர்கொள்ள நேரிடும். இவ்விடயத்தில் குடும்ப வன்முறை ஏற்படவும் வாய்ப்புள்ளதாக உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆகையால், மாணவர்களின் மனநிலைமறிந்து, பக்குவமாக இவ்விடயம் இலாவகமாக கையாளப்பட வேண்டும். அவர்கள் இவ்விடயத்தில் தெளிவாக அறிவுறுத்தப்படல்

வேண்டும். கொவிட் 19 வைரஸ் பரவல் முடக்கக் காலத்தில் இணையக் கல்வி பெறுவதற்காக கைப்பேசி அவசியமானது உண்மைதான். ஆனால், தற்பொழுது கல்விச் செயற்பாடுகளுக்காக பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டுள்ளதனால், கைப்பேசிப் பாவனை அவசியமற்றது என்பது தொடர்பிலும், கைப்பேசிப் பாவனையின் நன்மைகளை விடவும் அதிகரித்த பிரதிகூலங்கள், சமூகச் சீர்கேடுகள் தொடர்பிலும் மாணவர்கள் அறிவு ரீதியாகத் தெளிவுபடுத்தப்படல் வேண்டும். அத்துடன், மாணவர்கள் நீண்ட விடுமுறைக்குப் பின்னர் பாடசாலைக்கு சமுகமளிக்க ஆரம்பித்துள்ளனர். இம்மாணவர்கள் இழந்த கல்வியை மீளப் பெற்றுக் கொள்வதற்கு, போதுமானளவு கால அவகாசம் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. மாணவர் கல்வி பெறும் காலம், யாரும் எதிர்பார்த்திராத வகையில் நீடிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது. இச்சந்தர்ப்பத்தினை கல்வித்துறை அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே பெற்றோரின் அவாவாகும். மாணவர் கல்வியை உதாசீனம் செய்து விட்டு, அவர்களின் பரீட்சைப் பெறுபேறு கிடைத்தவுடன் அதனை கொவிட் 19 முடக்கம் காரணம் என நியாயப் படுத்துவதற்கு பலர் சமூகத்தில் தயார் நிலையிலுள்ளனர். இவ்வாறான விரும்பத்தகாத நிகழ்வுகள், அருவருக்கத்தக்க செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளியாது,

மாணவர்களுக்கு திட்டமிடப்பட்ட அடிப்படையில் சிறப்பான வகுப்பறைக் கல்வி வழங்கப்படல் வேண்டும். இதனை கல்வித் துறை மேற்பார்வையாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

ஐ.எல்.எம்.றிசான் ...✍
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அமெரிக்காவிலிருந்து திரும்பிய கமலுக்கு கொரோனா தொற்று!

நடிகர் கமல்ஹாசன் தற்போது லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'விக்ரம்' படத்தில் நடித்து வருகிறார். அமெரிக்காவில் ஆடை வடிவமைப்பு குறித்த புதிய வியாபாரத்தைத் தொடங்கும் பொருட்டு அவர் அங்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவில் இருந்து திரும்பிய அவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. விக்ரம் படத்தின் படப்பிடிப்பு விரைவில் நிறைவடையவுள்ள நிலையில், அடுத்த ஆண்டு ஏப்ரலில் கோடைக் கொண்டாட்டமாக படத்தை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே அமெரிக்காவில் புதிதாக ஆடை வடிவமைப்பு வணிகத்தில் ஈடுபட உள்ளதாக சமீபத்தில் தனது ட்விட்டர் பக்கத்தின் மூலம் தெரிவித்திருந்தார். இதற்கென அமெரிக்காவின் சிகாகோவிற்கு அவர் சென்றிருந்தார்.

தற்போது இந்தியா திரும்பியுள்ள அவருக்கு இலேசான இருமல் இருந்ததாகவும் அதையொட்டி பரிசோதனை செய்ததில் தனக்கு கொரோனா பாதிப்பு உள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகவும் கமல் தெரிவித்துள்ளார். மருத்துவமனையில் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளதாகவும் அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இன்னமும் நோய்ப்பரவல் நீங்கவில்லை என்பதை உணர்ந்து அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் கமல் கேட்டுக் கொண்டுள்ளார். அவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது அவருடைய ரசிகர்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் விக்ரம் படத்தின் சூட்டிங் பாதிக்குமா என்றும் கேள்வி எழுந்துள்ளது.

இதனிடையே கமல் நடிப்பில் வெளியான 'பாபநாசம்' படம் சிறப்பான வெற்றியை பெற்ற நிலையில், அதன் இரண்டாவது பாகத்தில் கமல் எப்போது நடிப்பார் என்றும் ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர். மலையாளம் மற்றும் தெலுங்கில் இரண்டாவது பாகம் உருவாகியுள்ள நிலையில், தமிழிலும் இதுகுறித்த அறிவிப்பை எதிர்பார்க்கலாம்.

வரவு செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு விவாதம்;

மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது

ஆதரவு 153; எதிராக 60 மட்டுமே பதிவு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

2022ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளினால் நேற்று மாலை நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஆளும் தரப்புடன் பொதுஜன பெரமுன எம்.பிக்களும் கூட்டணி கட்சி எம்.பிக்களும் வாக்களித்தார்கள்.

எதிரணியில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் வாக்களித்தனர். இலத்திரனியல் வாக்களிப்பு முறையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

2022ஆம் நிதியாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்வினால் கடந்த 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது சுதந்திர இலங்கையின் 76வது வரவு செலவுத்திட்டம் என்பதோடு பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத்திட்டமாகும். இது தொடர்பான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி நிதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

நவம்பர் 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் நவம்பர் 22ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏழு நாட்கள் வரவுசெலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது. ஐ.ம.ச பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா விவாதத்தை ஆரம்பித்து வைத்ததோடு நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ விவாதத்தை முடித்து வைத்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நேற்று பி.ப 05.00 மணிக்கு இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.

மு.கா, மக்கள் காங்கிரஸ், ம.ம.மு எம்.பிக்கள் ஆறுபேர் ஆதரவாக வாக்களிப்பு

இதன் போது முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிஸ் பாராளுமன்ற எம்.பிக்களான எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.முஷர்ரப், நஸீர் அஹமட், இஷாக் ரஹ்மான், ஏ.எஸ்.எம்.ரஹீம் ஆகியோர் ஆளும் தரப்புடன் இணைந்து பட்ஜட்டுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி டயனா கமகே, அரவிந்த குமார் ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தார்கள். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் எதிராக வாக்களித்தார்கள். அத்தோடு கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகியோரும் எதிராக வாக்களித்தார்கள். இதே வேளை 11 எம்.பிக்கள் வாக்களிப்பின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. மனோ கணேசன், சீவி விக்னேஷ்வரன் , எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் ராசமாணிக்கம், எம்.எஸ்.தௌபீக் ஆகியோரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இன்று நவம்பர் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் குழு நிலை விவாதம் ஆரம்பமாவதோடு சனிக்கிழமை உள்ளடங்கலாக டிசம்பர் 10ஆம் திகதி வரை 16 நாட்கள் விவாதம் நடத்தப்படும். டிசம்பர் 10ஆம் திகதி பிற்பகல் 5.00 மணிக்கு மூன்றாவது வாசிப்பு மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

வரவு செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் சுகாதார பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு அமைய பாராளுமன்ற அமர்வுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதோடு விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் பொதுமக்கள் கலரி மூடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பணியாளர்கள் நேற்று...

அவர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்காரணமான புறக்கோட்டை சந்தையில் பொருட்களை இறக்கும் மற்றும் ஏற்றும் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

உணவு பொதி, தேநீர்...

அமுலாகும் வகையில், உணவு பொதியொன்றின் விலையை 20 ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேநீர் கோப்பையொன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்படுவதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

புலிகளின் அதிசக்தி வாய்ந்த...

இந்தக் கிளைமோர் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாணம் 51ஆவது படைத்தளம் சிறப்புப் பிரிவினரினால் கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பான "கொல்பவன் வெல்வான்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாணம் 51ஆவது படைத்தளம் சிறப்புப் பிரிவினரினால் கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டுள்ளது. மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பான "கொல்பவன் வெல்வான்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

மூத்த பத்திரிகையாளர் கானமயில்நாதன்...

உதயன் பத்திரிகை 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட முதல் தனது வாழ்வின் இறுதிக் காலம் வரையிலான 36 வருடங்கள் பிரதம ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.

நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப்பணியாற்றிய மிக சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களுக்குள் கானமயில்நாதனும் ஒருவர்.

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் விழாவில், விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை ஊடகத்துறையில் தேசியம் சார்ந்து நெருக்கடியான சூழலில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமைக்காக கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி யாழ். ஊடக அமையத்தினால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தன் மீதான குற்றச்சாட்டை...

நிராகரிப்பதாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் தெரிவித்தார்.இந்த வழக்கு நீதிபதிகள் நாமல் பலல்லே, ஆதித்ய படபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஷதீன் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று (22) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை பிரதிவாதி முன்னிலையில் வாசிக்கப்பட்டது.

இதன்போது, குறித்த குற்றச்சாட்டுக்களை தான் நிராகரிப்பதாக பூஜித் ஜயசுந்தர நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து வழக்கின் ஆரம்ப சமர்ப்பணங்களை முன்வைக்க முறைப்பாடு சார்பில் முன்னிலையான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீப பீரிஸ், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு சஹ்ரான் ஹசீமின் தலைமைத்துவத்திலான தேசிய தவ்ஹீத் ஜமாத் என்ற தீவிரவாத அமைப்பினால் நாட்டில் 08 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களை அடிப்படையாக கொண்டு சட்டமா அதிபரினால் பிரதிவாதிக்கு எதிராக குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தாக்குதல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தகவல் கிடைக்கப்பெற்றிருந்த போதும் இலங்கைக் குடியரசின் பொலிஸ் மா அதிபராகச் செயற்பட்டு அதனைத் தடுக்கும் கடமையை அலட்சியமாகப் புறக்கணித்ததன் மூலம் இலங்கை தண்டனைச் சட்டத்தின் 102ஆவது பிரிவின் கீழ் குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதிவாதிக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்காக 2019 ஆம் ஆண்டும் ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் முறையான சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றில் தெரிவித்தார். அதன்படி, பிரதிவாதிக்கு எதிராக 855 குற்றச்சாட்டுக்களும், 1,215 சாட்சிகள் முன்னிலையாகியுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மேலும் தெரிவித்தார். பின்னர் மேலதிக விசாரணைக்காக வழக்கு இன்றைய தினம் (23) வரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

நாட்டில் உணவுக்கு...

அவர் சார்பில் நான் பதவி விலகுவேன் என்றும் கூறினார்.

வரவு செலவுத்திட்ட 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர்ச்செய்கை கொள்கையை முன்னெடுக்க நாம் கைகோர்த்துள்ளோம். விவசாய அமைச்சரும் ராஜாங்க அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் வெவ்வேறு கருத்துக் கூறுவதாக எதிரணி சொல்கிறது. ஆனால் நாம் ஜனாதிபதியின் கொள்கையுடனே இருக்கிறோம். நெனோ நைட்ரஜன் திரவப் பசளை இறக்குமதிக் கம்பனியுடன் பேசி அதன் விலைகளை குறைத்தோம். இதனால் பெருமளவு நிதியை சேமிக்க முடிந்தது.

இதில் மோசடி இருந்தால் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் பெறலாம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசில் மோசடிக்கு இடமில்லை. கடந்த காலத்தில் இரசாய பசளை இறக்குமதி செய்வதில் மோசடி செய்த நபர்களை வீட்டுக்கு அனுப்பினோம். உங்கள் ஆட்சியிருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புள்ள எவரும் பிடிபட்டிருக்கமாட்டார்கள். எமது ஆட்சியில் சூத்திரதாரிகளுக்கு எதிராக வழங்கு தொடரப்பட்டுள்ளது. புலனாய்வு பிரிவு எவ்வாறு இருந்தது பாதுகாப்பு நிலைமை எவ்வாறு இருந்தது என்று அனைவருக்கும் தெரியாது.

பெருந்தோட்ட அமைச்சரின் மகள் ஒரு கிலோ தேயிலை கொழுந்தில் இருந்து 20 ரூபா பெற்றுள்ளார்.

அவரது மனைவிக்கு காணி வழங்கப்பட்டுள்ளது. கபீர் ஹாசிமின் மருமகனுக்கு ஹந்தானை மாளிகையை இலவசமாக கொடுத்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 5 சதமாவது மோசடி செய்திருந்தால் நிரூபியுங்கள்.

அவர் சார்பில் நான் பதவி விலகுவேன். அரசில் யாராவாவது மோசடி செய்திருந்தால் பாராளுமன்ற குழுக்களுக்கு அழைத்து நிரூபியுங்கள். கடந்த ஆட்சியில் தரமற்ற இரசாயன பசளை தருவித்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.நெல் பயிர்ச்செய்கைக்காக இரசாயனப் பசளை இறக்குமதி செய்ய அனுமதிவ வழங்கப்படவில்லை. மரக்கறி பயிர்ச்செய்கைக்காக விசேட பசளை வகையொன்றைற தருவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. 2022 ஆம் ஆண்டு வரை தேவையான அரிசி உள்ளது. உணவுப் பற்றாக்குறை தொடர்பில் வீண் அச்சம் ஏற்படுத்த முயன்றாலும் அவ்வாறு பற்றாக்குறையும் ஏற்படாது என அமைச்சர் தெரிவித்தார்.

முதலாளிமார் சம்மேளனமும்...

தொழிலாளர்களின் வேலைப்பழுவைக் குறைக்குமாறு இதன் போது வலியுறுத்தப்பட்டுள்ளதோடு, தொழில் பிணக்குகள் காணப்படுகின்ற இடங்களை இனங்கண்டு அவை தொடர்பில் எழுத்து மூலம் முதலாளிமார் சம்மேளனத்திற்கு அறிவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பு முதலாளிமார் சம்மேளனத்தின் செயலாளர் மங்கலயாபா தலைமையில் இடம்பெற்றது.

இதில் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் தொழிற்சங்களான இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் , இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் கூட்டு தொழிற்சங்க அமைப்பு என்பன பங்குபற்றின. அத்தோடு கம்பனிகள் சார்பில் லலித் ஒபேசேகர மற்றும் ரொஷான் ராஜதுறை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் குறிப்பிடுகையில்,

பெருந்தோட்ட கம்பனிகளையும் தொழிற்சங்கங்களையும் சந்திக்குமாறு முதலாளிமார் சம்மேளனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கம்பனிகள், தொழிற்சங்கங்களுக்கிடையிலான சந்திப்பு முதலாளிமார் சம்மேளனத்தில் இடம்பெற்றது.

இதன் போது அண்மைக்காலமாக பெருந்தோட்டங்களில் நிலவுகின்ற அசாதாரணமான நிலைமைகளை முழுமையாக தெளிவாக நாம் எடுத்துரைத்தோம். கூட்டு ஒப்பந்தம் இல்லாமலாக்கப்பட்டு சம்பள நிர்ணயசபை மூலமாக கிடைக்கப்பெற்ற சம்பள நிர்ணயத்தின் மூலமாக பெருந்தோட்ட மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் மற்றும் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொழில் பிணக்குகளை பொலிஸ் நிலையத்தின் ஊடாகவே தீர்க்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றமை தொடர்பிலும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது. இந்த சந்திப்பில் சம்பளம் தொடர்பான வழக்கின் தீர்ப்பினை நீதிமன்றம் வழங்கும் வரை காத்திருப்பதாகவும் , ஆனால் தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள அன்றாட பிரச்சினைகளுக்கான தீர்வு காண்பதற்கு இதன் போது இணக்கம் காணப்பட்டது.

ஆட்சி மாறினாலும் அரசின் கொள்கை...

மீதான இறுதி நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

ஒருவரை பற்றி நம்பும் போது அவர் என்ன செய்தார் என்ற கடந்த காலத்தை திரும்பிப் பார்க்க வேண்டும். 2001 முதல் சஜித் பிரேமதாஸ எம்.பியாக இருக்கிறார். மத்தள விமானநிலையம் மற்றும் துறைமுகம் என்பன அமைக்கப்பட்டிருந்தன.

கடந்த ஆட்சியில் நெல் உற்பத்தியில் தன்னிறைவு கண்டு மத்தள விமான நிலையத்தில் களஞ்சியப்படுத்தியதால் பாரிய சேதம் ஏற்பட்டது. இந்த நிலையிலே மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை.

திஸ்ஸமாகாராம பிரதேச சபையை ஜே.வி.பி வென்றது. ஆனால் தலைவர் மோசடி செய்ததால் மக்கள் மீண்டும் அந்தக் கட்சிக்கு வாக்களிக்கவில்லை.

இந்தியா பால் உற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளது. நாம் பால் கிராமம் அமைத்து பால்உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தாலும் ஆட்சி மாறும் போது திட்டங்கள் மாறுகின்றன. இந்த நிலையில் வெளிநாட்டில் இருந்து பால்மா இறக்குமதி செய்யப்படுகிறது.

குறைகள், குற்றச்செயல்களுக்கு தான் ஊடகங்களில் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஆட்சி மாறும் போதும் திட்டங்கள் மாறுகின்றன. நாட்டை கட்டியெழுப்ப ஊடகங்களும் ஒத்துழைக்க வேண்டும்.

வெளிநாட்டு ஆடைகள், தொழில்நுட்ப பொருட்கள் என்பவற்றின் மீது ஆசைப்படுகிறோம். உள்நாட்டு பொருட்களுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை.

சேதனப் பசளை தான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு என்று கூறவில்லை. ஊர்களிலே சேதனப் பசளை தயாரிக்கலாம். சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியிலும் இதற்கான முன்னெடுப்புகள் இடம்பெற்றன. வைக்கோளை எரிப்பது ஒருகாலத்தில் தடை செய்யப்பட்டது.

விமர்சிக்கும் எவரும் மாற்று யோசனை முன்வைப்பதில்லை. சகலரதும் யோசனைகளை பொற்று சிறந்த கொள்கை தாயரிக்க வேண்டும்.

இந்தியாவில் அப்துல்கலாமின் காலத்தில் கொள்கை தயாரிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. ஆட்சி மாறிய போதும் 2020 வரை அந்த கொள்கை செயற்படுத்தப்பட்டது.

மீண்டும் 30 வருடங்களுக்கு கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. ஏன் எம்மால் அவ்வாறு செய்ய முடியாது.

நெருக்கடியான நிலைமையில் அனைவரும் இணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம்.மக்களை தூண்டிவிடாது நாட்டை முன்னேற்ற ஒன்றிணைவோம் என்றார்.

அருட்தந்தையிடம் 5 மணிநேர...

வழங்கியபின் அங்கிருந்து வெளியேறினார்.இதன்போது, இவரிடம் 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினிக்கு தெரிந்த தகவல்களை வழங்குவதற்காக இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.கடந்த 16 ஆம் திகதி சிஐடியில் ஆஜரான அவரிடம் 8 மணி நேர வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விருந்துபசார நிகழ்வினை...

கொக்கெய்ன், ஐஸ், கேரளா கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளது.கைதான சந்தேக நபர்கள் அம்பாறை, தல்பே, மெதகம, மாத்தறை, தனமல்வில, திஸ்ஸமகாராமை மற்றும் கோனபீனுவலை பகுதிகளைச் சேர்ந்த 30 முதல் 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் ஆவர்.சந்தேக நபர்கள் மாத்தறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நா. வின் உயரதிகாரி...

இலங்கை வரும் காலித் கியாரி, சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள், அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், மதத் தலைவர்கள் மற்றும் இராஜதந்திர சமூகத்தின் பிரதிநிதிகளை சந்திப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டு செப்டம்பரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஐ.நாபொதுச்செயலாளர்அன்டோனியோ குட்டெரெஸ் சந்தித்ததைத் தொடர்ந்து இந்த விஜயம் அமையவுள்ளது. 2019 / 28 மே அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், தியூனிசியாவைச் சேர்ந்த மொஹமட் காலித் கியாரியை மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் ஆகிய நாடுகளுக்கான அரசியல் மற்றும் அமைதியை கட்டியெழுப்பும் விவகாரங்கள் மற்றும் அமைதி நடவடிக்கைகளுக்கான உதவிப் பொதுச் செயலாளராக நியமித்தார்.

கனடாவில் இரு TNA எம்.பிக்கள்...

சென்றிருந்த போது புலம்பெயர் சமூகத்தின் அவர்களை நடத்திய விதம் கவலையளிக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.ஜக்கியம் மற்றும் பேச்சு வார்த்தை ஆகிய வழிகளின் மூலமே நாடு முன்னோக்கி நகர முடியும் என்பதனை புலம்பெயர் சமூகங்கள் புரிந்து கொள்ளும் என நம்புவதாகத் தெரிவித்துள்ள அவர், பிரிவிணையின் ஊடாக எதனையும் அடைய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து தரப்பினரும் பேச்சு வார்த்தை மேசைக்கு திரும்பி ஆரோக்கியமான பேச்சு வார்த்தைகளை நடாத்துவதே சிறந்தது என்பது தமது நிலைப்பாடாகும் என அமைச்சர் நாமல் ராஜபக்ச டுவிட்டர் பதிவு ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் மீண்டும்...

விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார். நேற்று (22) முதல் அமுலாகும் வகையில் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 தாக்குதலைத் தொடர்ந்து, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆயுதம் தாங்கிய படையினரை அமைதியை பேண அழைப்பு விடுத்து விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார். ஒரு மாத காலத்துக்கு அமுலாகும் வகையில் ஒவ்வொரு மாதமும் 22 ஆம் திகதி இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 15 இலட்சம் பைஸர்...

ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நேற்று அதிகாலை கொண்டு வரப்பட்டுள்ளது. துபாயில் இருந்து எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈ.கே 648 என்ற விமானத்தில் அவை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள எமது செய்தியாளர் தெரிவித்தார்.அத்துடன் குறித்த தடுப்பூசிகள் தற்போது இலங்கை மருந்தாக்கல் கூட்டுதாபனத்தினால் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

கொன்சியூலர் பிரிவில்... (03ஆம் பக்கத் தொடர்)

சான்றிதழ்கள் / ஆவணங்களின் சான்றளிப்புக்கான சாதாரண சேவைகள் வழங்கப்படும் என்றும், கணினிப் பராமரிப்பு சார்ந்த பணிகள் நிறைவடைந்தவுடன், புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 011 2338812 அல்லது dgcons@mfa.gov.lk மூலம் கொன்சியூலர் விவகாரப் பிரிவை தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

திட்ட இறுதி நாள் விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

எமக்குள்ள சவால்களை நான் முன் வைத்தேன்.அதனை தான் எதிரணியும் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் தெரிவித்தன. ஆளும் தரப்பும் எதிர்த் தரப்பும் முன்வைத்த சகல யோசனைகளும் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து தேவையான முடிவுகளை எடுப்போம்.

அரச சேவை சம்பள முரண்பாட்டை தீர்க்க புதிய சம்பள முறையொன்றை தயாரிக்க இருக்கிறோம். சம்பள நிர்ணய ஆணைக்குழுவுக்கு யோசனை முன்வைத்து தேவையான மாற்றம் செய்வோம். சுகாதார சேவை சம்பள முரண்பாடு தொடர்பில் ஜனாதிபதி கருத்து தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு செலாவணி பிரச்சினைக்கு தீர்வு யோசனை எதுவும் எதிர்த் தரப்பால் முன்வைக்கப்படவில்லை. அந்நியச் செலாவணி, வெளிநாட்டு முதலீடு, தேவையாற்ற சட்டங்களை இலகுபடுத்த இருக்கிறோம். இதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்றை நியமிப்பார் என எதிர்பார்க்கிறோம்.

மழை குறைந்ததும் எதிர்வரும் மாதங்களில் மரக்கறி, கருவாடு என்பன சந்தைக்கு வரும்.

கொவிட் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பினர் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதில் உள்ளடங்காக சகல தரப்பினருக்கும் நிவாரணம் வழங்க பின்நிற்க மாட்டோம்.

தமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை நாம் கிராமத்திற்கு வழங்கியுள்ளோம்.

வடக்கு கிழக்கு பிரதேச எம்.பிகள் தமது பிரதேசங்களுக்கு விசேட திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை என்ற தெரிவித்தனர். முழுநாட்டையும் ஒன்றாக கருதி வடக்கு கிழக்கு உட்பட 14021 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 4917 உள்ளூராட்சி பிரிவுகளுக்கும் கட்சி இன மத குல பேதமின்றி ஒரே அளவான நிதி வழங்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய வடக்கு பிரதேசங்களுக்கு விசேட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுத்ததாலே அப்பகுதிகளை ஏனைய பகுதிகளுக்கு சமமாக அபிவிருத்தி செய்துள்ளோம்.

மூடுவதற்கு மேற்கொள்ளப்... (03ஆம் பக்கத் தொடர்)

இல்லை. அதுதொடர்பில் நான் ஏற்கனவே உறுதியளித்திருக்கின்றேன்.

அதேபோன்று யுகதனவிய மின் உற்பத்தி நிலையம் எனது அமைச்சுக்கு கீழ் வரும் நிறுவனம் ஒன்றல்ல. அதற்கு வேறு அமைச்சு இருக்கின்றது. என்றாலும் அமைச்சரவை அமைச்சர் என்றவகையில் அதுதொடர்பில் எனது நிலைப்பாட்டை நான் அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தி யுள்ளேன். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மூவர் இணைந்து யுகதனவிய ஒப்பந்தம் தொடர்பாக தனியாக சட்டத்தரணி ஒருவரை நியமித்திருக்கின்றோம். அது தொடர்பில் எம்மிடம் கேள்வி எழுப்பலாம். ஏனெனில் அமைச்சரவை தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செல்வது சட்டமா அதிபராகும். எனினும் யுகதனவிய விடயத்தில் எமக்கு மாற்றுக்கருத்து ஏற்பட்டுள்ளதால் நாங்கள் இந்த தீர்மானத்துக்கு வந்துள்ளோம். அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை பாதுகாப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

உர இறக்குமதி... (03ஆம் பக்கத் தொடர்)

உரங்களோ அல்லது விவசாய இரசாயனங்களோ யாருக்கும் வழங்கப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

மாணவர், இளைஞர்... (03ஆம் பக்கத் தொடர்)

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கால்விரல்களில் இரத்தக் கட்டிகள் உருவாகின்றமை தெரியவந்துள்ளது. மேற்கத்தேய நாடுகளிலும் இவ்வாறான நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், இலங்கையிலும் சுமார் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக விசேட வைத்தியர் வைத்தியர் வருண குணதிலக தெரிவித்துள்ளார்.

நினைவேந்தல் உரிமையை... (03ஆம் பக்கத் தொடர்)

உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களை இன ரீதியிலோ அல்லது மத ரீதியிலோ பிரித்துப் பார்க்கக்கூடாது. அனைவரும் மனிதர்கள்.

உயிரிழந்தவர்களின் வலி அவர்களின் உறவுகளுக்குத்தான் தெரியும். அதில் எவரும் அரசியல் நடத்தக்கூடாது.

சுபீட்சத்தின் நோக்கு திட்டம்

வவுனியா காத்தார் சின்னக்குளம் கிராம மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கி வைப்பு

வவுனியா விசேட நிருபர்

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் வவுனியா, காத்தார் சின்னக்குளம் கிராம மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட காத்தார் சின்னக்குளம் கிராமத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தமது காணிக்கான உறுதிப்பத்திரங்களின்றி கடந்த 35 வருடங்களுக்கு மேலாக பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் காணியற்ற மக்களுக்கு காணிக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கல் திட்டத்தின் அடிப்படையில் குறித்த கிராமத்தில் காணி உறுதிப் பத்திரங்கள் இன்றி வாழ்ந்துவந்த 26 குடும்பங்களுக்கு உறுதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், குறித்த கிராமத்தில் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் 34 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், கிராம அலுவலர் எஸ்.தர்சன், அபிவிருத்திக் குழு தலைவரின் இணைப்பாளர் கே.டினேஸ் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டு காணி உறுதிப் பத்திரங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

வவுனியா மேலதிக அரசாங்க அதிபருக்கு கொவிட் தொற்று

வவுனியா விசேட நிருபர்

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அவர் நேற்று (22) முன்னெடுத்த துரித அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவருடன் தொடர்புடையவர்களையும் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அத்துடன், மீண்டும் கொவிட் தொற்று அதிகரித்து வரும் நிலையில் பொது மக்கள் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

வீதியில் சென்றவர் திடீரென மரணம்

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி ஏ9 வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் நேற்று முன்தினம் இரவு (21) திடீரென கீழே விழுந்து மரணமடைந்துள்ளார். இந்த சம்பவம் கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக இரவு 8.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இல. 403 திருநகர் தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை ரஞ்சன் வயது (60) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். சம்பவ இடத்திற்கு வந்த மரணமடைந்தவரின் மனைவி, இதற்கு முன்னர் அவருக்கு மூன்று தடவைகள் மாரடைப்பு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சீட்டிழுக்கப்பட்ட திகதி 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4593
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,329,310.00
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 5 8 6 0 3 4 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,151,406.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 2888
திகதி : 05.09.2021
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,305,320.00
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 27 33 44 67 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 71,943,686.80

மெகா பவர் 10
சீட்டிழுப்பு இலக்கம் 941
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,572,240.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 154,086,066.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
E 04 17 49 62 77

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 623
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,204,860.00
B 38 62 67 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,399,814.00

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் : 1636
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,252,820.00
சுப்பர் இலக்கம் 02 | வெற்றி இலக்கங்கள் 03 10 35 49 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,000,000.00

21.11.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 474,790
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 20,664,550.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 | ரூ. 500,000.00 பரிசு 01
ரூ. 1,000,000.00 பரிசு 01 | ரூ. 100,000.00 பரிசு 22

• ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
• பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
• வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலையின் வருமானத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் வருமானத்தின் மூலம் நிதியிடப்பட்டது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

Inviting for water proofing works of Imaduwa L & M Booths of Southern Expressway
Contract No.: RDA/EOM&M/PRC/2021/TOLL/12

01. மேலேயுள்ள ஒப்பந்த இலக்கமான RDA/EOM&M/PRC/2021/TOLL/12 இற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக அ.நெ.செ.ந மற்றும் முகாமைப்பிரிவு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து விலைமனுக்களும் 40,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி சபை, அதிவேக நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு (தொலைபேசி: 038-2289122, தொலைநகல்: 038-2289560) பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று அலுவலக நேரங்களில் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
04. 2021.11.23 ஆம் திகதியிலிருந்து 2021.12.14 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 + 80 (VAT) ரூபாவைச் செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, (EOM&M பிரிவு) பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் பெற்றுக் கொள்ளலாம். 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் கேள்வியின் முகவர் மற்றும் சித்திகரமான விலைமனுதாரர் ஆகியோர் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
05. 2021.12.14 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, (EOM&M பிரிவு) பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
06 2022.03.15 ஆம் திகதி வரையும் விலைமனுக்களின் செல்லுபடியாகும் தன்மையிருத்தல் வேண்டும்.
07. ஒவ்வொரு விலைமனுவும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2022.04.12 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக் குழு,
பணிப்பாளர் (EOM&M பிரிவு) மே/பா,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கஹட்டகஹஹேன, வல்கம,
பண்டாரகம.

1964 ஆண்டின் 28ம் இலக்முடைய காணி எடுத்த (திருத்தம்) சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட படி காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அறிவித்தல்)

7ஆம் வாசகத்தின் கீழ் அறிவித்தல்

குறிப்பு எண் தொ/இ/அத்/117

கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற காணியை அரசிடம் எடுத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படும். மேலும் தகவலுக்காக 2251/18 இலக்கமுடைய 2021.10.25 திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தை பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டம்	:	களுத்துறை
பிரதேச செயலகம்	:	தொடனகொட
கிராமத்தின் பெயர்	:	போம்புவல
காணியின் பெயர்	:	மந்த்தியலந்த
வரைபட இலக்கம்	:	மு.பி.க. 4830
துண்டு இலக்கம்	:	01
அளவு	:	0.4091 ஹெக்டேயர்

ஷமா பி காரியவசம்
பிரதேச செயலாளர்
தொடன்கொட

முகவரி:
பிரதேச செயலகம்
தொடன்கொட
திகதி: 2021.11.17

uPVC கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மூலம் சூழலுக்கு உகந்த புத்தாக்க கண்டுபிடிப்புகளில் கவனம் செலுத்தும் Anton

70 ஆண்டுகளுக்கும் மேலாக, 100% இலங்கையர்களின் வீடுகளுக்கான தீர்வுகளின் உற்பத்தியாளரான Anton, உள்ளூர் மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான வடிவமைப்புகள், சீரான புத்தாக்க கண்டுபிடிப்புகள் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரம் மூலம் சிறந்த வீட்டுத் தீர்வுகளை வழங்குவதில் முன்னோடியாக உள்ளது.

St. Anthony's Industries Group Pvt நிறுவன பிரதான செயற்பாட்டு அதிகாரி லஹிரு ஜயசிங்க தெரிவிக்கையில், "ஒரு பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில் நாம் எப்பொழுதும் எமது வாடிக்கையாளர்களுக்கு சூழல் நட்பு வாய்ந்த கட்டடங்களை உருவாக்க உதவுகிறோம். அத்துடன், தொடர்ச்சியான புத்தாக்க கண்டுபிடிப்புகள் மற்றும் அபிவிருத்திகளில் நாம் எமது கவனத்தை செலுத்தி வருகின்றோம்." என்றார்.

Anton uPVC (Un-plasticized Polyvinyl Chloride) கதவுகள் மற்றும் ஜன்னல்கள் புத்தாக்க செயன்முறையின் முக்கிய விளைவுகளில் ஒன்றாகும்.

"இதில் uPVC தேர்ந்தெடுக்கப்படுவதன் காரணமாக, மரத்தின் நுகர்வு குறைக்கப்படுகிறது. இது காடுகளின் பாதுகாப்பிற்கு வழிவகுக்கிறது. நாம் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு 6,000MT uPVC கதவுகள் மற்றும் ஜன்னல்கள் காரணமாக, 32,000 ஹெக்டயர் காடுகள் பாதுகாக்கப்படுகின்றன. இது சூழலுக்கு சிறந்த தீர்வாக இருப்பதன் காரணமாக, மேலதிக நன்மையுடன் கட்டுமானத்திற்கான சரியான தீர்வாகவும் அமைகின்றது. அலுமினியத்துடன் ஒப்பிடும்போது, uPVC யும் வெற்றிடம் மூலமான சக்தி சேமிப்பை பேணுகின்றது. இது சக்திகளுக்கான செலவுகளை குறைப்பதன் மூலம் எமது விலைமதிப்பற்ற இயற்கை வளங்களைப் பாதுகாக்க உதவுகிறது. uPVC, புற ஊதாக்கதிர், தீ, கறையான்கள், துருப்பிடித்தல் ஆகியவற்றிலிருந்தான பாதுகாப்பையும் கொண்டுள்ளது. அத்துடன் குறைந்த பராமரிப்புடன் கூடிய ஒரு தயாரிப்பு என்பதன் காரணமாக, இது செலவைக் குறைக்கும் ஒரு நண்பனாகும்." என்றார்.

Anton uPVC தொகுதிகள் தொழில்துறையில் புதிய தரநிலை மற்றும் போக்கை அமைத்துள்ளன. தொழில்நுட்ப சிறப்பையும், அழகியல் வடிவமைப்பையும் கொண்டுள்ளதுடன், நிலையான மற்றும் ஒப்பிட முடியாத பொருத்தும் சேவைகளையும் வழங்குகிறது.



Invitation for Bids (IFB)

MANNAR PRADESHIYA SABHA, MANNAR DISTRICT

LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP) – PROJECT ID: P 163305

[1]. The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of the Local Development Support Project (LDSP). Part of this loan will be used for payments under the contract named below.

[2]. The Chairman, Local Authority Procurement Committee (LAPC), on behalf of **Mannar Pradeshiya Sabha, Kattaspaththiri, Pesalai** Mannar District now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

S. No.	Contract No.	Name of the Contract	Estimated Civil Cost (Rs.Mn)	ICTAD Minimum Grade Required	Required Bid Security		Contract period
					Bond Amount (Rs.)	Validity Period	
01	MN/MNPS/ LDSP/2021/01	Improvements to Kavayankudiyir-uppu Main Road, Stage II (590-0.1340 Km)	8.41	C7 (Roads)	85,000	06.04.2022	91.0 Days
02	MN/MNPS/ LDSP/2021/02	Construction of Pre-School at Valanarpuram	5.13	C7 (Buildings)	52,000	06.04.2022	119.0 Days
03	MN/MNPS/ LDSP/2021/03	Construction of Pre-School at Uyilankulam	3.48	C8 (Buildings)	35,000	23.03.2022	119.0 Days

[3]. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

[4]. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and should have valid CIDA registration in Highway Construction and Building Construction for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

[5]. Qualification requirements to qualify for contract award are given in Section 5 of the Schedule in the Bidding Document.

[6]. Interested bidders may obtain further information from **Chairman, Mannar Pradeshiya Sabha, Kattaspaththiri, Pesalai, Mannar.** [Telephone No: **023 2050001,** Fax No: **023 2050002**] and inspect the bidding documents at the address : **Mannar Pradeshiya Sabha, Kattaspaththiri, Pesalai, Mannar. from 09.00 Hrs to 15.00 Hrs.**

[7]. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Mannar Pradeshiya Sabha, Kattaspaththiri, Pesalai, Mannar** from **23.11.2021 until 21.12.2021 from 09.00 Hrs to 15.00 Hrs.** upon payment of a non-refundable fee of **Rupees Three Thousand (Rs. 3,000.00) for each work.** The method of payment will be **by cash.**

[8]. Bids shall be delivered in duplicate to the address at **Chairman, Mannar Pradeshiya Sabha, Kattaspaththiri, Pesalai, Mannar** *on* **or before 22nd December 2021 at 10.30 Hrs.** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

[9]. Bids shall be valid up to :

1. MN/MNPS/ LDSP/2021/01 - **09th March 2022**
2. MN/MNPS/ LDSP/2021/02 - **09th March 2022**
3. MN/MNPS/ LDSP/2021/03 - **23rd February 2022**

[10]. All bids shall be accompanied by a *"Bid-Security*, as mentioned in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same as in Schedule Clause 16.

[11]. The pre-bid meeting will be held on **08.12.2021** at **10.30 Hrs** at the **Mannar Pradeshiya Sabha, Kattaspaththiri, Pesalai, Mannar.**

The address (es) referred to above is (are):

Chairman,
Local Authority Procurement Committee (LAPC).

Mannar Pradeshiya Sabha,
Kattaspaththiri, Pesalai.
Mannar.

[Fax No: 023 2050001]

டென்டர் அறிவித்தல்

கொட்டபொல பிரதேச சபை

கொட்டபொல பிரதேச சபையினால் கீழே அட்டவணையில் குறித்த கொட்டபொல பிரதேச சபைக்குரிய சொத்துக்களை 2022 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிவரை குத்தகை கட்டணத்தின் அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்காக டென்டர் கோரப்படவுள்ளன.

02. விதிக்கப்பட்டுள்ள டென்டர் விண்ணப்பக் கட்டணம் மற்றும் டென்டர் பிணைப்பணம் ஆகியவற்றை கொட்டபொல பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தி அடையாளத்தை உறுதி செய்து பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப்பத்திரத்தின் மூலம் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். அடையாளத்தை உருதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டை செல்லுபடியாகும் சாரதி உத்தரவுப் பத்திரத்தை முன்வைக்க முடியும். விண்ணப்பப்பத்திரம் 2021.11.24 ஆம் திகதி தொடக்கம் 2021.12.03 ஆம் திகதி பி.ப.2.00 மணிவரை மாத்திரம் வழங்கப்படும்.

03. டென்டர் விண்ணப்பப் படிவங்களை 2021.12.06 ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அதே தினத்தில் மு.ப. 10.30. மணிக்கு தெனியாயவில் அமைந்துள்ள கொட்டபொல பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திலிருந்து டென்டர் படிவங்கள் திறக்கப்படும்.

04. ஏற்றுக்கொள்ளப்படும் டென்டர், நிராகரிக்கப்படும் டென்டர் தொடர்பான இறுதித் தீர்ப்பு டென்டர் குழுவின் தலைவரைச் சாரும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்திற்குள் கொட்டபொல பிரதேச சபை அலுவலகத்தில் விசாரித்து அறிந்து கொள்ள முடியும்.

05. நிராகரிக்கப்பட்ட அட்டவணையில் பெயர் உள்ளவர்கள் மற்றும் அடையாளத்தை உறுதி செய்ய முடியாதவர்களுக்கும் டென்டர் ஆவணங்கள் வழங்கப்படுவதில்லை.

06. டென்டர் ஆவணங்கள் வழங்கும்போது அத்துடன் பெற்றுத் தரப்படும் டென்டர் நிபந்தனைகளுக்கு கீழ்படிதல் வேண்டும்.

தொடர் இலக்கம்	சொத்துக்களின் பெயர்	2022 வருடத்தில் டென்டர் பெறுமதி	டென்டர் பிணைப் பணம் ரூபா சதம்	டெண்டர் ஆவணக் கட்டணம்
01	தெனியாய பொலிஸ் நிலையத்தின் முன் 01ஆம் இலக்கம் கொண்ட மீன் பலகை	மீன் விற்பனை செய்யப்படும் நாளைக்கு ரூபா 2500.00	25,000.00	3000.00
02	தெனியாய பொலிஸ் நிலையத்தின் முன் 02ஆம் இலக்கம் கொண்ட மீன் பலகை	மீன் விற்பனை செய்யப்படும் நாளைக்கு ரூபா 2500.00	25,000.00	3000.00
03	கெட்டபொல தேசிய பாடசாலைக்கு முன் உள்ள மீன் பலகை	75,000.00	25,000.00	3000.00
04	தெனியாய பஸ் தரிப்பு நிலையத்தின் பொது மலசல கூடம்	80,000.00	5,000.00	1500.00
05	வரல்ல மையவாடி பூமியின் தென்னை விளைச்சளை குத்தகைக்கு விடல்	20,500.00	2,500.00	1500.00
06	தெனியாய ஞாயிற்றுக்கிழமை கிழமைச் சந்தை	300,000.00	10,000.00	1500.00
07	வரல்ல வெள்ளிக் கிழமை கிழமைச் சந்தை	50,000.00	5,000.00	1500.00

ஏ.பீ.தயாநந்த,
தலைவர்,
கொட்டபொல பிரதேச சபை,
திகதி 2021.11.02
கொட்டபொல பிரதேச சபை தெனியாய,

பாதுகாப்பு அமைச்சு

விலைமனுக்கோரல்

இராஜாங்க உளவுத்துறை சேவைக்கான 450 KVA டீசல் மின்பிறப்பாக்கியினை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

1. பாதுகாப்பு அமைச்சு சார்பாக அமைச்சரவையின் கொள்முதல் குழுவின் தலைவரினால், பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே **இராஜாங்க உளவுத்துறை சேவைக்கான 450 KVA டீசல் மின்பிறப்பாக்கியினை வழங்குதல், நிறுவுதல் மற்றும் இயக்குவதற்கு** தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. **LKR.13 மில்லியன்** (VAT தவிர) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது

2. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி விதிமுறைக்கமைய இடம்பெறும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர் பிரதான ஒப்பந்ததாரருடன் இணைந்து பணியாற்ற வேண்டும் மற்றும் வழங்கப்பட்ட பொருத்துதல்களை சரிசெய்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் மற்றும் முறைகள் குறித்து அவருக்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

4. ஒப்பந்த விருதுக்கு தகுதியினை பெற, வெற்றிகரமான மனுதாரர் பெயர் குற்றப்பட்டியலில் சேர்க்கப்படாதிருத்தல் வேண்டும். மேலும் பின்வரும் கோரிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும்

5.1 முக்கிய பணியாளரின் (நிர்வாகி) தகுதிகள் மற்றும் அனுபவம் ஜெனரேட்டர்களை நிறுவுவதில் உள்ள பிரத்யேக அறிவு மற்றும் அவற்றின் தயாரிப்புகள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் தேவையான அனைத்து நேரங்களிலும் ஊழியர்/ஒப்பந்ததாரருக்கு ஆலோசனை வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் 3 nr. ஐ சமர்ப்பிக்க வேண்டும். அதே திட்டத்தில் அல்லது இதே போன்ற பிற திட்டத்தில் LKR 10 மில்லியனுக்கும் குறையாது கடந்த மூன்று ஆண்டுகளில் (2018, 2019, 2020) மேற்கூறிப்பிடப்பட்டவற்றை ஏற்றுக்கொள்ளும் வகையில் ஆலோசகர் அல்லது ஊழியர்கள் வழங்கிய நிறைவுச் சான்றிதழினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.2 தொடர்ந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் மின்பிறபாக்கிகளை வழங்குதல் அல்லது வழங்குதல், நிறுவுதல் மற்றும் இயக்குதல் தொடர்பான வியாபாரத்தினை பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாக வைத்திருப்பது.

6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் லெப்டினன்ட் கேர்னல் I.P. ஹெட்டியாராச்சி அவர்களிடமிருந்து (தொலைபேசி 0112430860) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அமைச்சின் கொள்முதல் பிரிவில் **2021.11.23** ஆம் திகதி முதல் **2021.12.15** ஆம் திகதி வரை **0900 மணியிலிருந்து 1600 மணி** வரையான காலப்பகுதியினுள் மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்துக்கொள்ள முடியும்

7. மனுதாரர்கள் **2021.11.23** ஆம் திகதி முதல் **2021.12.15** ஆம் திகதி **0900 மணியிலிருந்து 1500 மணி** வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை மீள் செலுத்தப்படாத **ரூ.4,500.00** கட்டணத்தை **பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, தலைமை நிதி அதிகாரியிடம் (I)** சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் செலுத்தும் முறை பணமாக செலுத்தப்பட வேண்டும். அனைத்து மனுக்களும் மனுக்கோரல் முடிந்த நாளிலிருந்து **எழுபத்தேழு (77) நாட்களுக்கு** செல்லுபடியாகும்.

8. **2021.12.16** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர், **தலைமை நிதி அதிகாரியிடம் (I) அலுவலகம், தரை தளம், பாதுகாப்பு அமைச்சு பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே** என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் உடனடியாக மனுதாரர்கள் / பங்கேற்க விரும்பும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்

9. அனைத்து மனுக்களும் மனு பாதுகாப்பு கட்டணமாக **LKR 135,000.00** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   i. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட
   ii. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பெயரில்.
   iii. மேலே குறிப்பிட்டுள்ள தொகையில்.
   iv. பிரிவு 08 இல் சேர்க்கப்பட்டுள்ள மனு ஆவணத்தில் நிபந்தனையற்ற கோரிக்கைப் பத்திரம் மற்றும் **2021.12.16** ஆம் திகதியிலிருந்து **2022.03.16** ஆம் திகதி வரை **91 நாட்களுக்கு** செல்லுபடியாகும்.

10. மனுக்கள் திறப்பதற்கு குறைந்தது மூன்று (03) அலுவலக நாட்களுக்கு முன்னர் பங்கேற்கும் நபரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் / கடவுச்சீட்டு இலக்கம் என்பன மனுதாரரினால் **தலைமை நிதி அதிகாரி I, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே** எனும் முகவரியில் எழுத்துப்பூர்வமாக தெரியப்படுத்த வேண்டும்.

பதவி	:	தலைவர், அமைச்சின் கொள்முதல் குழு
விலாசம்	:	பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை
தொலைபேசி	:	0112390719
தொலைநகல்	:	0112390720
மின்னஞ்சல்	:	procurement@defence.lk

இலங்கை வங்கி

விலை கோரல் (IFB)

அநுராதபுர நகரத்தில் உள்ள இலங்கை வங்கிக்கான முன்மொழியப்பட்ட திருமணமாகாதவர்களின் உத்தியோகபூர்வ விடுதியைத் திருத்துதல்

கேள்வி இல. BOC/PROP/P/2021/229

1. இலக்கம் 01, "BOC சதுக்கம்" இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ள இலங்கை வங்கி சார்பாக இலங்கை வங்கியின் நிறைவேற்று சேகரிப்புக் குழுவின் தலைவர் கீழே குறிப்பிட்டவாறு அநுராதபுர நகரத்தில் உள்ள இலங்கை வங்கிக்கான திருமணமாகாதவர்களின் உத்தியோகபூர்வ விடுதியை ரூபா. 28 மில்லியன் (VAT இன்றி) செலவில் திருத்துவதற்கு தகுதியும் தகைமையும் வாய்ந்த நபர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட ஏலவிலைகள் கோரப்படுகின்றன.

இத்திட்டத்தில் உள்ளடங்கும் வேலைகளாவன:

இரண்டு தளங்களிலும் உள்ள 24 உறங்கும் அறைகள் மற்றும் விருந்தினர் அறைகளில் தரையோடுகள் பதித்தல், புதிய கதவுகளைப் பொருத்துதல், குளியலறைகளைத் திருத்துதல், மேற்றளத்தில் உள்ள பழுதடைந்த சீலிங்குகளை அகற்றிவிட்டுப் புதிய சீலிங்குகளைப் பொருத்துதல், நிறப்பூச்சு அடித்தல், மின்சார வேலைகள் போன்றவை. மேற்குறிப்பிட்ட வேலைகளானவை இரண்டு பிரிவுகளாக இடம்பெறும்.

பிரிவு 1 - கிழக்குப் பகுதியைத் திருத்துதல் (தரைத்தளத்தில் உள்ள இல.01 முதல் 07 வரையான அறைகள், மேற் தளத்தில் உள்ள 14 முதல் 19 வரையான அறைகள், படிக்கட்டுகள் மற்றும் மேற்றளத்தில் உள்ள பொதுவான ஒன்றுகூடல் இடம்)

பிரிவு 2 - மேற்குப் பகுதியைத் திருத்துதல் (தரைத்தளத்தில் உள்ள இல.08 முதல் 13 வரையான அறைகள், மேற் தளத்தில் உள்ள 20 முதல் 25 வரையான அறைகள்)

திருத்தவேலைகள் நடைபெறும் இடமானது அநுராதபுரம், வங்கி நகரத்தில் அமைந்துள்ளது. கட்டடமானது இலங்கை வங்கி வட மத்திய மாகாண அலுவலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

இவ்வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கான காலம் ஆரம்பத் திகதி தொடக்கம் 140 நாட்கள் ஆகும்.

2. தேசிய போட்டிகர ஏலவிலை செயன்முறைக்கமைய (NCB) ஏலவிலை கூறல்கள் மேற்கொள்ளப்படும்

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தகைமை பெறுபவர் புறக்கணிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் காணப்படாதிருக்க வேண்டியதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (CIDA) கட்டட நிர்மாண வேலைத்துறையில் தரம் C4 அல்லது C5 மட்டத்தில் பதிவுசெய்யப்படிருக்க வேண்டும்.

4. ஒப்பந்தத்தை வழங்க தகைமை பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத் தேவைப்பாடுகள்

   அ. கடந்த ஐந்து வருட காலத்தினுள் இங்கு முன்மொழியப்பட்டுள்ள வேலையை ஒத்ததும் சிக்கலான தன்மை கொண்டதும் ரூபா 20 மில்லியன் பெறுமதியுமான ஒரு கட்டட வேலையையேனும் 140 நாட்களுக்குள் அல்லது அதற்கு அதிகமான பெறுமதியுடைய வேலையை வழங்கப்பட்ட நாட்களுக்குள் பூர்த்திசெய்த அனுபவத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.

   ஆ. கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தது ரூபா 50.0 மில்லியன் சராசரி வருடாந்தப் பணப் புரள்வுடைய நிர்மாண வேலையை நிறைவேற்றியிருத்தல் வேண்டும்.

   இ. ஏனைய ஒப்பந்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள், இந்த ஒப்பந்தத்தின் பொருட்டு வழங்கப்படக் கூடிய ஏதேனும் முற்பணங்கள் என்பன தவிர்த்து ஆகக் குறைந்தது 8.0 மில்லியன் ரூபாய்க்கு அதிகமான திரவநிலைச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகள் காணப்பட வேண்டும்.

5. இவ்விலை கூறலில் பங்குகொள்ள ஆர்வமுடையோர் வேலை நாட்களில் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல.01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், (சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி) பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் (தொலைபேசி இல.011-2544310, 011-2204262 தொலைநகல் 011-2449629 மின்னஞ்சல் முகவரி: properties@boc.lk) மேலதிகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதோடு 2021.11.23 தொடக்கம் 2021.12.16 வரை எவையேனும் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1430 மணிவரை விலைகூறல் ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

6. விலைகூறல்களை தெரிவிக்க ஆர்வமுடையோர் ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா. 8,100/- (VAT உடன்) (ரூ.7,500.00 + 600.00 VAT) மாத்திரம் செலுத்தி 2021.11.23 தொடக்கம் 2021.12.16 வரை எவையேனும் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1430 மணிவரை கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை பணமாகும்.

7. முத்திரையிட்ட விலைகூறல்களை 2021.12.17ஆம் திகதி 1000 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்" இலங்கை வங்கியின் தரைத் தளத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் உள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவின் பிரதான முகாமையாளருக்கு பதிவுத் தபாலில் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்ப வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலைகூறல்கள் நிராகரிக்கப்பட்டு திறக்காது திருப்பி அனுப்பப்படும். விலை கூறல்கள் முடிவடைந்ததும் விலைகூறுவோர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைகூறல்கள் திறக்கப்படும்.

8. ஏலவிலை கூறல்கள் ஏலவிலை கூறல் முடிவடைந்து 91 நாட்கள் வரை செல்லுபடியாகும்

9. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறலானது இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் வேறொரு உரிமம் பெற்ற வணிக வங்கியிடமிருந்து பெற்ற ரூபாய் மூன்று இலட்சம் (ரூபா. 300,000/-) பெறுமதியானதும் 2022.04.15ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான (மாற்றமுடியாத, நிபந்தனையற்ற, தேவையின்போதான) விலைகூறல் பிணை முறியுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விலைகூறல் பிணைமுறிக்குப் பதிலாக பணவைப்பு ரசீது / அதே தொகைக்கான வங்கி வரைவொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

10. 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்கப் பொது ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விலைகூறலுடன் PCA3 படிவத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

11. முன்கூட்டிய ஏல விலை கூறல் கூட்டம் 2021.12.01ஆம் திகதி 1100 மணிக்கு அநுராதபுரம் இலங்கை வங்கிக் கிளையில் அமைந்துள்ள திருமணமாகாதவர்களுக்கான உத்தியோகபூர்வ விடுதியில் இடம் பெறுவதுடன் அதன்பின்னர் வேலைத் தளத்தைப் பார்வையிடலும் இடம் பெறும். ஏலவிலை கூறுபவர்கள் இணையவழியில் இக் கூட்டமானது இடம்பெறின் அதற்கும் தயாராக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

12. மேலதிக விபரங்களுக்கு கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, "BOC சதுக்கம்", இலங்கை வங்கி, 14ஆம் தளம், (சொத்துக்கள் மற்றும் சேகரிப்பு) பிரிவின் பிரதான முகாமையாளரை 011-2204260 / 011-2204262 / 011-25544310 / 011-2430268 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் வாயிலாகத் தொடர்புகொள்ளவும்.

தலைவர்
நிறைவேற்று சேகரிப்புக் குழு,
இலங்கை வங்கி,
இல 01, "BOC சதுக்கம்",
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

www.boc.lk

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

வவுனியாவில்

இவ்வருடம் 8 காட்டு யானைகள் உயிரிழப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடத்தில் 08 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள தகவல்கள் தெரிவிகின்றன.

வவுனியா மாவட்டத்தில் இவ் வருட ஆரம்பம் முதல் நவம்பர் 22 வரையான காலப்பகுதியில் செட்டிகுளத்தில் 3 யானைகளும், நெடுங்கேணியில் 3 ம், வவுனியாவில் 2 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளன.

காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து மக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்தொழிக்கின்றன. இதனால் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடனேயே மக்கள் வசித்து வருகின்றனர். கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் 10 யானைகள் உயிரிழந்தன.

முகக்கவசம் அணியாதவர்களுக்கு எதிராக பொலிசார் நடவடிக்கை

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பழைய பேருந்து நிலைய பகுதியில் நேற்று காலை முதல் முகக்கவசம் அணியாமல் வீதிகளில் நடமாடுபவர்களுக்கு எதிராக பொலிசார் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நடவடிக்கையின்போது முகக்கவசம் அணியாமல் வீதிகளில் நடமாடும் பலருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு முகக்கவசம் அணிவித்து, பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்கின்றனர்.

இதேவேளை தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்களை துரத்திப்பிடித்த பொலிசார், அதில் ஒருவர் முகக்கவசம் அணியாததைடுத்து மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்ததுடன் இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

குடும்பப் பெண் மரணத்தில் சந்தேகம்; கணவர் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்.போதனா வைத்தியசாலையில் தீக் காயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் கடந்த சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.இந்நிலையில் உயிரிழந்த பெண்ணின் கணவரை நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை திக்கம் அல்வாய் பகுதியில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் பரமநாதன் சசிகலா (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 13ம் திகதி மதுபோதையில் வீட்டுக்கு வந்த கணவன் மனைவியுடன் தகராறு புரிந்ததாகவும் ஒரு கட்டத்தில் மனைவி தன் மீது மண்ணெண்ணெயை ஊற்றி தான் தற்கொலை செய்யப்போவதாக மிரட்டிய போது , கணவன் தன்னிடமிருந்த லைட்டர் மூலம் மனைவிக்கு தீ வைத்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அதனை அடுத்து கணவனை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

எழுதுமட்டுவாழ் வீதி புனரமைப்புக்கு நிதி

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி பிரதேச சபையின் எழுதுமட்டுவாழ் வட்டார உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளையின் வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் பிரதேசசபையின் விசேட நிதி மூலம் மூன்று வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

அந்தவகையில் 2021ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட உறுப்பினருக்கான ஒதுக்கீடான 5இலட்சத்து 25,000 ரூபாய் நிதியில் எழுதுமட்டுவாழ் தெற்கு கொவ்வைக்கட்டி மூன்றாம் குறுக்கு வீதி, சபையின் வட்டாரத்திற்கான விசேட நிதியான பத்து இலட்சம் ரூபாவில் எழுதுமட்டுவாழ் ஏ9 பனிகடி இணைப்பு வீதி மற்றும் 2022ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட உறுப்பினருக்கான ஒதுக்கீடான 7இலட்சம் ரூபாவில் எழுதுமட்டுவாழ் காயன்கடவை நான்காம் குறுக்குத் தெரு ஆகியன புனரமைக்கப்படவிருப்பதாக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சங்கானையில் பஸ் நடத்துனர் மீது தாக்குதல்

யாழ். விசேட நிருபர்

யாழ் காரைநகர் பயணிகள் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்து ஒன்று சங்கானையில் வழிமறிக்கப்பட்டு நடத்துநர் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை மாலை இடம்பெற்ற தாக்குதலில் நடத்துநர் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

சாரதி ஒருவரின் ஒழுங்கீனம் காரணமாக அவரை மேற்படி தனியார் பேருந்து சங்கம் சேவையில் இருந்து இடைநிறுத்தியதாகவும் அதன் பின்னணியிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. இது தொடர்பாக வட்டுக்கோட்டை மற்றும் மானிப்பாய் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பலாங்கொடை வைத்தியசாலை கழிவுகளால் பொதுமக்கள் அசௌகரியம்

விலங்குகள் உணவாக உட்கொள்ளும் அவலம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை வைத்தியசாலையில் மகப்பேறு மற்றும் சத்திரசிகிச்சைகளின் பின்னர் கழிவுகள் முறையாக அகற்றப்படாமையால் அவற்றை விலங்குகள் உணவாகக் உட்கொள்ளும் நிலைமை காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கழிவுகளை பிராணிகள், பறவைகள் உணவாக உட்கொள்ளும் காட்சிகளை வழமையாக காணக் கூடியதாக உள்ளதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் பலமுறை எடுத்துக்கூறியும் இவ்விடயத்தில் நிர்வாகம் கரிசனை காட்டுவதாக தெரிவில்லையென வைத்தியசாலை ஆளணியினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுதொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் வினவியபோது இந்த கழிவுகள் சில சந்தர்ப்பங்களில் பிராணிகளால் உணவாகக் உட்கொள்ளப்படுகின்றது. திறந்த வெளியில் உள்ள சில குப்பை கொள்கலன்களில் ஒதுக்கப்படும் இவ்வாறான கழிவுகள் சில சமயங்களில் இவ்வாறான நிலைக்கு உட்படுவது சாதாரணமான விடயமாகும் எனவும் தெரிவித்தனர்.

எனினும் இவ்விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் கழிவுகளை முறையாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளாமையே இதற்கு காரணம் எனவும் இக்காட்சிகள் வழமையாக இடம் பெறுவதால் தாம் அசௌகரியத்துக்கு உட்படுவதாகவும் வைத்தியசாலை ஆளணியினர் தெரிவிக்கின்றனர். இவ்விடயத்தில் வைத்தியசாலை ஆளணியினர் மட்டுமன்றி இங்கு வந்து செல்லும் நோயாளர்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தை வைத்தியசாலை நிர்வாகம் சர்வ சாதாரண விடயமாக நினைக்காமல் வெளியில் இவை வீசப்படுவதையோ அல்லது திறந்த வெளி குப்பைக் கொள்கலன்களில் இவை பிராணிகளால் இழுத்து உணவாகக் கொள்ளும் அளவுக்கு நிலைமையை மோசமாகாமல் பாதுகாப்பாக அகற்றும் முறையான திட்டமொன்றைக் கடைப்பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பாடசாலை வகுப்புகள் முழுமையாக ஆரம்பம்

பதுளை தினகரன் விசேட நிருபர்

பசறை, பதுளை, பண்டாரவளை, ஹப்புத்தளை பாடசாலைகளில் 100ற்கு 90 வீதமானவர்கள் சமூகமளித்திருந்தனர். இவர்கள் அனைவரும் கற்றல் செயற்பாடுகளை துரிதமாகவும், ஆர்வமாகவும் மேற்கொண்டிருந்தனர். நேற்று 6, 7, 8, 9 ஆகிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையிலான வகுப்புக்களும், ஆண்டு 10 முதல் உயர்தர வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஏனைய வகுப்புக்கள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு சென்ற பொது சுகாதாரப் பரிசோதகர் ரோய் விஜயசூரிய, பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய சுகாதார வழிமுறைகள் குறித்து அதிபர், ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். நேற்றைய தினம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் உடல் நலம் குறித்தும், பாடசாலை நுழைவாயில்களில் அதிக கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு வலியுறுத்தி போராட்டம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு வலியுறுத்தி நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட தலவாக்கலை, வட்டகொட சிங்கள மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று (22) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களும் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் பாடசாலைக்கு முன்பாக நடைபெற்றது.

தமது பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு நுவரெலியா கல்வி பணிமனைக்கு அறிவித்தும் அதற்கு இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என ஆர்ப்பாட்டகாரர்கள் தெரிவித்தனர். தமது பாடசாலையில் தமிழ் மற்றும் சிங்களம் பேசும் மாணவர்கள் கல்வி கற்கின்றதோடு, தரம் 6 முதல் 11 வரையுள்ள வகுப்புகளுக்கு கற்பிக்க ஒரேயொரு ஆங்கில பாட ஆசிரியர் மாத்திரமே உள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கணிதம் உள்ளிட்ட பிரதான பாடங்களை கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை எனவும் இதனால் பெரும்பாலான மாணவர்கள் பாடசாலையில் இருந்து இடை விலகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலைமை தொடருமானால் பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடையும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். எனவே பாடசாலைக்கு தேவையான ஆசிரியர்களை பெற்றுத் தருவதாக அதிகாரிகள் எழுத்து மூலம் உறுதியளிக்கும் வரை போராட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

நாவுலயில் புதிதாக மேலும் 45 பேருக்கு கொரோனா

தம்புள்ள தினகரன் நிருபர்

தம்புள்ள நாவுல பிரதேச செயலகப் பிரிவில் மீண்டும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக நாவுல கொவிட் தடுப்புப் பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. தற்போது நாவுல பிரதேசத்திலிருந்து புதிதாக 45 கொவிட் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. நாவுல பம்பரக ஹவத்த கிராம சேவை அலுவலர் பிரிவில் 40 கொவிட் நோயாளர்களும் ஹங்கஹவெல கிராம சேவை அலுவலர் பிரிவில் 05 கொவிட் 19 நோயாளர்களும் பதிவாகியிருப்பதாக நாவுல கொவிட் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இராகலை தீ விபத்து சம்பவம் சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிப்பு

இராகலை தீ விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை இலக்கம் (01) மத்திய பிரிவு தோட்டத்தில் தனிவீடு தீ விபத்து சம்பவத்தில் ஐவர் பலியாகினர். இதனையடுத்து இச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு நான்காவது முறையாகவும் மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு விசாரணை வலப்பனை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி டி.ஆர் ஜினதாச முன்னிலையில் (22) மதியம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபரான தங்கையா இரவிச்சந்திரன் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

சந்தேக நபர் பதுளை சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் நீதவானிடம் தெரிவித்துடன் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சந்தேகநபரை மன்றிற்கு அழைத்து வரமுடியவில்லை எனவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் வலப்பனை நீதிமன்றத்திலிருந்து பதுளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருடன் "ஸ்கைப்" ஊடாக நீதிபதி தொடர்பு கொண்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் குறித்த வழக்கு விசாரணை தொடர்பில் இராகலை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

அதேநேரத்தில் குறித்த தீ சம்பவம் குறித்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இராகலை பொலிஸாரால் தொடர்ச்சியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விசாரணை அறிக்கைகள் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

குழாய் நீர் பாவனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை

(அக்குறணை குறூப் நிருபர்)

குறைந்த செலவில் கடல்நீரை வடிகட்டுதல் தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அடுத்த நான்கு வருடங்களில் குழாய் நீர் பாவனையானர்களின் எண்ணிக்கையை 80% ஆக அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் நீர்வள மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் நீர்வடிகால் அமைப்பு சபையால் பாரிய செலவை சுமக்க வேண்டியுள்ளது, தற்போது சுமார் 07 பில்லியன் ரூபாவை நீர் பாவனையாளர்களிடமிருந்து பணமாக வசூலிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குளோரின் விலை அதிகரிப்பு மற்றும் மின்சார கட்டண அதிகரிப்பு காரணமாக சபையின் நாளாந்த செலவுகள் அதிகரித்துள்ளது. நீரின் வீண் விரயத்தை குறைத்தல் மற்றும் சூரிய சக்தி மூலம் மின்சாரம் பெறுதல் போன்ற முறைகள் மூலம் செலவுகளை குறைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாத்தளை பிரதேசத்தில் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும் மாத்தளை பௌத்த மந்திர பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (21) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாலக கோட்டேகொடை இதனை வைபவ ரீதியாக திறந்து வைத்த பின்னர் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

பாதைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சாவுக்கும் இ.தொ.காவின் உப தலைவரும்,பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானுக்கும் இடையில் பதுளையிலுள்ள செந்தில் தொண்டமானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் பதுளை மாவட்டத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர்களுடன் இணைந்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானத்திலிருந்து நிதியிடப்பட்டது EOM&M பிரிவிற்கு IT முறைமைகள் தொடர்பான உதிரிப் பாகங்களின் வழங்கலுக்கான அழைத்தல்

ஒப்பந்த இல.: RDA/EOM&M/PRC/2021/IT/33

1. பின்வரும் பண்டங்களுக்காக மேலேயுள்ள ஒப்பந்த இலக்கமான RDA/EOM&M/PRC/2021/IT/33 இற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகை குழுத் தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து விலைமனுக்களும் 100,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

Description		Quantity (Nos.)
Workstation Computers		05
22 inch LED backlit Monitors		05
Online Double Conversion USP Units	a. 1Kva	15
	b. 6KVA	02
Industrial 4 port POE Switches		10
Layer 2 POE Switches		15
IP Phone		10
Cat 6 UTP Cable reels		05
VRLA Batteries	a. 12V 7Ah	405
	b. 12V 6 Ah Slim	33
	c. 12V 5.5 Ah	**66**

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹதென்ன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 038-2289122. தொலைநகல்: 038-2289560) அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. 2021.11.23ஆம் திகதியிலிருந்து 2021.12.06ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2500 + VAT ஆகியவற்றைச் செலுத்திய பின்னர் பண்டாரகம, வல்கம, கஹட்டகஹதென்ன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பிரிவு பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், முகவர் மற்றும் சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
5. 2021.12.07ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பண்டாரகம, வல்கம, கஹட்டகஹதென்ன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பிரிவு பணிப்பாளரிடத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
6. 2022.03.07ஆம் திகதி வரையும் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. ஒவ்வொரு விலைமனுவும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். 2022.04.04 ஆம் திகதி வரையும் விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெறுகைக்குழு,
பணிப்பாளர் (EOM&M பிரிவு) மே/பா,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கஹட்டகஹஹேன, வல்கம,
பண்டாரகம.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 நவம்பர் 23
செவ்வாய்க்கிழமை

தேசவழமை சட்டத்தையும் உள்வாங்கி சிறந்ததொரு சட்டத்தை உருவாக்குவோம்

யாழ்ப்பாணத்தில் ஞானசார தேரர் தெரிவிப்பு

யாழ். விசேட நிருபர்

தேசவழமைச் சட்டத்தில் உள்ள நல்லதையும், அதேபோன்று கண்டிய சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்லதையும் பெற்று சிறந்ததொரு சட்டத்தை ஏற்படுத்துவோம் என ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

"ஒரே நாடு, ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றிலும் மக்கள் கருத்துகள் கேட்கும் பணி இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஒன்றுபடுவதை எந்த அரசியல்வாதிகளும் விரும்பவில்லை. ஆகவே ஒரே நாடு ஒரே சட்டத்தையும் அவர்கள் விரும்பவில்லை.

போதைப் பொருளால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். விளக்கேற்றுவதற்காக கேட்கும் அரசியல்வாதிகள் போதைப் பொருள் தடுப்பு மத்திய நிலையத்தை உருவாக்க தயாரில்லை. தமிழர்களது பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் என்ன செய்கிறார்கள்? கடந்த 19ஆம் திகதி கார்த்திகை விளக்கீடு நிகழ்விலே பாதுகாப்பு தரப்பினர் தலையீடு செய்தமை தொடர்பில், அது சம்பந்தமான விளக்கத்தை நாம் பெறுவோம் என்றார்.

ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணியில் தமிழர்களை முதலில் சேர்க்காமல் எதிர்ப்புக்கள் வந்த பின்னர் சேர்த்தமை தொடர்பாக அவரிடம் கேள்வியெழுப்பிய பொழுது,

இந்த செயலணியை ஆரம்பித்த பொழுது பிரச்சினை ஒன்றாகவே இருந்தது. அந்த சந்தர்ப்பத்தில் தமிழர்களை நியமிக்கவேண்டிய தேவையிருக்கவில்லை. பொதுவாகவே தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஓரே பிரச்சினையே காணப்படுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களை தெரிவு செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. முஸ்லிம்களுக்கு பல சட்டங்கள் இருப்பதால் அந்த சட்டத்தை பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டு வர விரும்பினோம். பல்வேறு சட்டங்கள் இருப்பதால் அதனை ஒரு சட்டமாக்க விரும்புகிறோம்.

தேசவழமைச் சட்டத்தில் உள்ள நல்லதையும் பெறவேண்டும், கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்லதையும் பெற்று சிறந்த சட்டத்தை ஏற்படுத்துவோம். எல்லா சட்டங்களிலும் இருக்கின்ற நல்ல விடயங்களை சேர்த்து ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்காக ஒரே நாடு ஒரே சட்டத்தை உருவாக்க வேண்டும் என்றார்.

இக்கருத்து கேட்கும் பணியில் "ஒரே நாடு, ஒரே சட்டம்" செயலணியின் உறுப்பினர்களான யோகேஸ் வரி பற்குணராஜா, ஐயம்பிள்ளை தயானந்தராஜா உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

வேலணை பகுதியில் கிளைமோர் குண்டு மீட்பு

யாழ் விசேட நிருபர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பான அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்று புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாணம் 51ஆவது படைத்தளம் தெரிவித்துள்ளது.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேலணை அம்பிகா நகர் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தக் கிளைமோர் குண்டு மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாணம் 51ஆவது படைத்தளம் சிறப்புப் பிரிவினரினால் கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டது.

மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பான "கொல்பவன் வெல்வான்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

கொழும்புக்கு மாற்றுமாறு மாத்தறை சிறையிலுள்ள தமிழ் கைதி கோரிக்கை

வவுனியா விசேட நிருபர்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கைதி ஒருவர் மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு தன்னை மாற்றுமாறு அவர் கோரிக்கை முன்வைத்துள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மாத்தறை சிறைச்சாலைக்கு சென்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளத. நிமலன் என்ற கைதியை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை (21) பார்வையிட்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே கஜேந்திரகுமார் எம். பி இவ்வாறு தெரிவித்தார்.

10 நாள் சிசு உட்பட 14 பேருக்கு கொவிட்

கரவெட்டி தினகரன் நிருபர்

பிறந்து 10 நாட்களேயான பச்சிளம்குழந்தை உட்பட வடக்கு மாகாணத்தில் 14 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 212 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாம் காணப்பட்டுள்ளனர்.

அந்த அறிக்கையின் அடிப்படையில்,

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள பிறந்து 10 நாட்களேயான பெண் குழந்தை உட்பட இருவர் மற்றும் செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் 02 பேர் என வவுனியா மாவட்டத்தில் 4 பேர் இனங்காணப்பட்டனர்.

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 4 பேர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 03 பேர், மல்லாவி ஆதார மருத்துவமனையில் ஒருவர் என முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் ஒருவரும் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டனர்.

பாடசாலைகள் வழமைக்கு திரும்பின

ஓமந்தை விஷேட நிருபர்

நாடு முழுவதும் உள்ள அரச பாடசாலைகளின் அனைத்து வகுப்புக்களினதும் கல்வி நடவடிக்கைகள் நேற்று (22) முதல் ஆரம்பமானதையடுத்து வவுனியா மாவட்டத்திலும் அனைத்து பாடசாலைகளும் வழமைக்கு திரும்பியுள்ளன.

தரம் 6 முதல் தரம் 9 வரையான வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகளே நேற்று (22) ஆரம்பமாகின. தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களுக்கும், 10ம் தரம் முதல் 13ம் தரம் வரையான வகுப்புக்களுக்கும் ஏற்கனவே கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

வவுனியா மாவட்டத்தில் நேற்று அதிகளவான மாணவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி ஆர்வத்துடன் பாடசாலைக்கு சமூகமளிப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

வீடுடைத்து திருடும் இருவர் கைது

நகைகளும் பணமும் மீட்பு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் வீடு உடைத்து திருட்டில் ஈடுபடும் இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து நகைகளும் பணமும் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருப் பகுதியில் வீடு உடைக்கப்பட்டு ஆறு பவுண் நகையும், ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களால் முறையிடப்பட்டிருந்தது.

முறைப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 28 வயதுகளையுடைய நபர்கள் என்றும் அவர்களிடம் இருந்து ஆறரைப் பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்கள் வேறு பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களா என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

புலோலி மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி

கரவெட்டி தினகரன் நிருபர்

புலோலி மந்திகை சாரையடிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (21) இரவு 9.00 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் அல்வாய் அத்தாயை சேர்ந்த கண்ணன் காந்தன் (22 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை பிரதான வீதியில், மந்திகை பக்கத்தில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் பருத்தித்துறைப் பக்கத்தில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் நேர் எதிரே மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் மூவர் படுகாயம் அடைந்தனர். மூவரும் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது குறித்த இளைஞன் உயிரிழந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் தொடர்பாகவும் சம்பவம் தொடர்பாகவும் பருத்தித்துறைப் பொலிசார் விசாரணைகள் மேற்கொண்டனர். படுகாயங்களுக்கு உள்ளான ஏனைய இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இராணுவத்தின் ஏற்பாட்டில் 03 பாடசாலைகளுக்கு குடிநீர் வசதி

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரால் மூன்று பாடசாலைகளுக்கான குடிநீர் வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 64 வது படைப்பிரிவின் 641 வது மற்றும் 642 வது பிரிகேடின் ஒருங்கிணைப்புடன் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள மூன்று பாடசாலை வளாகங்களில் நீர் சுத்திகரிப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டன.

கூழாமுறிப்பு அ. த.க பாடசாலை, கறிப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலை, பழம்பாசி அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு குறித்த நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மாவீரர் தினத்துக்கு பொலிஸாரின் தடை கோரிய மனு தள்ளுபடி

யாழ். விசேட நிருபர்

மாவீரர் தினத்துக்கு தடைகோரி சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் இணைந்து சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் சாவகச்சேரி, கொடிகாமம் பொலிசாரால் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 13 பேருக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்க கோரி நேற்று (22) சாவகச்சேரி நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைத்தனர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிவான் யூட்சன் பெயர் குறிப்பிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதாலும் அவர்கள் இலங்கையின் சட்டம் இயற்றுகின்ற உயரிய சபைகளில் இருப்பதாலும் இலங்கையின் சட்டம் தொடர்பாக தெளிவாக அறிந்திருப்பார்கள்.

எனவே அவர்கள் மீது சட்டத்தை மீறுவார்கள் என்ற அடிப்படையில் பொலிசாரின் கோரிக்கையை ஏற்று தடையுத்தரவு பிறப்பிக்க முடியாது. ஆனால் பெயர் குறிப்பிட்ட நபர்களும் ஏனையவர்களும் இலங்கையின் சட்டங்களை மீறி ஏதாவது நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கைது செய்து மன்றில் முன்னிலைப் படுத்த பொலிசாருக்கு அதிகாரம் உள்ளது. அதனால் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை ஏற்று குறித்த நபர்களுக்கு எதிராக தடையுத்தரவை வழங்க முடியாது என்று தெரிவித்து குறித்த கோரிக்கையை நீதிமன்றம் தள்ளுபடி செய்வதாக நீதிபதி உத்தரவிட்டார்.

முல்லைத்தீவில் கொரோனாவுக்கு இதுவரை 55 நோயாளர்கள் பலி

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை கொரோனா தொற்றினால் 55 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த இருதினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்கு இலக்காகி மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 44 வயதுடைய மாறா இலுப்பை நெடுங்கேணியினை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சனிக்கிழமை (20) உயிரிழந்துள்ளார். சிறுநீராக நோயினால் பாதிக்கப்பட்ட இவர் கொரோனா தொற்று ஏற்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கூழாமுறிப்பு பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய முருகன் கோபால் என்பவரும் 21ம் திகதியன்று கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

திருவருகைக்காலம்

கத்தோலிக்க திருச்சபை ஒரு வருடத்தின் காலங்களை விசேடவிதமாக வகுத்துள்ளது. அந்தவகையில் பொதுக் காலம் முடிவடைந்து கிறிஸ்து பிறப்பை அறிவிக்கும் திருவருகைக்காலம் ஆரம்பித்துள்ளது.

உலகம் முழுவதிலும் திருவருகைக் காலத்தின் ஆரம்பத்தில் இருந்தே கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களும் ஆரம்பித்துவிடுகின்றன. உலக அளவில் அதற்கான ஆயத்தங்கள் இப்போது முதல் கொண்டே ஆரம்பித்து விட்டன.

நம் ஆண்டவராகிய கிறிஸ்து அன்று வாழ்ந்த மக்களுக்கு தமது இரண்டாம் வருகையை பலவிதமான இயற்கை நிகழ்வுகளை செய்தார் அவரின் வருகையை இயேசு மட்டுமே முன்னரை வைக்கவில்லை மாறாக பழைய ஏற்பாட்டு காலத்தில் இறைவாக்கினர் வழியாக முன்னர் வைக்கப்பட்டது இறைமகனின் வருகை ஏன் எதற்காக அவர் வரவேண்டும் வந்த பின் என்ன நடக்கும் கொடிய வேதனைகளை அனுபவித்த அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மட்டும் என்று யாரை குறிப்பிடுகின்றார் போன்ற பலவிதமான கேள்விகள் நம் மனதில் எழுகின்றன.

கிறிஸ்து வருகையின் நோக்கம்

சமுதாயத்தில் உயர் குல மக்கள் என தம்மைத்தாமே நினைப்பவர்கள் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள். ஏனையவர்களை அடக்கி ஆழ்கின்றார்கள்.

ஏழைகளை சுரண்டுகின்றனர் அத்தகைய கொடியவர்களை அழிக்கவே இயேசுவின் வருகை அவசியமாயிற்று என்பதை பழைய ஏற்பாட்டின் ஏசாயா நூலில் (ஏசாயா 13:1013) நாம் இவ்வாறு வாசிக்க முடிகிறது.

"உலகை அதன் தீய செயல்களுக்காகவும் தீயவர் கொடுஞ்செயல் களுக்காகவும் ஆண்டவர் வந்து தண்டிப்பார். மேலும் ஆணவக்காரர்கள் அகந்தையையும் இறுமாப்பையும் அளிக்க ஆண்டவர் வருவார்." என்கிறது அந்த நற்செய்தி.

லூக்கா நற்செய்தியில்" உண்டு களித்து களியாட்டம் செய்து இறைவனை மறந்து வாழ்ந்த மக்களை இறைவன் கந்தகத்தாலும் நெருப்பாலும் அழித்தார்.எனவே எச்சரிக்கையாக இருக்கவேண்டும்" என லூக்கா நற்செய்தி நமக்கு தெரிவிக்கின்றது.

இவை அனைத்தும் இன்றும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. பரந்து விரிந்த இந்த உலகில் சுருங்கிப்போன இதயம் கொண்டவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். சிறு குடும்பங்கள் முதல் உலகின் எல்லா இடங்களிலும் ஆணவம் தலை விரித்து ஆடுவதை பார்க்கின்றோம். முன்னேறியநாடுகள்பிறநாடுகளின் வளர்ச்சியைத் தாங்கிக் கொள்ள இயலாததால் தான் ஆணவப் போர் தொடுத்து அடக்குகின்றன. எங்கே தங்களை பொருளாதார அளவில் பிற நாடுகள் முந்தி விடுமோ என்று எண்ணி பயந்து பிற நாட்டுக்கு எதிராக சதித் திட்டம் தீட்டுகின்றன.

வீட்டில் தொடங்கி உலகளவில் மனித மனங்களில் உருவாகும் சிறு துளி ஆணவம், பொறாமை, வன்முறைக் குணம் என்பன வெளியில் வரும்போது பிறரை துன்புறுத்தும் நிலைமையை காணமுடிகின்றது.

இவற்றைப் போக்கவே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகை அமைந்துள்ளது.

அம்புறோஸ் பீட்டர்...
பிரான்ஸ்

(மிகுதி அடுத்த வாரம்)

"இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்"

இயேசுவும் சக்கேயுவும்

" நீ இறைவனைத் தேடிக் கொண்டிருக்க இறைவன் உன்னைத் தேடுகின்றார்" என நாம் பாடுகிறோம்.

நாம் இறைவனைத் தேட ஆவலாய் இருக்கும் போது அவரும் நம்மைக் காண ஆவலாய் இருக்கின்றார் என்பதை கடந்த வாரம் வியாழக்கிழமை நற்செய்தி வாசகம் நமக்கு உணர்த்துகிறது.

நற்செய்தி வாசகத்தில் சக்கேயு என்ற ஒரு செல்வந்தர் வரி வசூலிப்பவர் இயேசுவைக் காண ஆவலாக இருந்தார்.

ஒருநாள் அவருக்கு இந்த வாய்ப்பு கிடைக்கின்றது. அந்த வழியாக சென்ற இயேசுவைக் காண்பதற்காக குட்டையாக இருந்த அவர் ஒரு அத்திமரத்தில் ஏறி அமர்ந்து கொண்டு இயேசுவைப் பார்க்க ஆசைப்பட்டார். பின்னர் நடந்த சம்பவங்களை அன்றைய நற்செய்தி வாசகத்தில் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். அந்த வாசகம் இவ்வாறு அமைகின்றது.

"அக்காலத்தில் இயேசு எரிக்கோவுக்கு சென்று நகர் வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கு சக்கேயு என்னும் பெயருடைய ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் வரி தண்டுவோருக்குத் தலைவர். இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார். மக்கள் திரளாய் கூடி இருந்தால் அவரை பார்க்க முடியவில்லை. ஏனெனில் சக்கேயு குட்டையாக இருந்தார். அவர் முன்னே ஓடிப் போய் அவரை பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக் கொண்டார். இயேசு அவ்வழியே தான் வரவிருந்திருந்தார்.

இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன் அண்ணாந்து பார்த்து அவரிடம் சக்கேயு விரைவாய் இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும் என்றார். அவர் விரைவாய் இறங்கி வந்து அவரை மகிழ்வுடன் வரவேற்றார். இதைக் கண்ட யாவரும் பாவியிடம் தங்கப் போயிருக்கிறாரே இவர் என்று முணுமுணுத்தனர்.சக்கேயு எழுந்து நின்று ஆண்டவரே என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுகிறேன். எவர் மீது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை 4 மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்என்று அவரிடம் கூறினார்.

இயேசு அவரை நோக்கி,இன்று இந்த வீட்டுக்கு மீட்பு உண்டாயிற்று. ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே. இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார் என்று சொன்னார்".

நாமும் இயேசுவைத் தேடுகின்றோமா? அல்லது அவரைத் தேடிக்கண்டு விட்டோமா?

அவரைக் கண்ட பின்னர் நம்மில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்ன என்பதை சிந்தித்துப் பார்ப்போம். பாவி என அன்றைய சமூகத்தில் கருதப்பட்ட சக்கேயு இயேசுவைக் கண்டதும் மனமாற்றம் அடைகின்றார். அவரது மன நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. அதனைக் கண்டு இயேசு இன்று இந்த வீட்டுக்கு இன்று மீட்பு வந்தது என்று தெரிவிக்கின்றார்.

இயேசுவைக் கண்டு கொண்ட பின்னர் அல்லது அவரை எமது வாழ்க்கையில் நாம் சந்தித்த பின்னர் எமது வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா? அவரால் தரப்படும் மீட்பு எமது வாழ்விலும் எமது குடும்பத்திற்கும் கிடைத்துள்ளதா என்பதை சிந்திப்போம்.

எல்.மிலியன் ஜேம்ஸ்...



நற்பண்புகளை வாழ்வாக்குவோம்

ஒரு வகுப்பில் வரலாறு பாடம் நடத்தும் பொழுது வரலாற்று ஆசிரியர் "அரசர் என்றால் என்ன நினைக்கிறீர்கள்? " என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் "அரசர் என்பவர் ஆடம்பரத்தோடும் வசதியோடும் வாழ்பவர். அவருக்கு ஏராளமான பணியாளர்கள் பணிவிடை செய்வர். அரசர் பிறரை அடக்கி அதிகாரத்தோடும் ஆடம்பரத்தோடும் வாழ்பவர்" என்று பதிலளித்தான்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அரசர் என்றால் ஆடம்பரமான அதிகாரம் கொண்ட ஒருவர் என்று நினைக்கலாம். இத்தகைய பிம்பத்தைத் தான் இவ்வுலகில் வாழ்ந்த அரசர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

கிறிஸ்து அரசர் பெருவிழாவை கொண்டாடும் நாம் உண்மையான அரசர் என்பவர் யார் என்று அறிந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளோம். பிறரை அடக்கி ஆள்பவர் அரசர் அல்ல ; மாறாக, அன்பு செய்து வாழ்பவர் தான் அரசர். பிறரை ஒடுக்கி வாழ்பவர் அரசர் இல்லை; ஒடுக்கப்பட்டோருக்கு வாழ்வு கொடுப்பவரே உண்மையான அரசர். பணிவிடை ஏற்பவர் மட்டும் அரசர் அல்ல; பணிவிடை செய்பவரே அரசர். இவ்வாறாக அரசரின் மேன்மையை அடுக்கிக் கொண்டே போகலாம்.

உண்மையான அரசர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு மண்ணுலக விண்ணுலக அரசராகிய ஆண்டவர் இயேசு மிகச் சிறந்த உதாரணம். "நீ யூதரின் அரசனா? " என்று இவ்வுலக அரசாட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்த பிலாத்து இயேசுவைப் பார்த்து கேட்டான்.

இதற்கு காரணம் யூதத் தலைவர்கள் இயேசுவின் மீது இத்தகைய குற்றச்சாட்டை வைத்தனர். இத்தகைய குற்றச்சாட்டை வைத்தால் மட்டுமே இயேசு அரசால் தண்டிக்கப்பட முடியும் என்று ஆழமாக அறிந்து குற்றம் சுமத்தினர்.

எனவேதான் பிலாத்து இத்தகைய கேள்வி கேட்டான். ஆண்டவர் இயேசு "நீராக இதைக் கேட்கிறீரா?" என்ற கேள்வியை பிலாத்து வைப் பார்த்து கேட்டார். பிலாத்து கேட்ட கேள்வியை இயேசு ஆழமாகப் புரிந்து கொண்டவராய் "ஆம் " அல்லது "இல்லை" என்று ஆண்டவர் இயேசு பதில் கூறாமல் வித்தியாசமான பதிலைக் கூறினார்.

அதுதான் "நீராக இதை கேட்கிறீரா?" என்ற கேள்வியோடு கூடிய பதில். இதற்கு காரணம் பிலாத்து இயேசுவை இவ்வுலகம் சார்ந்த குறுகிய வட்டத்தில் சுருக்கி இந்தக் கேள்வியை கேட்டான். பிலாத்து இந்தக் கேள்வியை கேட்டதற்கு காரணம் உரோமை அரசாட்சியில் யாராவது தான் தான் அரசர் என்று சொன்னால், அவற்றைச் தீர விசாரித்து தண்டனை கொடுப்பது ஆளுநரின் கடமையாக இருந்தது.

யூதர்கள் "இயேசு தன்னை அரசராக காட்டிக் கொள்கிறார் " என்று குற்றம் சுமத்தியதால் தான் இத்தகைய கேள்வியைக் கேட்டார்.

ஆனால் ஆண்டவர் இயேசு "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என்று கூறினார். இதற்கு காரணம் மெசியா என்பவர் இவ்வுலகில் பேரரசைக் கட்டுவார் என்று யூத மக்கள் எண்ணினர். உரோமை அரசை வென்று இஸ்ராயேல் மக்களை நிலை நிறுத்துவார் என்று ஆழமாக நம்பினர்.

ஆனால் இயேசுவின் செயல்பாடுகளில் இவ்வுலகம் சார்ந்த அரசரைப் போல் ஆடம்பரம் இல்லாமல், அன்பே நிறைந்திருந்தது. ஏனென்றால் இயேசுவின் அரசாட்சி விண்ணுலக அரசாட்சியை மையப்படுத்தியது.

இயேசு தன்னை இவ்வுலகம் சார்ந்த அரசரைப் போல் நான் இல்லை என்று சொல்வதற்கு "அரசன் என்று நீர் சொல்கிறீர் " என்று கூறினார். இதற்குப் பொருள் என்னவென்றால் இயேசு தன்னை உலகம் சார்ந்த அரசர்களைப் போல வெளிப்படுத்தவில்லை; மாறாக, தன்னை ஒரு ஆன்மீக அரசராகவும் உண்மைக்குச் சான்று பகரும் அரசராகவும் வெளிப்படுத்தினார்.

உண்மைக்கு சான்று பகர்வதே அவருடைய

முக்கிய பணியாக வெளிப்படுத்தினார். கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகம் கிறிஸ்து அரசராகிய நம் ஆண்டவர் இயேசுவின் அரசாட்சியை பற்றி தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு அடிப்படையாக இருக்கின்றது.

கிறிஸ்து அரசர் பெருவிழா கொண்டாடும் நம்மை இயேசுவின் உண்மையான அரசாட்சியை பற்றி அறிந்துகொள்ள திருச்சபை அழைப்பு விடுக்கிறது. நாம் வாழும் இன்றைய சமூகத்தில் அரசர்கள் எப்படி வாழ்ந்திருப்பார்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று தெரியாது.

பல நேரங்களில் திரைப் படங்களைப் பார்த்துதான் அரசர்கள் இப்படித்தான் இருந்திருப்பார்கள் என்று கற்பனை செய்து கொள்ளுகிறோம். திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் கிறிஸ்து அரசர் பெருவிழாவை திருவருகைக் காலத்துக்கு முந்தைய ஞாயிற்றுக்கிழமை கொண்டாட முதன் முதலில் அழைப்பு விடுத்தார். திருவழிபாட்டு ஆண்டின் தொடக்கமும் முடிவுமாக கிறிஸ்து அரசர் பெருவிழா அமைகின்றது.

இதன் நோக்கம் என்னவென்றால் ஆண்டவர் இயேசு நம் அரசராக இறையாட்சியில் பங்குகொள்ள நமக்கெல்லாம் அழைப்பு விடுக்கிறார் என உணர்ந்து கொள்வதே.

இயேசுவின் இறையாட்சி என்றால் என்ன? இறைவனுடைய ஆட்சியிலே இணைந்திருப்பதுதான் இறையாட்சி. அதாவது இறைவனோடு இணைந்து அவரின் வார்த்தையின்படி நடப்பது தான் இறையாட்சி. இறையாட்சியின் மதிப்பீடுகளான அன்பு, நீதி, நேர்மை, மன்னிப்பு, சமத்துவம், உரிமை வாழ்வு போன்ற நற்பண்புகளை வாழ்வதுதான் உண்மையான இறையாட்சி. இயேசுவின் இறையாட்சிக்கும் இவ்வுலகம் சார்ந்த அரசாட்சிக்கு அதிக வேறுபாடு உண்டு.

இயேசு தன்னுடைய ஆன்மீக அரசாட்சியில் அன்பை மையமாகக்கொண்டு ஆட்சி செய்தார். ஆனால் இவ்வுலகம் சார்ந்த அரசர்கள் அதிகாரம் என்ற ஒன்றை வைத்து மக்களை அடக்கி ஆண்டனர்.

இயேசுவின் ஆன்மீக அரசாட்சியில் நீதியும் நேர்மையும் இருந்தன. உண்மைக்கு சான்று பகர்வதே எனது பணி என்று கூறிய இயேசுவைப் போல நீதியோடும் நேர்மையோடும் வாழ நாமும் அழைக்கப்பட்டுள்ளோம்.

இவ்வுலகம் சார்ந்த அரசாட்சியில் நீதியும் நேர்மையும் உண்மையும் எட்டாக்கனியாக இருந்ததன. எனவேதான் பிலாத்து "உண்மையா அது என்ன? " என்று கேட்டான். ஆனால் இயேசுவின் அரசாட்சியில் நீதி நேர்மை உண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. அதுதான் உண்மையான நிலை வாழ்வுக்கு வழிகாட்டும்.

இயேசுவின் ஆன்மீக அரசாட்சியில் மன்னிப்பு இருந்தது. ஆனால் இவ்வுலகம் சார்ந்த அரசாட்சியில் மன்னிப்பை விட அதிகமாக தண்டனை இருந்தது. எனவே மனிதன் சிதைக்கப்பட்டான். சமத்துவமும் சகோதரத்துவமும் இறையாட்சி மதிப்பீடாக கருதப்படுகிறது.

சாதி மதம் மொழி இனம் போன்ற பாகுபாடுகளைக் கடந்துதான் இயேசுவின் இறையாட்சி. இத்தகைய இறையாட்சி தான் இயேசுவை மெசியா என்று உளமார ஏற்றுக் கொள்ள அடிப்படையாக இருக்கின்றது. உலகம் சார்ந்த அரசாட்சி ஆளும் அரசனுக்குத் தான் மகிழ்ச்சியான வாழ்வை வழங்கியது. ஆனால் இயேசுவின் ஆன்மீக அரசாட்சியில் அனைவருக்கும் மகிழ்ச்சி கிடைக்கிறது.

எனவே இயேசுவின் அரசாட்சியில் இறையாட்சிப் பணியாளர்களாக இணைந்து உண்மை அன்பு நீதி நேர்மை சமத்துவம் சகோதரத்துவம் போன்ற நற்பண்புகளை நமது வாழ்வாக்க முயற்சி செய்வோம். அப்பொழுது இயேசுவின் அரசாட்சியில் அகமகிழ முடியும்.

அருட்பணி
குழந்தை இயேசு பாபு...

லேக்ஹவுஸ் பிரகதசீலி சேவக சங்கம் நடத்திய பிரதமரின் பிறந்த தின ஆசீர்வாத போதிபூஜை

மூன்று தசாப்த காலமாக இடம் பெற்ற பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து மக்களை மரணத்தின் பிடியிலிருந்து மீட்டது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. இதற்கு அன்று ஜனாதிபதியாக எடுத்த தைரியமான முடிவே காரணம் என கோட்டை சம்புத்தாலோக்க விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் இத்ததெமலியே இந்தசார தேரர் நேற்று (22) தெரிவித்தார்.

இலங்கையின் 5வது நிறைவேற்று ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளையொட்டி அவருக்கு நல்லாசி வேண்டியும் மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டும் ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்த லேக் ஹவுஸ் பிரகதசீலி சேவக சங்கத்தால் கோட்டை சம்புத்தாலோக்க விஹாரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதி பூஜையின் போது நிகழ்த்திய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதிகள் பலர் இருந்தார்கள் . ஜே .ஆர் ஜெயவர்தன, ஆர் பிரேமதாச, டி.பி விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதிகளாக பதவி வகித்தார்கள். யாழ் மேயர் துரையப்பாவின் கொலையுடன் ஆரம்பமான பயங்கரவாதம் நாடு பூராவும் பரவியது. அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள் சிறியோர், பெரியோர், மதத்தலைவர்கள், இன, மத, பேதமின்றி அனைவரும் மரண பீதியுடன் காணப்பட்டார்கள். அன்று வேலைக்குச் சென்ற கணவர் மீண்டும் வீட்டுக்கு வருவார் என்ற நம்பிக்கை இருக்கவில்லை. பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகள் பாதுகாப்பாக வீடு திரும்புவார்கள் என பெற்றோர்கள் ஐயத்துடன் காணப்பட்டார்கள்.

பஸ்ஸில், ரயிலில் மற்றும் தங்களது சொந்த வாகனங்களில் செல்வதற்குக் கூட மக்கள் பயந்தார்கள்.

வழிபாட்டு இடங்களில் மத கடமைகளில் ஈடுபட்டவர்களைக் கூட கொலை செய்தார்கள்.

பிக்குகளை மாத்திரமல்ல மதத் தலைவர்கள், மத்தலங்களில் வழிபாடு செய்த பக்தர்களைக்கூட அவர்கள் கொன்றார்கள்.

இந்நாட்டு மக்கள் மரண பயத்தில் வாழ்ந்த காலம் ஒன்று இருந்தது. வடக்கு, கிழக்கில் மக்கள் இரவில் மரங்களுக்கு மேலே நித்திரை செய்தார்கள். தங்களது சேனைகள், வயல்களில் வேலை செய்யவும், பாடசாலைக்கு, விகாரைக்கு, வைத்தியசாலைக்கு செல்லவும் மக்கள் பயந்தார்கள்.

மரண பயத்தை அன்று வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் மாத்திரமல்ல மேல் மாகாணம், தென் மாகாணம் உள்ளிட்ட நாட்டில் எல்லா இடங்களிலும் குண்டுகள் வெடித்ததனால் நாட்டில் அனைவருமே பீதியில் உறைந்து போய் இருந்தார்கள்.

1997 ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் எமது விகாரையின் மீதும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட போது எமது விகாரையின் விகாராதிபதியான தேரர் காலமானார்.

லேக் ஹவுஸ் நிறுவனத்துக்குள்ளும் பயங்கரவாதிகள் நுழைந்தார்கள். நாம் அனைவரும் பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்டு மரண பயத்தில் வாழ்ந்தவர்கள். இதைப்போன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு மத்திய வங்கி மற்றும் பொருளாதார மத்திய இடங்களை பயங்கரவாதிகள் தாக்கினார்கள்.

இதன் காரணமாக 30 வருடங்கள் எமது பொருளாதாரத்தை மேம்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்நாட்டை சூழ்ந்திருந்த பயங்கரவாதத்தில் இருந்து விடுதலை பெற நடவடிக்கை எடுத்தது அன்றைய ஜனாதிபதி தற்போதையான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆவார்.

பாதுகாப்பு செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும் பலமாக திகழ்ந்தார்.

அவர்கள் இருவரையும் ஆசீர்வதிக்க அன்று அவர்கள் செய்த அர்ப்பணிப்பே போதுமானதாகும். அந்த அர்ப்பணிப்பை எவ்வித பேதமும் இன்றி பாராட்ட வேண்டும். வேறு எது செய்யாவிட்டாலும் பயங்கரவாதத்திலிருந்தும் மரண பயத்தில் இருந்தும் மக்களையும் நாட்டையும் காப்பாற்றியதற்காக அவர்கள் இருவருக்கும் ஆசீர்வாதம் வழங்க வேண்டும். இன்று மக்கள் பயமின்றி பாதையில் செல்வதற்கு இந்த தலைவர்களின் தைரியமான முடிவே காரணமாகும்.

30 வருடங்கள் காணப்பட்ட பயங்கரவாதத்தை இன்னுமொரு ஜனாதிபதிக்கு தீர்ப்பதற்கு வைக்காமல் அதனை முடிவுக்குக் கொண்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அன்று சபதம் ஏற்றார்.

அதனை அவ்வாறே நிறைவேற்றி இன்று எமது இராணுவ வீரர்கள் போன்று பெருமளவான பொதுமக்களின் உயிர்களையும் காப்பாற்ற அவரால் முடிந்தது.

அதற்காக நாம் அந்த்த் தலைவர்கள் ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ பிரார்த்திப்போமாக.

நெரஞ்சலா துஷாரி விக்ரமசிங்க ...✍
தமிழில் வீ.ஆர்.வயலட்

கோட்டை சம்புத்தாலோக்க விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் இத்ததெமலியே இந்தசர தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் பிரித் ஓதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நீண்ட ஆயுளை வேண்டி பிரார்த்தனை செய்தார்கள்.

அத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஆசீர்வாதம் வழங்கினார்கள். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொழிற்சங்க தலைவர் மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகேவுக்கு நலம் வேண்டியும் நீண்ட ஆயுளையும் பிரார்த்தனை செய்தார்கள்.

லேக்ஹவுஸ் நிறுவன ஸ்தாபகர் டி.ஆர் விஜயவர்தனவுக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மற்றும் லேக் ஹவுஸ் நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிரகதசீலி ஜாதிக தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைமை செயலாளர், பிரதமரின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம், எரிபொருள் கூட்டுத்தாபனத் தலைவர் சட்டத்தரணி சு மித் விஜயசிங்க, பிரகதசீலி சேவக சங்கத்தின் பிரதான செயலாளர் பந்துல சமன் குமார, அச்சங்கத்தின் நிர்வாக செயலாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் குழு அங்கத்தவர் சுதத் அபேவர்தன, அச்சங்கத்தின் தேசிய அமைப்பாளர், அரச பொறியியல் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் குழு அங்கத்தவர் அமரபால கமகே, அச்சங்கத்தின் லேக் ஹவுஸ் கிளை தலைவர் சந்தன பண்டார, செயலாளர் திஸ்ஸ தம்மிக்க, பொருளாளர் டி.எம்.டி பட்டுகெதர, பிரதான அமைப்பாளர் தயான் பண்டார ஆகியோர் உள்ளிட்ட லேக் ஹவுஸ் பிரகதிசீலி சேவக சங்கத்தின் அங்கத்தவர்கள், லேக்ஹவுஸ் நிறுவன பௌத்த சங்க அதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

வரவு செலவுத்திட்டத்தில் பொதுமக்கள் மீது எந்தச் சுமையும் ஏற்றப்படவில்லை

இராஜாங்க அமைச்சர் நாலக்க கொடஹேவா

இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் பொதுமக்கள் மீது எந்தச் சுமையும் ஏற்றப்படவில்லை. இந்தச் சவாலான சூழலில் இவ்வாறான வரவு செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதேவேளை பல துறைகளுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் நாலக்க கொடஹேவா தெரிவித்தார்.

வரவு செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

இந்த வரவு செலவுத்திட்டத்தை விமர்சித்த எதிரணி 5 வருடங்கள் நாட்டை ஆட்சி செய்தார்கள்.

ஆசியாவில் மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சி வீதம் பெறும் நிலைக்கு நாட்டை மாற்றினார்கள்.

5 வருடத்தில் தனிநபர் கடன் சுமை 254000 இனால் அதிகரித்து 2019 இறுதியில் 590 000 ஆகியுள்ளது.

இது தானா இவர்களின் பொருளாதார முன்னேற்றம். பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலைஉயர்வு இருப்பதை ஏற்கிறோம்.

1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அதே திறந்த பொருளாதாரக் கொள்கையே தொடர்கிறது. தனியார் துறைதான் பொருட்களை விநியோகிப்பதால் அரசாங்கத்தால் அதனைக் கட்டுப்படுத்த முடியாது.

விலைக்கட்டுப்பாடு அறிமுகம் செய்து பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியாது. 5 வருட காலத்தில் குறுக்கால கடன் பெருமளவு பெறப்பட்டது. ஏற்றுமதி அதிகரிக்கப்படவில்லை.

இவற்றின் காரணமாகவே இன்று நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடன் பெறுவதை நாம் ஆதரிக்கவில்லை.

பட்ஜட் விவாதம்

சபை நிருபர்கள்
லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

நம் அனைவரினதும் நோக்கம் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்புவதும் முன்னேற்றவதுமானதாகவே இருக்க வேண்டும். அதற்கு எதிர்க் கட்சி தமது பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது.

சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி (த.தே.கூ)

இராணுவத்தின் ஒத்துழைப்பிற்கும் அவர்களின் வாக்கு வங்கிக்காகவும் தான் அவர்களுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது.

அரச சேவையாளர்களை தவிர்த்து ஓய்வுநிலை இராணுவ அதிகாரிகள் அமைச்சின் செயலாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டம் காரணமாக இங்கு முதலீடுகள் செய்யப்படுவது தடைப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழர்கள் தமது மண்ணின் மீது பற்றுக் கொண்டவர்கள். அவர்கள் முதலீடு செய்ய முன் வந்தால் அவர்களை பயமுறுத்தி பணம் பறிக்கின்றனர்.

பயங்கரவாதப் பிரிவுக்கு அழைத்து பயமுறுத்துவதால் அவர்களின் முதலீட்டைத் தடுக்கிறது. இலங்கைக்கு சுற்றுலா பயணிகளாக வருபவர்களில் 50 வீதமானவர்கள் புலம்பெயர் தமிழர்கள். அவர்கள் பொருளாதாரத்தில் பலமாக உள்ளனர்.

அவர்களால்தான் இலங்கையைக் காப்பாற்ற முடியும். அதிரடியாக எடுத்த பசளை கொள்கையினால் விவசாயிகள் வீதியில் இறங்கியுள்ளனர். இந்திய மீனவர்களின் இழுவைப்படகு காரணமாகவும் தென்பகுதி மீனவர்களின் அத்துமீறல் காரணமாகவும் வடக்கு மீனவர்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேய்ச்சல் நிலம் பறிக்கப்பட்டதால் கால்நடைப் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிவாயு சீமெந்து, பால்மா போன்ற பொருட்களின் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு காரணமாக சாதாரண மக்கள் முதல் அரச சேவையாளர்கள் வரை பதற்றமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டிலான் பெரேரா எம்.பி. (பொ.ஜ.பெ)

எந்த நிதி அமைச்சரும் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கையில் இவ்வாறு முழு உலகிலும் கொரோனா நெருக்கடி நிலையை சந்தித்திருக்கவில்லை. உலக சந்தையில் எரிபொருள் விலை பாரியளவு உயர்ந்திருக்கவில்லை.

பொதுமக்கள் மீது குறைவாக சுமையேற்றி செல்வந்தர்களுக்கு அதிக வரி ஏற்றி இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.இதனை விட சிறப்பாக பட்ஜட் சமர்ப்பிக்க முடியாது. 2015 இல் இருந்து 2019 வரை கொரோனா இருக்கவில்லை ஆனால் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்திருந்தது. ஏனைய காலங்களைப் போன்று இன்றைய நெருக்கடி நிலையில் சமர்ப்பித்துள்ள பட்ஜட்டை விமர்சிப்பது உகந்ததல்ல.

எஸ்.எம்.மரிக்கார் எம்.பி (ஐ.ம.ச)

தற்பொழுது நாடு முகங்கொடுத்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு முன்வைக்கப்படவில்லை. சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு சில காலம் பிடிக்கும். வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையரால் அந்நிய செலாவணி வருவது குறைந்துள்ளது. ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இரசாயன பசளை தடையால் உற்பத்தி குறைந்து செலவு அதிகரித்துள்ளது.

ஜி.எஸ்.பி சலுகையை நிறுத்த ஐரோப்பிய பாராளுமன்றத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. பிரஜைகளின் சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டும். மனித உரிமை, ஜனாநாயக உரிமை பேணப்பட வேண்டும். அப்பொழுது தான் ஜி.எஸ்.பி சலுகை கிடைக்கும்.

சீமெந்து. கேஸ். அரசி, பால்மா வகைகளை நிறுத்த எந்த முன்னெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை.

ஹரீன் பெர்னாண்டோ ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.

இரண்டு வருடங்களாக நாட்டுக்கு ஏற்படுத்திய பாதிப்பை ஒப்புவிக்கும் ஆவணமாகவே இம்முறை வரவுசெலவுத் திட்டம் அமைந்துள்ளது.

இரண்டு வருடத்திற்கு முன்னர் பால்சோறு பகிர்ந்து மகிழ்ச்சி கொண்டாடிய மக்கள் ஜனாதிபதி மீது பெரும் எதிர்பார்ப்பை கொண்டிருந்தனர். அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் அந்த மக்கள் தற்போது வெறுப்புடன் உள்ளனர்.

கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்ட எந்த ஒரு நாட்டிலும் சமையல் எரிவாயு, பால்மா, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு கியூ வரிசை இடம் பெறவில்லை. தேசிய ஒற்றுமை தான் நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப உதவும் எனினும் இங்கு அதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எந்த நாட்டிலும் இல்லாதவாறு தமக்கு வாக்களித்தவர்கள் பாதிக்கும் வகையில் செயற்பட்ட நாடு இதுதான்.

கிழக்கின் குரல்

மட்டு.மாவட்ட பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் நேற்று ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 முதல் 9 வரையான தரங்களுக்கான கற்றல் செயற்பாடுகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. அண்மையில், தரம் ஒன்று முதல் 5 வரையிலான வகுப்புகளும் 10 முதல் உயர்தர வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், சகல தரங்களுக்குமான கற்றல் செயற்பாடுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 சதவீனமானவர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளித்திருந்ததாக பாடசாலை அதிபர்கள் தெரிவித்தனர். (படங்கள்: மட்டக்களப்பு குறூப் நிருபர்)

கிழக்கில் அதிபர்களுக்கான 5 நாள் வாண்மை விருத்திச் செயலமர்வு !

(காரைதீவு குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த தரம் பெற்ற அதிபர்களுக்கான ஐந்துநாள் வாண்மை விருத்திச் செயலமர்வு ஆரம்பமாயிருக்கின்றது.

கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் ஏற்பாட்டில் இச் செயலமர்வு நடைபெற்றுவருகிறது.

முதலாம் கட்டமாக 75 அதிபர்களுக்கான செயலமர்வு மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் சர்வோதய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றுவருகின்றது.

திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை கல்முனை மாவட்டங்களைச்சேர்ந்த 75அதிபர்கள் இதில் கலந்துகொள்கின்றனர்.

இது தொடர்பாக கிழக்குமாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்திடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

நீண்டகாலமாக பாடசாலை முகாமைத்துவத்தில் இற்றைப்படுத்தப்பட்ட நடைமுறைகள் சுற்றுநிருபங்கள் தொடர்பாக அதிபர்கள் மத்தியில் தெளிவின்மை நிலவுவது அவதானிக்கப்பட்டதையடுத்து இத்தகைய செயலமர்வின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

கிழக்கு மாகாணபாடசாலைகளில் கடமையாற்றும் தரம்பெற்ற அதிபர்கள் கட்டம் கட்டமாக இப்பயிற்சி நெறிக்கு அழைக்கப்படுவார்கள். முதற்கட்டமாக 75பேர் தற்சமயம் சத்துருக்கொண்டானில் பயிற்சிபெற்றுவருகின்றனர். எதிர்வரும் ஞாயிறன்று அது நிறைவடையும்.

அடுத்த இரண்டு அதிபர் அணிகளுக்கான பயிற்சிநெறிகள் அடுத்தடுத்தவாரங்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

10 கஜ முத்துக்களை விற்பனை செய்ய முயன்ற மூவர் விசேட அதிரடிப்படையினரால் கைது

சட்டவிரோதமான முறையில் 10 கஜ முத்துக்களை விற்பனை செய்ய முயன்ற மூன்று பேரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

அம்பாறை வரிப்பத்தான்சேனை அஸ்ரப் ஞாபகார்த்த மைதான பகுதியில் இச்சட்டவிரோத செயற்பாடு இடம்பெறவுள்ளதாக கல்முனை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு ஞாயிற்றுக்கிழமை (21) மாலை கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கஜ முத்துக்களை 10 மில்லியன் ரூபாவிற்கு விற்பனை செய்ய சந்தேகநபர்கள் முயன்றுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

மேலும் இச்சோதனை நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர் சேனாதீரவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி வேவிட விதான வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படையின் தலைமையதிகாரி மெரில் டயஸ் தலைமையிலான அதிரடிப் படையினர் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டு 45 ,50 வயது மதிக்கத்தக்க மல்வத்தை பகுதியை சேர்ந்த இரு சந்தேக நபர்கள் உட்பட வரிப்பத்தான்சேனையை சேர்ந்த மற்றுமொரு சந்தேக நபரையும் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சந்தேக நபர்கள் மூவரையும் மற்றும் சான்று பொருட்கள் யாவும் இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இறக்காமம் பொலிஸார் அம்பாறை நீதிமன்றில் சந்தேக நபர்களை ஆஜர் படுத்தினர்.

மூதூரில் நஞ்சற்ற மரக்கறி பயிரினங்கள் உற்பத்தி

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சம்பூர், வேதத்தீவு, இறால்குழி, உப்புக்காச்சிமடு, சந்தனவெட்டை போன்ற தோட்டக் காணிகளில் சேதனப் பசளையினை பயன்படுத்தி பல்லின மரக்கறி பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மேலும் இம்மரக்கறி பயிரினங்களை நஞ்சற்ற உணவுகளாக மாற்றும் நடவடிக்கையாகவும் அரசினால் நடைமுறைப்படுத்தும் படியாக வேண்டப்பட்டுள்ள சேதனப் பசளை பாவனையை முழுமையாக பயன்படுத்தியும் தோட்டக்காரர்கள் பெருமளவில் கத்தரி, தக்காளி, கறிமிளகாய், வெண்டி, பயத்தை, புடலை உள்ளிட்ட பல்லின மரக்கறிப் பயிரினங்களை உற்பத்தி செய்துள்ளனர்.

கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலையின் புதிய மூன்றுமாடி அலுவலகக்கட்டடம் திறப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு கல்லடி உப்போடைசிவாநந்தா தேசிய பாடசாலையில் 'அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் கருத்திட்டத்தின் கீழ் கல்வியமைச்சினால் அமைக்கப்பட்ட புதிய மூன்று மாடியைக் கொண்டமைந்தசுவாமிவிபுலானந்தர் அலுவலகக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழா 19 (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் ந.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், பாடசாலையின் புதிய கட்டடத் தொகுதியினையும் உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தார்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தஜீ மஹராஜ்,மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார், மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் பாடசாலை வேலைப் பிரிவின் மாவட்டப் பொறியியலாளர் எந்திரி. அ.சுரேஸ்குமார் உள்ளிட்ட பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ்.சந்திரகுமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சுவிஸ் உதயம் அமைப்பினால் கோழிப்பண்ணை கையளிப்பு

மணல்சேனை நிருபர்

சுவிஸ் உதயம் அமைப்பின் ஏற்பாட்டில் வாழ்வாதாரத்தை இழந்த பெரியநீலாவணையினைச் சேர்ந்த ஒரு குடும்பத்திற்கு கோழிப்பண்ணை அமைத்துக் கொடுத்து அதனை திறந்துவைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை 21 ஆம் திகதி சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாணக் கிளையின் தலைவர் ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் மு.விமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

சுவிஸ் உதயம் அமைப்பினரிடம் இக் குடும்பத்தினர் வேண்டிக்கொண்டதற்கு இணங்க ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியில் இவ் உதவித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் தலைவர் டி.எல்.சுதர்சன் செயலாளர் அம்பலவாணர் ராஜன், பொருளாளர் க.துரைநாயகம் மற்றும் அமைப்பின் நிருவாக சபை உறுப்பினர்களின் முயற்சியினால் இவ் உதவி வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் செயலாளர் அம்பலவாணர் ராஜன், கிழக்குமாகாணக்கிளையின் பொருளாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியன், கணக்காய்வாளர் நாகேந்திரன் உறுப்பினர்களான ஆசிரியர் ஜீவராஜ், கண்ணன், ஓய்வுநிலை ஆசிரியர் குணசேகரம், அகிலன் மற்றும் மட்டக்களப்புக்கான இணைப்பாளர் ரோமிலா ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

சமுர்த்தி சௌபாக்கியா மனைப்பொருளாதார திட்டத்தின் கீழ் வாழ்வாதார உபகரணங்கள்

கந்தளாய் தினகரன் நிருபர்

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைய சமுர்த்தி சௌபாக்கியா மனைப் பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் வருமானம் குறைந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வு கடந்த (21) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான கபில நுவன் அத்துக்கோரள தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் வாழ்வாதார உபகரணங்களான தையல் இயந்திரம்,நீர்ப்பம்பி,குளிர்சாதனப் பெட்டி உள்ளிட்ட சந்தைப்படுத்தல், விவசாய உபகரணங்கள் போன்றன இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மானியமாக இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன.தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவை உள்ளடக்கிய சுயதொழிலை விருத்தி செய்யவும் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடையவும் இவ்வாறான உதவிகள் அரசாங்கத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது .

மொத்தமாக 6.3 மில்லியன் ரூபா பெறுமதியான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் ,சமுர்த்தி தலைமை முகாமையாளர் சித்திக் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

'நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் சவால்களும்' நூல் வெளியீடு !

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம். அஸ்லம் சஜா எழுதிய 'நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும், சவால்களும்' எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு நிகழ்வு சாய்ந்தமருது கமு/கமு/அல் ஹிலால் வித்தியாலய கூட்டமண்டபத்தில் எம்.ஐ. முஹம்மட் சதாத் தலைமையில் (20) சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

சாய்ந்தமருது இயற்கையை நேசிக்கும் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கையின் ஐக்கிய நாடுகளுக்கான (ஜெனீவா) முன்னாள் நிரந்தரப் பிரதிநிதியும், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருமான ஏ.எல்.ஏ.அஸீஸ் கலந்து கொண்டு பிரதம உரை நிகழ்த்தினார். நூலின் ஆய்வுரையை பேஜஸ் பதிப்பக பிரதானியும், இலக்கிய விமர்சகருமான சிராஜ் மசூர் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் (கலாநிதி) றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ, ஜெகதீஸனும் விசேட அதிதியாக கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீப் கலந்து கொண்டார். மேலும் சம்மாந்துறை பிரதேச சபை தலைவர் ஏ.எம். நௌசாத், இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எல். எம். சலீம், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், சாய்ந்தமருது ஜும்மாப் பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபதுல் கரீம், கல்முனை முஹையதீன் ஜும்மாப்பள்ளிவாசல் தலைவர் டாக்டர் ஏ.எம். அஸீஸ், உலமாக்கள், சட்டத்தரணிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், வலயக்கல்வி அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், இலக்கியவாதிகள், சமூக நல ஆர்வலர்கள், சாய்ந்தமருது இயற்கையை நேசிக்கும் மன்றத்தின் செயற்பாட்டாளர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச செய்திகள்

நெதர்லாந்தில் 3ஆவது நாளாகவும் வன்முறை

கொரோனா தொற்றுக்கு எதிரான கடும் கட்டுப்பாடுகளை எதிர்த்து நெதர்லாந்து எங்கும் மூன்றாவது நாளாக கடந்த ஞாயிற்றுக்கிழமையும் வன்முறை வெடித்தது.

தெற்கு நகரான ரூசென்டாலில் உள்ள பாலர் பாடசாலை ஒன்றின் மீது தீ வைக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து 15 பேர் கைது செய்யப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சொத்துகள் மீது குழுக்கள் சேதம் விளைவித்ததை அடுத்து வடக்கு நகரான கிரோனிங்களில் கலகமடக்கும் பொலிஸார் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் வீதிகளுக்கு வருவதை தடுப்பதற்கு எல்செட் நகரில் அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கலவரம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இதுவரை மொத்தம் 130 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். நோய்த் தொற்று சம்பவங்களில் முன்னெப்போதும் இல்லாத அதிகரிப்பு பதிவானதை அடுத்து நெதர்லாந்தில் மூன்று வாரங்கள் பகுதி அளவு முடக்க நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இரவு எட்டு மணிக்கு பின் மதுபான கடைகள் மற்றும் உணவகங்களை மூடவும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் கூட்டம் கூடுவதற்கும் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

விண்கல்லில் மோதுவதற்கு விண்கலம் நாளை பயணம்

விண்கல் ஒன்றின் மீது தாக்குதல் தொடுக்கும் முயற்சியாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா விண்கலம் ஒன்றை நாளை புதன்கிழமை விண்ணில் செலுத்தவுள்ளது.

விண்கல்லில் மோதவிடுவதன் மூலம் அந்த விண்பொருளின் பயணப் பாதையில் ஏற்படும் தாக்கம் பற்றி இதன்மூலம் விஞ்ஞானிகள் ஆய்வு செய்யவுள்ளனர்.

பூமிக்கு அச்சுறுத்தலாக கருதப்படும் விண்கற்களின் பாதையை மாற்றும் சாத்தியமான முறை பற்றி ஆய்வு மேற்கொள்ளவே இந்த விண்கலம் செலுத்தப்படுகிறது.

டார்ட் என்று சுருக்கமாக அழைக்கப்படும் இரட்டை குறுங்கோள் திசைமாற்ற சோதனை விண்கலம் கலிபோர்னியாவில் உள்ள வன்டன்பர்க் விண்வெளிப் படைத்தளத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் பல்கோன் 9 ரொக்கெட் மூலம் செலுத்தப்படவுள்ளது.

பெட்டி வடிவிலான இந்த விண்கலம் 6.8 மில்லியன் மைல்கள் பயணித்து 2022 ஒக்டோபரில் டைமார்போஸ் என்ற சிறிய விண்கல்லில் மோதும். இந்த சிறிய விண்கல் டிடிமோஸ் என்ற பெரிய விண்கல் ஒன்றை மணிக்கு 13,500 மைல் வேகத்தில் வலம் வருகிறது.

காலிதா சியா

வெளிநாட்டில் சிகிச்சை பெற அனுமதி கேட்டு ஆர்ப்பாட்டம்

நோயுற்றிருக்கும் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் காலிதா சியா சிகிச்சை பெற வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு கோரி ஆயிரக்கணக்கான எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பங்களாதேஷ் பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொண்டதோடு 20 பேர் வரை காயமடைந்தனர்.

தற்போதைய பிரதமர் செய்க் ஹசினாவின் போட்டியாளரான 76 வயதான சியா, இந்த மாத ஆரம்பத்தில் டாக்கா மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல்நிலை மோசமடைந்து வருவதாக மருத்துவர் ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

2018 இல் ஊழல் குற்றச்சாட்டில் குற்றங்காணப்பட்ட அவருக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

டாக்காவில் நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சியாவின் பங்களாதேஷ் தேசிய கட்சியைச் சேர்ந்த 15,000க்கும் அதிகமான ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்ததாக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டபோதும் சுமார் 7,000 பேர் வரையே கலந்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் தொலைக்காட்சி நாடகங்களில் பெண்களுக்கு தடை

தொலைக்காட்சி நாடகங்களில் பெண்கள் தோன்றுவதற்கு ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

திரையில் பெண் ஊடகவியலாளர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் முக்காடு அணியும்படியும் தலிபான்கள் அமுல்படுத்தி இருக்கும் புதிய விதிகளில் கூறப்பட்டுள்ளது. எனினும் எந்த வகையில் தலையை மறத்துக் கொள்ள வேண்டும் என்று அந்த வழிகாட்டலில் கூறப்படவில்லை.

சில விதிகள் தெளிவற்று இருப்பதாகவும் விளக்கம் தேவையாக இருப்பதாகவும் செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் நடுப்பகுதியில் ஆப்கானில் ஆட்சியை கைப்பற்றிய தலிபான்கள் படிப்படியாக கடுமையான கட்டுப்பாடுகளை கொண்டுவருவதாக அஞ்சப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் கூட்டணி படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து ஆட்சியைப் பிடித்த விரைவிலேயே தலிபான்கள், பெண்கள் பாடசாலை செல்வதில் இருந்து வீடுகளில் இருக்கும்படி உத்தரவிட்டனர்.

1990களில் தலிபான்கள் முன்னர் ஆட்சியில் இருந்தபோது, பெண்கள் கல்வி கற்கவும் வேலைக்குச் செல்லவும் தடை விதித்தனர்.

இந்நிலையில் ஆப்கான் தொலைக்காட்சிகளில் வெளியிடப்பட்ட தலிபான் வழிகாட்டல்களில் எட்டு புதிய விதிகள் இடம்பெற்றுள்ளன.

இதில் ஷரிஆ அல்லது இஸ்லாமிய சட்டம் மற்றும் ஆப்கான் பெறுமானங்களுக்கு எதிரான திரைப்படங்களுக்கு தடை விதிப்பதாகவும். உடலின் அந்தரங்க பாகங்களை ஆண்கள் வெளிப்படுத்தும் காட்சிகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

மதத்தை அவமதிக்கும் அல்லது ஆப்கானை தாக்குவதாக கருதப்படும் நகைச்சுவை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு கலாசார பெறுமானங்களை ஊக்குவிக்கும் வெளிநாட்டு திரைப்படங்களையும் ஒளிபரப்பக் கூடாது என்று தலிபான்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆப்கான் தொலைக்காட்சி அலைவரிசைகள் அதிகம் வெளிநாட்டு நாடகங்களையே ஒளிபரப்புவதோடு அவைகளில் பெண்கள் பிரதான பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

ஐரோப்பாவில் ஆர்ப்பாட்டங்களுக்கு இடையே ஆஸ்திரியாவில் முடக்கம்

ஐரோப்பாவில் வேகமாக பரவி வரும் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு கொண்டுவரப்படும் புதிய கட்டுப்பாடுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் வலுத்து வரும் நிலையிலும் ஆஸ்திரியாவில் முழுமையான தேசிய முடக்க நிலை மீண்டும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் ஆஸ்திரியர்கள் வீடுகளில் இருந்து வேலை செய்யும்படியும் அத்தியாவசியமற்ற கடைகளை மூடும்படியும் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த புதிய கட்டுப்பாடுகள் ஐரோப்பா எங்கும் ஆர்ப்பாட்டங்களை தூண்டியுள்ளது. நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பொலிஸார் இடையே மோதல் வெடித்தது.

தடுப்பூசிகள், முகக்கவசம் அணிவது மற்றும் கொவிட் தடுப்பூசி அனுமதிகளை செயல்படுத்துவது போன்ற கட்டுப்பாடுகளை இறுக்காத பட்சத்தில் அடுத்த வசந்தகாலத்தில் அரை மில்லியனுக்கும் அதிகமானவர்கள் ஐரோப்பாவில் உயிரிழக்கக் கூடும் என்று உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பிய பணிப்பாளர் டொக்டர் ஹான்ஸ் குலுஎஜ் எச்சரித்துள்ளார்.

ஐரோப்பாவில் முதல் நாடாக ஆஸ்திரியா கொவிட் தடுப்பூசி பெறுவதை கடந்த வாரம் கட்டாயமாக்கியது. இது வரும் பெப்ரவரியில் அமுலுக்கு வரவுள்ளது. அண்டை நாடான ஜெர்மனியில் அவசர சிகிச்சை பிரிவில் நோய்த் தொற்றுக்கு உள்ளானோர் அதிகரித்து வரும் நிலையில் இது போன்ற நடவடிக்கையை எடுக்க ஆலோசித்து வருகிறது.

இந்நிலையில் பெருந் தொற்று ஆரம்பித்தது தொடக்கம் ஆஸ்திரியாவில் நான்காவது முடக்க நிலை கொண்டுவரப்பட்டுள்ளது.

பணிக்குச் செல்வது, உடற்பயிற்சி மற்றும் உணவுக்காக கடைக்கு செல்வது உட்பட அத்தியாவசிய காரணங்கள் தவிர்த்து அனைவரும் வீடுகளில் இருக்கும்படி நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இந்த முடக்கநிலையை ஒட்டி தலைநகர் வியன்னாவில் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமெரிக்காவில் கிறிஸ்மஸ் பேரணி மீது வாகனம் மோதி ஐவர் பலி: பலர் காயம்

அமெரிக்காவின் விஸ்கோசின் மாநிலத்தில் கிறிஸ்மஸ் பேரணி ஒன்றின் மீது வேகமாக வந்த வாகனம் மோதிச் சென்றதில் ஐவர் கொல்லப்பட்டதோடு மேலும் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

வோகேசா நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை விளையாட்டுக்கு பயன்படுத்தப்படும் வாகனம் வேகமாக கூட்டத்தினர் மீது மோதிக் கொண்டு செல்லும் கட்சி பதியப்பட்ட வீடியோக்கள் இணையதளத்தில் வெளியாகியுள்ளன. சிறுவர்கள் உட்பட பல டஜன் பேர் மீது அந்த வாகனம் மோதி இருப்பதாக பொலிஸ் பிரதானி டான் தொம்சன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை இசைவாத்தியக் குழுவுக்கு பின்னாலேயே இந்த வாகனம் மோதியுள்ளதாக பார்த்தவர்கள் மற்றும் எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகள் மூலம் தெரியவருகிறது.

இது தொடர்பில் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் பயங்கரவாதச் செயலுடன் தொடர்புபட்டதல்ல என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் மற்றொரு சம்பவத்தில் இருந்து தப்பிச்செல்லும்போது பேரணியில் இருந்த கூட்டத்தினர் மீது மோதி இருப்பதாக இது பற்றி ஆரம்பக் கட்ட விசாரணைகள் தொடர்பில் தெரிந்த சட்ட அமுலாக்கல் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரின் வாகனத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இது பற்றி தீவிர விசாரணை நடந்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கூட்டத்தின் மீது செலுத்தப்பட்ட வாகனத்தை நிறுத்துவதற்கு பொலிஸார் அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து வோகேசாவில் உள்ள அரச பாடசாலைகள் நேற்று மூடப்பட்டன. வீதிகளும் தொடர்ந்து மூடப்பட்டிருந்தன.

எல்லை தடைகளை தளர்த்துகிறது ஆஸி

குறிப்பிட்ட குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் நுழைவதற்கான தடையில் குறிப்பிடத்தக்க தளர்வை கொண்டுவந்திருப்பதாக அவுஸ்திரேலிய அறிவித்துள்ளது.

வரும் டிசம்பர் 1 ஆம் திகதி நாட்டுக்குள் அனுமதிக்கப்படுபவர்களில் தொழில் தேர்ச்சி உடைய குடியேறிகள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள், அதேபோன்று ஜப்பான் மற்றும் தென் கொரிய பிரஜைகள் அடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த அனைவரும் முழுமையாக தடுப்பூசி பெற்றிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா தனது சொந்த குடிமக்கள் உட்பட உலகின் சில இறுக்கமான எல்லைக் கட்டுப்பாடுகளை கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் நடைமுறைப்படுத்தியது.

இந்நிலையில் கொண்டுவரப்பட்டிருக்கும் தளர்வு "முன்னோக்கிச் செல்வதற்கான முக்கியமான படி" என்று அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்தார்.

இந்த தளர்வு விதிகளின்படி, தகுதியுடைய விசா வைத்திருப்பவர்கள், பிரத்தியேக கட்டுப்பாடுகள் இன்றி, அவுஸ்திரேலியாவுக்கு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்கு மேற்பட்ட 85 வீதத்திற்கு அதிகமானவர்கள் தடுப்பூசி பெற்றிருக்கும் நிலையில் நாட்டை மீண்டும் திறக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனில் மருத்துவ கருவிகளில் பாகுபாடு

பிரிட்டனில் மருத்துவச் சாதனங்கள் சிலவற்றில் இனப் பாகுபாடு இருப்பதாக கூறப்படுவது பற்றி அந்நாட்டு சுகாதார அமைச்சு விசாரணை நடத்தவுள்ளது.

உடலின் உயிர்வாயு அளவைக் கணக்கிடும் கருவி இனப்பாகுபாட்டுக்கு எடுத்துக்காட்டாய் கூறப்படுகிறது. வைரஸ் தொற்றுக்கு ஆளானவர்களின் இரத்தத்தில் உயிர்வாயுவை மதிப்பிட அது பயன்படுத்தப்படுகிறது.

கருமையான தோல் நிறத்தைக் கொண்ட நோயாளிகளைச் சோதிக்கும்போது அந்தக் கருவி மிகையாக மதிப்பிடுவதாகச் கூறப்படுகிறது.

அதனால், வைரஸ் பரவல் காலத்தில் சிலருடைய உயிருக்கு ஆபத்து நேரலாம் என்ற கவலை எழுந்துள்ளது.

பிரிட்டனில் வைரஸ் தொற்றால் மரணமடைந்தோர், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுவோர் ஆகியோரில் கறுப்பினத்தவர் அல்லது மற்ற சிறுபான்மை இனத்தவரின் எண்ணிக்கை அதிகம் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

உயிர்வாயுவை அளவிடும் முறையில் ஏதேனும் இனப்பாகுபாடு உள்ளதா, தற்போதுள்ள கருவிகளால் அபாயம் நேரும் சாத்தியம் இருக்கிறதா, பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றி பிரிட்டன் ஆராய்கிறது.

ஜனவரி இறுதியில் முதற்கட்ட முடிவு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முடக்கநிலையை கைவிட நியூசிலாந்து புதிய உத்தி

புதிய கொரோனா கட்டுப்பாட்டு மூலோபாயத்தை செயற்படுத்த விருக்கும் நியூசிலாந்து நாட்டின் மிகப்பெரிய நகரான ஒக்லாந்தில் மூன்றரை மாதங்களாக அமுலில் இருக்கும் பொது முடக்கத்தை முடிவுக்கு கொண்டுவரவுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி பி.ப. 11.59க்கு புதிய கொரோனா நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாக நியூசிலாந்து பிரதமர் ஜெசின்டா ஆர்டன் தெரிவித்தார். இதன்படி கொரோனா தொற்றை முற்றாக ஒழிக்கும் திட்டத்திற்கு பதில் வேகமாகப் பரவக்கூடிய டெல்டா வைரஸ் திரிபை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

"டெல்டா இங்கு இருப்பதோடு அது விலகிச் செல்லாது என்பதே கடிமான உண்மையாகும்" என்று அவர் செய்தியாளர்களிடம் நேற்று தெரிவித்தார்.

நியூசிலாந்து இதுவரை கடுமையான முடக்கநிலை, தொடர்புகளை கண்டறிதல் மற்றும் கடுமையான எல்லைக் கட்டுப்பாடுகள் மூலம் கொரோனா தொற்றை முழுமையாக இல்லாமல் செய்யும் மூலோபாயத்தையே பின்பற்றி வந்தது.

இதன் மூலம் நாட்டில் இதுவரை நோய்த் தொற்றினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 40 க்கு மட்டுப்படுத்த முடிந்துள்ளது.

நகர்வலம்

பொருட்களை தட்டுப்பாடின்றி சலுகை விலையில் வழங்க அரசு நடவடிக்கை

1000 புதிய சதொச கிளைகள் விரிவுபடுத்தப்படும்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடு இன்றி சலுகை விலையில் வழங்குவதற்காக ஆயிரம் புதிய சதொச கிளைகளை விரிவுபடுத்தும் பணி நடைபெற்று வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 25 புதிய சதொச கிளைகளை திறந்து வைக்கும் ஆரம்ப நிகழ்வு அநுராதபுரம் ரம்பாவ நகரில் அண்மையில் இடம்பெற்ற போது அமைச்சர் அவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டும் ஒரே தடவையில் 25 புதிய சதொச கிளைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையை ஒன்றுபட்ட நாடாக மாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உருவாக்கிய பொருளாதாரம் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் மூலம் வருடா வருடம் சரிவை நோக்கி சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை பொறுப்பேற்ற பின்னர் வீழ்ச்சியடைந்திருந்த இந்நாட்டின் பொருளாதாரம் மிகவும் சிரமத்துடன் மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பூகோல பொருளாதாரம் மந்தநிலையில் இருந்தாலும் சகல பிரதேச செயலக பகுதிகளிலும் 3 சதொச நிலையங்களை திறப்பதன் மூலம் பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்களை குறைபாடின்றி சலுகை விலையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உலகளாவிய நாடுகளினுள் உற்பத்தி விநியோகம் வலைப்பின்னல் சரிவடைந்து செல்வதனால் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து காணப்படும் போது பொறுப்பில்லாமல் எதிர்க்கட்சி நாடு முழுவதும் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு குறுகிய அரசியல் நோக்கத்தை அடைவதற்கு செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நோய்த் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்க சகல நாடுகளும் நடவடிக்கை எடுத்து வரும் போது ஆர்ப்பாட்டம் செய்யும் ஒரே நாடு இலங்கை என்பதை காட்டுவதற்காக எதிர்க்கட்சி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உலக. வல்லரசுகள் வீழ்ச்சியடையும் போது சிக்கனமாக வேலை செய்து இந்நாட்டு மக்களை பாதுகாக்க கூடிய சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதனூடாக அத்தியாவசிய உணவு வகைகளை உயர் தரம் மற்றும் குறைந்த விலையின் கீழ் விநியோகிப்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான சமகால அரசாங்கம் பொறுப்பேற்று செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த இலக்கை அடைந்து கொள்ள எதிர் வரும் வருடங்களினுள் ஆயிரம் சதொச கிளைகளை விருத்தி செய்யவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, சதொச நிறுவனத்தின் தலைவர் ரியர் அத்மிரால் ஆனந்த பீரிஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி முருத் தெட்டுவே ஆனந்த தேரரை அண்மையில் நாரஹேன்பிட்டி அபேயராம விஹாரையில் தேசிய ஒற்றுமைக்கான சர்வமத கூட்டமைப்பின் சமதலைவர் அல்ஹாஜ் அஸ்செய்யத் கலாநிதி ஹசன் மௌலானா அல்காதிரி சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். இந் நிகழ்வில் கொழும்பு ஸ்ரீ அத்போதி விகாரையின் விஹாராதிபதி கலாநிதி கலகம தம்மரன்சி தேரரும் கலந்துகொண்டார். (படம்: ருஸைக் பாருக்)

அரூஸிய்யா தரீக்கா ஆன்மிக தலைவர் வெலிகம விஜயம்

(வெலிகம தினகரன் நிருபர்)

இலங்கை அரசாங்கத்தின் விஷேட விருந்தினராக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அரூஸிய்யதுல் காதிரிய்யா தரீக்காவின் ஆன்மிகத் தலைவர் அஷ்ஷேக் அல்லாமா அஹ்மது நாஸிர் ஆலிம் (ஜமாலி, எம்.ஏ.) நாளை (24) பிற்பகல் 12.30 மணிக்கு இலங்கையின் முதல் அறபுக் கல்லூரியான பாரி அறபுக் கல்லூரியில் அமைந்துள்ள புகாரிப் பள்ளிவாசலுக்கு வருகை தரவுள்ளார்.

இவரை வரவேற்று உபசரிக்கும் நிகழ்வில் முரீதீன்கள், முஹிப்பீன்கள், உலமாக்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். இவ்வரவேற்பு நிகழ்வை அரூஸிய்யதுல் காதிரிய்யா வெலிகம, கல்பொக்கை கிளை ஏற்பாடு செய்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் கொவிட் தொற்று தீவிரம்

அதிக பாடசாலை மாணவர்களுக்கும் கொரோனா தொற்று

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தில் கொவிட் கொரோனா வைரஸ் தொற்று நாளுக்கு நாள் தீவிரமாக பரவி வருவதாகவும், நாளொன்றுக்கு 300 பேருக்கும் அதிமான தொற்றாளர்கள் இனங் காணப்படுவதாகவும், அநுராதபுரம் மாவட்ட தொற்று நோய் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தேஜன சோமதிலக்க நேற்று (22) தெரிவித்தார்.

இதுவரை அநுராதபுரம் மாவட்டத்தில் 70 பாடசாலைகளில் 200 இற்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இனங் காணப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இம் மாவட்டத்தில் இதுவரை சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் சில பாடசாலைகளின் சில வகுப்புக்கள் மூடப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி மாவட்டத்தில் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கொவிட் தொற்றாளர்கள் தினந்தோறும் இனங் காணப்படுவதாகவும், இதுவரை 700 கொரோனா தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், ஆயிரத்துக்கும் அதிகமானோர் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் அதிகமானோர் சுகாதார வழிகாட்டல் விதிமுறைகளை கடைப்பிடிக்காது நடந்து கொள்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளது எனவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தொற்று நோய் விசேட வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார்.

சேத விபரங்களை கோரும் புத்தளம் பெரிய பள்ளிவாசல்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்வதற்கும்,

பாதிக்கப்பட்டோருக்கு முடியுமான உதவிகளை வழங்குவதற்கும் தரவுகளை சேகரித்து வருவதாக புத்தளம் பெரிய பள்ளி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களால் வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில்,

புத்தளத்திலுள்ள அதிகாரிகள், நிறுவனங்கள் மற்றும் சமூக நலன் சார் அமைப்புகளின் ஆதரவைக் கொண்டு உதவிகள் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்படவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

எனவே, புத்தளம் மாவட்டத்தில் இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது வீடுகள், வியாபார நிலையங்கள் மற்றும் வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் சேதமடைந்திருப்பின் அதுதொடர்பில் அறிக்கையிட முடியும்.

Grand Mosque Puttalam எனும் புத்தளம் பெரிய பள்ளியின் உத்தியோகப்பூர்வ முகநூல் பக்கத்தில் உள்ள லிங்க்கில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்தி அனுப்புமாறு புத்தளம் பெரிய பள்ளி நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு விண்ணப்பப் படிவங்களை மாத்திரம் பூரணப்படுத்தி அனுப்புமாறும், மேலதிக விபரங்களுக்கு புத்தளம் பெரிய பள்ளி நிர்வாகத்தினரை தொடர்பு கொள்ளுமாறும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் 83,156 கொரோனா தொற்றாளர்கள்

(வெலிகம தினகரன் நிருபர்)

தென் மாகாணம் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்கள் அடங்கலாக இதுவரை கொரோனா தொற்றாளர்கள் 83,156 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக தென் மாகாண கொரோனா தடுப்புமைய இணைப்பதிகாரி ஷாமர மஹகமகே தெரிவித்தார்.

நேற்றுமாத்திரம் தென் மாகாணத்தில் 483 பேர் அடையாளம் காணப்பட்டனர். இதன்படி மாத்தறை மாவட்டத்தில் 249 பேரும் காலிமாவட்டத்தில் 135 பேரும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 94 பேரும் சிறைக்கைதிகளில் இருந்து 5 பேரும் இனம் காணப்பட்டனர். இப்பகுதியில் தினமும் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

களுத்துறை வலயக்கல்விப் பணிப்பாளராக பல வருடகாலம் சேவையாற்றிய திருமதி பிரியானி முதலிகே அண்மையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். இவரின் சேவையை பாராட்டி சீனன்கோட்டை மக்கள் சார்பில் பேருவளை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினரும் சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைப்பாளருமான ஏ. இஸட். எம். ஸவாஹிர் ஹாஜியார் நினைவுச்சின்னம் வழங்கிய போது எடுத்த படம். (படம்: பேருவளை விசேட நிருபர்)

புத்தளம் நகர சபையின் பட்ஜெட் ஏகமனதாக நிறைவேற்றம்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் நகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக்கினால் முன்வைக்கப்பட்ட இவ் வரவு செலவு திட்டம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகர சபையின் மாதாந்த அமர்வு நகர பிதா தலைமையில் அண்மையில் நகர சபை பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது நகரபிதா எதிர்வரும் 2022ம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார்.

நகரசபை உறுப்பினர்களின் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதை தொடர்ந்து வரவு செலவு திட்டம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றபட்டது.

முன்னாள் நகர பிதா மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் மறைவுக்கு பின்னர் நகர சபை தலைவராக தெரிவான எம்.எஸ்.எம்.ரபீக்கின் கன்னி வரவு செலவு திட்டம் இதுவாகும்.

வரவு செலவு திட்டத்தில், நெருக்கடியான தற்போதைய நிலைமையிலும் வரியிறுப்பாளர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

நகர பிதாவினால் முன்மொழியப்பட்ட, 2022 இல் பொது மக்களுக்காக வழங்கப்பட்ட சில சலுகைகள் வருமாறு;

- மாட்டிறைச்சிக்கான நிர்ணய விலை ஒரு கிலோ 1000 ரூபாய், கலவன் ஈரல் 1200 ரூபாய்.
- தொழில் தவிர்ந்த சொந்தத் தேவைகளுக்காக வாகனங்கள் வைத்திருப்பவர்களுக்கு ஒரு வருடத்திற்கான வாகனத் தரிப்பிட கட்டணமாக ரூபா 1000 என வரையரை.
- நகர சபையின் மாவட்ட விளையாட்டு அரங்கத் தொகுதியின் உள்ளக விளையாட்டரங்கு, கால்பந்து மைதானம் மற்றும் நீச்சல் தடாகங்கள் ஆகியவற்றின் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- தட களப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு தடகளப் பயிற்சிக்கான மைதானக் கட்டணம் இலவசம்.
- நகர சபையின் நவீன கேட்போர் கூடத்திற்கான ஒரு நாள் வாடகை 80 ஆயிரம் ரூபாவிலிருந்து 40 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.
- நகரசபைக்குச் சொந்தமான கடைகளை பெயர் மாற்றம் செய்வதற்கான கட்டணம் ஒரு சதுர அடிக்கு 2000 ரூபாவிலிருந்து 1000 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- வியாபார அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணத்தோடு அறவிடப்பட்ட சகல சேவைக் கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.
- நகரசபையில் பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிட கட்டணம் நாளொன்றுக்கு 20 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு அளப்பரிய சலுகைகளை வழங்கியுள்ள நகர பிதா எம்.எஸ்.எம். ரபீக் அவர்களுக்கும், நகர சபை உறுப்பினர்களுக்கும் பொதுமக்கள் வாழ்த்துக்களை தெரிவித்ததோடு பட்டாசுகளை கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

புத்தளத்தில் ஜே.வி.பியின் தெளிவூட்டும் நிகழ்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)

மக்கள் விடுதலை முன்னணியினால் (ஜே.வி.பி) பொது மக்களுக்கு நாட்டு நிலைமை தொடர்பாகத் தெளிவூட்டும் நிகழ்வொன்று 27 ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் புத்தளத்தில் நடைபெறவுள்ளது.

"ஊரிலிருந்து தொடங்குவோம், வனப்புமிக்க தேசம், அழகான வாழ்க்கை" என்ற தொனிப்பொருளில் வாழ்க்கையை வனப்புமிக்கதாக்க தீர்வுகள் மற்றும் அதற்கான முன்மொழிவுகள் எனும் அம்சங்களை உள்ளடக்கியதாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க உட்பட புத்தளம் தொகுதி செயற்குழு மற்றும் இளைஞர் குழு வினர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

புத்தளத்துக்கு வருகை தரும் ஜே.வி.பி. யின் உயர்மட்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாட வருகை தருமாறு ஜே.வி.பி புத்தளம் செயற்பாட்டாளர் ஹிஷாம் ஹுஸைன் புத்தளம் வாழ் பொது மக்களுக்கு அழைப்புவிடுத்துள்ளார்.

நாச்சியாதீவில் பெரும்போக நெற்செய்கை புறக்கணிப்பு

(திறப்பனை தினகரன் நிருபர்)

அநுராதபுர மாவட்ட ஹிதோகம விவசாய வதிவிடப் பிரிவின் நாச்சியாதீவு விவசாய பகுதியில் இம்முறை பெரும்போக நெல் உற்பத்தியில் ஈடுபட இது வரையில் பலர் முன் வரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வாய்க்கால்களுக்கு நீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் மாத்திரம் நெல் உற்பத்திக்கான ஆரம்ப கட்ட வேலைகள் இடம் பெற்றுள்ளன.

ஏனைய பெருமளவு வயல் நிலங்கள் கைவிடப்பட்டு காணப்படுகின்றன. தமக்கு இரசாயன பசளை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தே இவர்கள் இம்முறை பெரும் போக நெற் செய்கையில் ஈடுபட முன்வரவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாச்சியாதீவு குளத்தின் கீழ் நெற் செய்கை மேற் கொள்ளப்படும் பிரதேசத்தின் ஏனைய அனேகமான இடங்களில் நெற் செய்கைக்கான ஆரம்ப கட்ட வேலைகளை விவசாயிகள் தற்சமயம் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் "சேதன பசளையை" பயன் படுத்தி இம்முறை நெற் செய்கையில் ஈடுபட முன் வந்துள்ளனர்.

தேசிய லொத்தர் சபை

2022 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்

2022 ஆம் ஆண்டுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தேசிய லொத்தர் சபையுடன் தம்மை பதிவு செய்வதற்கு விரும்பும் வழங்குநர்கள், விநியோகஸ்தர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01) பொருட்கள்/ உருப்படிகளின் வழங்கல்

A. மோட்டார் வாகனங்கள் தொடர்பானவை
01. மோட்டார் உதிரிப்பாகங்கள்
02. டயர்கள், ட்யூப்கள் மற்றும் பெட்டரிகள்
03. வாகன செவிப்புல மற்றும் கட்புல உபகரணம்
04. ஏனைய வாகனத் துணைப்பொருட்கள் (உதா. ஸ்டீரிங் வீல் உறை, central locking systems முதலியன)

B. ஊக்குவிப்பு தொடர்பானவை
01. பெண்கள் மற்றும் ஆண்களுக்கான குடைகள்
02. முத்திரைப் பெயருடனான/ அல்லாத பீங்கான்/ களிமண்/ கண்ணாடி உருப்படிகள்
03. கீ டெக் மற்றும் அதனையொத்த உருப்படிகள்
04. முத்திரைப் பெயருடனான பேனாக்கள்
05. மின் மற்றும் இலத்திரன் ஊக்குவிப்பு உருப்படிகள்
06. தோல் மற்றும் தோல் அல்லாத அலுவலக மற்றும் பயணப்பைகள்
07. முத்திரைப் பெயருடன் தொப்பிகள், டீ சேர்ட்கள்
08. சூடு மற்றும் குளிர் போத்தல்கள் மற்றும் கொள்கலன்கள்
09. திறன்பேசிகள் மற்றும் துணைப் பொருட்கள்
10. கோபரேட் பரிசுகள்

C. விற்பனை உதவி உருப்படிகள்
01. சுவரணை சட்டகம், விளம்பரப் பலகை உட்புற மற்றும் வெளிப்புற ஊக்குவிப்பு பொருட்கள்
02. மிதவைகள் மற்றும் காட்சி வாகனங்கள்
03. டிக்கெட் விற்பனை சாவடிகள்/ விற்பனைக் கூடங்கள்
04. குடைகளுடன் கூடிய விற்பனை பலகைகள்
05. லொத்தர்களை தொங்கவிடும் பலகைகள் மற்றும் விற்பனை பொருட்கள்
06. பெரிய கூடாரம், மேற்கவிகை மற்றும் சிறு குடில்கள்
07. கவுண்டர் பழுதுபார்த்தல் மற்றும் ஸ்டிக்கர்
08. மிதி வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள்
09. லொத்தர் விற்பனை பலகைகள்

D. IT தொடர்பானவை
01. கணினிகள் மற்றும் கணினி துணைப்பொருட்கள்
02. அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், தொலைநகல் இயந்திரங்கள், நிழற்பிரதி இயந்திரங்கள் மற்றும் அச்சுப்பொறி துணைப்பொருட்கள்
03. வலைப்பின்னல் உபகரணம் மற்றும் துணைப்பொருட்கள்
04. கண்காணிப்பு அமைப்புகள்
05. மின் உற்பத்தி மற்றும் முகாமைத்துவ உபகரணங்கள்

(01–05) அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண் மையாளர்கள் மாத்திரம்

E. அச்சு தொடர்பானவை
01. டுப்ளோ, ஓப்செட், பிலெக்சோ மற்றும் ஸ்கீரீன் அச்சு பொருள்
02. டிஜிட்டல் அச்சு பொருள்

F. கட்டடம் தொடர்பானவை
01. அலுவலகம் மற்றும் வீட்டுத் தளபாடம்

G. எழுதுபொருள் தொடர்பானவை
01. டோனர் காட்ரிட்ஜ்கள் மற்றும் அச்சு நுகர்வு உருப்படிகள்
02. பொதுவான எழுதுபொருள் உருப்படிகள்

H. பொதுவானவை
01. மின் மற்றும் இலத்திரனியல் உருப்படி (உதா. தொலைக்காட்சிப் பொட்டி, குளிர்சாதனப்பெட்டி)
02. ஏனைய வீட்டுப் பொருட்கள் (உதா. படுக்கை துணி, துடைக்கும் துணி, வெட்டுக்கருவி மற்றும் சமையல்)
03. குடிநீர் போத்தல்
04. தொலைத்தொடர்பு உருப்படிகள்
05. தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் மற்றும் பொருள்

02) சேவைகள் வழங்கல்

A. மோட்டார் வாகனம் தொடர்பானவை (கொழும்பு நகர எல்லைகளில் இருந்து 8 கி.மீ. இற்குள் இருக்கும் வாகனம் பழுது பார்க்கும் இடம் மற்றும் சேவை நிலையங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன)
01. மோட்டார் வாகனங்கள் பழுதுபார்த்தல்
02. மோட்டார் ஒடோ மின் அமைப்புகளின் பழுதுபார்த்தல்
03. மோட்டார் வாகனம் நன்னிலைப்படுத்தல் மற்றும் உள்ளக சுத்தம் செய்தல்
04. ஒடோ வளிச்சீராக்கி பழுதுபார்த்தல்
05. இருக்கை உறை மற்றும் அப்ஹோல்ஸ்டரி
06. மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு பெறல்
07. வாகன ஸ்டிக்கரிங் மற்றும் பிராண்டிங்
08. வாகன விவரம் (உதா. நிறக்கண்ணாடி)

B. IT தொடர்பானவை
01. ஆற்றல், தரவு மற்றும் voice caballing மற்றும் இலத்திரன் பழுதுபார்த்தல்கள்
02. கணினி மற்றும் அச்சுப்பொறி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள்
03. தொடர்பாடல் அமைப்புகள் மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்

C. கட்டிடம் மற்றும் வளவு தொடர்பானவை
01. மின்பிறப்பாக்கி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள்
02. வளிச் சீராக்கி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள்
03. சிறிய சிவில் நிர்மாணம் மற்றும் புனரமைப்புகள்
04. சிறிய பொறிமுறை, மின், குழாய் பொருத்தல் (MEP) பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
05. உள்ளக மற்றும் வெளி அலங்காரங்கள் மற்றும் பிரித்தொதுக்கல்
06. அலுமினியம், பீ.வி.சி., உருக்கு மற்றும் மரப்பலகை புனைவு
07. தீயணைப்புச் சேவைகள்
08. வளவு சுத்தம் செய்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள்
09. பூச்சிக் கட்டுப்பாட்டு சேவைகள்
10. துப்புரவு சேவைகள்
11. தோட்ட பராமரிப்பு மற்றும் நிலத்தோற்றம்
12. காகிதம் மற்றும் கழிவு மறுசுழற்சி சேவைகள்

D. வரைகலை மற்றும் செவிப்புல கட்புல தொடர்பானவை
01. தகவல் பொருள் தயாரிப்பு (உதா. ஆவணங்கள்)

E. IT மற்றும் டிஜிட்டல் தளம் தொடர்பானவை
01. தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஈ-தள தீர்வுகள், நிலைப்படுத்தல் மற்றும் பராமரிப்பு

F. பொதுவானவை
01. ஆய்வு மற்றும் முகாமைத்துவ ஆலோசனை சேவைகள்
02. விரைதூதர் சேவைகள்
03. உணவு சேவைகள்
04. நிகழ்ச்சி முகாமைத்துவம்
05. வளாகத்தின் அலங்காரம் (உ.தா. விளக்குகள் மற்றும் ஒளியூட்டல்கள்)

A. மீளளிக்கப்படாத கட்டணமாக (வரி உடன்) 500 ரூபாவை செலுத்தி தேசிய லொத்தர் சபை தலைமை அலுவலகத்தில் இருந்து பதிவு படிவங்களை பெற முடியும். இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

B. ஒரு மாத கடன் வசதியை வழங்க வழங்குநர்கள் இணங்குதல் வேண்டும்.

C. எந்த ஒரு வழங்குநரும் ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படி அல்லது சேவையை வழங்குவதற்கு விரும்பினால், உருப்படி/ சேவை ஒன்றுக்காக (வரி உட்பட) 500 ரூபா செலுத்திய பின் பெற்றுக்கொள்ள முடியுமான படிவங்களில் வெவ்வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். படிவங்களில் உருப்படி இல. மற்றும் உருப்படிகளின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து வழங்குநர்களும் 2021.12.28 அன்று பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் **"பொது முகாமையாளர், தேசிய லொத்தர் சபை, இல. 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01"** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2022 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்"** என்று குறிப்பிட்டு கைகளால் சேர்த்தல் அல்லது பதிவுத் தபால் மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

D. கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை தேசிய லொத்தர் சபை வசமானது.

E. தமது கூறுவிலைகள் ஏற்கப்பட்ட பின் எந்த ஒரு உருப்படி அல்லது சேவையையும் வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் வழங்குநர்களின் பதிவில் இருந்து நீக்கப்படும்.
a. வழங்குநர்கள் பதிவுக்கான படிவங்களை தேசிய லொத்தர் சபை, வழங்கல்கள் பிரிவில் இருந்து பெற முடியும்.
b. தேசிய லொத்தர் சபை, நிதிப் பிரிவுக்கு ரொக்கப்பணமாக செலுத்த வேண்டும்.
c. 2021.12.13ஆம் திகதி வரை மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 2.30க்கு இடையே வார நாட்களில் படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து பொதுவாக கூறுவிலைகள் கோரப்படுகின்ற போதும் ஏனைய மூலங்களில் இருந்தும் கூறுவிலைகளை கோருவதற்கு சபைக்கு உரிமை உள்ளது. அரசு கொள்முதல் நடைமுறையின்படி

பொது முகாமையாளர்
தேசிய லொத்தர் சபை
இல. 32,
தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 011-4607000

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

NW AAE-5644 Bajaj, 2012, Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810 . 073372

வேலைவாய்ப்பு

325 தொழில்துறை பொது

ஹோமாகம, பனாகொடயிலுள்ள ரெம்பின்பேர்க் கைத்தொழில் உற்பத்திக் கம்பனிக்கு பயிற்சியுள்ள/ பயிற்சி இல்லாதவர்கள் அவர்களின் உற்பத்திப் பிரிவிற்கு தே வை . வயது 18 32. பிறிதான சலு கைகளுடன் சம்பளம். தயவு செய்து 0778869803 என்ற இலக்கத்திற்கு அழைப்பைக் கொடுக்கவும். 074292

கொழும்பில் பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் தேவாலய திறப்பு

கொழும்பில் ஆயர் டாக்டர் சாமுவேல் மோர் தலைமையில் இன்று 23 ஆம் திகதி பிலீவர்ஸ் ஈஸ்டர்ன் தேவாலய திறப்பு ஆசீர்வாதம் வழங்கும் விழா நடைபெறவுள்ளது.

மாநகர சபை – குருநாகல்

வழங்கல் அறிவித்தல்

குருநாகல் மாநகர சபைக்கு உரித்தான துணை ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட வாகனத்தரிப்பிட கட்டண அறவீட்டு உரிமத்தை ஒரு வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்கவும் லேக் சுற்றுவட்ட இல 1,2,3,4,5,6 கடைத்தொகுதிகள் உட்பட்ட வளாகத்தை ஹோட்டல் தொழிலுக்காக நீண்ட கால குத்தகைக்கு வழங்க விலைமனுக்கள் கோரப்படுகின்றன. **2021.12.14** ஆம் திகதி **பி.ப 2.00** மணி வரை முத்திரையிடப்பட்ட மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அதேநாளில் **பி.ப 2.00** மணிக்கு மனுக்கள் திறக்கப்படும். மனு ஆவணங்களை **2021.12.13** ஆம் திகதி **பி.ப 2.00** மணி வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத்தொகையை செலுத்தியதன் பின் காரியாலய நேரத்தில் கணக்கியல் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

வாகனத்தரிப்பிட விலைமனுக்கோரல்

வாகனத்தரிப்பிடத்தின் பெயர்	மனு ஆவணக்கட்டணம்	மீளச்செலுத்தப்படாத வைப்புத்தொகை	மனுவின் ஆரம்ப விலை
பெருந்தெரு I	ரூபா. 3000.00	ரூபா. 10000.00	ரூபா. 1762200.00
பெருந்தெரு II	ரூபா. 3000.00	ரூபா. 10000.00	ரூபா.1597200.00
போதிராஜ மாவத்தை	ரூபா. 3000.00	ரூபா. 10000.00	ரூபா. 1100220.00
மிஹிது மாவத்தை, கன்னியராம மாவத்தை, செத்செவன வைத்தியசாலை தொடக்கம் ஆயுர்வேத வைத்தியசாலை வரை	ரூபா. 3000.00	ரூபா. 10000.00	ரூபா. 1800000.00

லேக் சுற்றுவட்ட கடைத்தொகுதி இல 1,2,3,4,5,6 உட்பட்ட வளாகத்தை ஹோட்டல் தொழிலுக்காக நீண்ட கால குத்தகைக்கு வழங்குதல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இடம்பெறும்.

கடைத்தொகுதி இல	சதுர அடி அளவு	மனு ஆவணக்கட்டணம்	மீளச்செலுத்தப்படாத வைப்புத்தொகை	மனுவின் ஆரம்ப விலை
இல 1,2,3,4,5,6 உட்பட்ட பகுதி	15570.00	ரூபா.3000.00	ரூபா.10000.00	ரூபா.120000.00

மேலதிக விபரங்களை காரியாலய நேரத்தில் 0374941868/0374941869 ஐ தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

நகராட்சி ஆணையர்
மாநகர சபை
குருநாகல்

சுற்றுலாத்துறையினருக்கு வரவுசெலவுத் திட்டத்தில் நிவாரணம் வேண்டும்

சுற்றுலாத்துறை வழிகாட்டி விரிவுரையாளர் பராக்கிரம பண்டார

எம்.ஏ.அமீனுல்லா

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பாதிப்படைந்துள்ள சுற்றுலாத்துறையினருக்கு இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என மத்திய மாகாண சுற்றுலாத்துறை வழிகாட்டி விரிவுரையாளர் பராக்கிரம பண்டார தெரிவித்தார்.

கண்டி சிட்டி மிஷன் மண்டபத்தில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டுக்கு பில்லியன் கணக்கான டொலர்களை வருமானமாக பெற்றுத்தரும் சுமையை கொண்டுள்ள நாம், மீண்டும் டொலர்களை நாட்டுக்கு கொண்டுவர தயாராக இருக்கின்றோம் அதற்காக அரசாங்கத்திடமிருந்து சில நிவாரணங்களை எதிர்பார்க்கின்றோம்.

நாட்டுக்கு வருமானம் ஈட்டியவர்கள் ஏன் வரவு செலவுத் திட்டத்தில் மறந்து போனார்கள்? என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலைமையை நிதியமைச்சர் இப்போதாவது புரிந்து கொண்டு உரிய தவறை திருத்திக் கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது, ஏராளமான ஹோட்டல் உரிமையாளர்கள், வாகன உரிமையாளர்கள், வழிகாட்டிகள் மற்றும் சுற்றுலாத்துறையிலுள்ள இதர தொழில் பதவிகளில் உள்ளவர்கள் வருமானம் இல்லாமல் பரிதவித்து வருகின்றனர். இந்நிலையில், அவர்கள் மீண்டும் எழுச்சி பெற உதவுவது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும். அரசாங்கத் தரவுகளின்படி, 2018 ஆம் ஆண்டில் நாட்டிற்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2.3 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையில் சுமார் 700,000 பேர் வேலை செய்கின்றனர் அதில் சுமார் 300,000 பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் சார்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம் (Credit Number - P163305)

கட்டைவேலி உப அலுவலகம் மற்றும் ஆயுர்வேத மருந்தகம் அமைத்தல் - அல்வாய் தெற்கு

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு , உலக வங்கியிடமிருந்து பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்திற்காக கடனைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒருபகுதி கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்ட வேலைகளுக்கான புனரமைப்பு கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி, வடமாகாணம் சார்பாக தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழு அவர்களால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
3. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர் செயலாளர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி (தொலைபேசி : 021 226 3271, பெக்ஸ் : 021 226 3271) இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2021.12.21 ந் திகதி வரையான வேலை நாட்களில் 09:00மணி முதல் 15:00மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் பகுதி 5 இல் தரப்பட்டுள்ளது.
6. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் நிதி அமைச்சு அல்லது உலகவங்கி அல்லது ஏனைய ஏற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்களால் கறுப்பு பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் உள்நாட்டு ஒப்பந்தகாரர்கள் கீழ்வரும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் மூலம் 2021.11.23ந் திகதியிலிருந்து 2021.12.21ந் திகதி வரையான வேலைநாட்களில் 09:00 மணிக்கும் 15:00 மணிக்கும் இடையில் ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,500.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து கிழ்குறிப்பிட்ட முகவரியில். 2021.12.22ந் திகதி காலை 10:30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கீழுள்ள அட்டவணையில் தரப்பட்ட தகவலின்படி கேள்விக்காக கேள்விப்பிணை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2021.11.06ந் திகதி மாலை 14:30 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் வந்து பங்குபற்றலாம்.

இல	கேள்வி எண்	வேலை விபரம்	மதிப்பீட்டு தொகை	ஒப்பந்த காலம்	வேண்டப்படும் தரம்	கேள்விப் பிணை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகம் காலம்	வேண்டப்படும் கேள்விப் பிணை	
							பிணை வைப்பு	செல்லுபடியாகும் காலம்
01	LDSP/NP/JAF/ VADA.S.W.PS/ 2021/05	கட்டைவேலி உப அலுவலகம் மற்றும் ஆயுர்வேத மருந்தகம் அமைத்தல் அல்வாய் தெற்கு	10.12 மில்லியன்	90 நாட்கள்	C6 or above (கட்டடம்)	77 நாட்கள்	102,000/-	06.04.2022

தலைவர்,
உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழு,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி,
வடமாகாணம்.
23.11.2021

அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

இலங்கை, யக்கல, வெறெல்லவத்த இல. 11ஐச் சேர்ந்த இலக்கம் 536451471V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கம் L 0516936 இலங்கை கடவுச் சீட்டைக் கொண்ட ஹெட்டி ஆராச்சிகே கமலாவதீ ஆகிய நான் யக்கல, வெறெல்லவத்த இல. 11ஐச் சேர்ந்த இலக்கம் 785633946V என்ற தேசிய அடையாள அட்டையைக் கொண்ட குமார பேலி ஆரச்சிகே பூலா ருவினி என்பவருக்கு குவைத் தூதரகத்தில் இறோமி பெரேரா என்பவரினால்2011.06.15ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட துமான விஷேட அற்றோணி தத்துவம் ரத்துச் செய்யப்பட்டது என்று அறியத்தருகிறேன்.

ஹெட்டி ஆராச்சிகே கமலாவதீ

அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 06, கிருளபனை, நந்திமித்ர பிளேஸ், இல. 22/5C இல் வசிக்கும் காரியவசம் தெம்பிலியாகொடகே ப்ரபாத் குமார (தே.அ.அ.இல. 197205703148) ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு திரு. எம்.ஆர். கமகே என்பவரினால் 2010.07.07ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 136 இலக்கமுடையதும், கொழும்பு 06, நந்திமித்ர பிளேஸ், இல. 22/5C இல் வசிக்கும் எல்கிரியே ருவன்மெரு பத்திரணகே தயாவதி (தே.அ.அ.இல. 476191890V) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணி தத்துவமானது, இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களிற்கு நான் பொறுப்பு தாரியல்ல எனவும் பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

Kariya wasam thembiliyagodage prabath kumara
திகதி: 2021.11.20

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

அபிவிருத்தி லொத்தர் சபை

நிதி அமைச்சு

2022ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்தல்

2022ஆம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்கல் மற்றும் சிவில் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்வதற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்வதற்காக அதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துகின்ற அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்து அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வழங்கல் தலைப்புக்கு வேறு வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கின்ற ஒவ்வொரு வழங்கல் பிரிவும் கீழ் தரப்பட்டிருப்பதோடு அதில் ஒரு பிரிவுக்கு தொடர்புடைய பதிவுக் கட்டணம் வட் வரியுடன் ரூபா 540/- ஆகும். பதிவுக் கட்டணம் ஒவ்வொரு பிரிவுக்காகவும் வெவ்வேறாக செலுத்துதல் வேண்டும் இப்பதிவுக் கட்டணம் அபிவிருத்தி லொத்தர் சபையின் பெயரில் இலங்கை வங்கி கொள்ளுப்பிட்டி கிளையில் உள்ள 1630526 என்ற கணக்கில் வைப்புச் செய்தல் வேண்டும். கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பதாரரின் விண்ணப்பக் கடிதமொன்றைப் பெறுகைப் பிரிவில் சமர்ப்பித்து அல்லது Procurement@dlb.lk என்று மின்னஞ்சலிற்கு பிரதியொன்றை அனுப்பி விண்ணப்பப் படிவமொன்றை தபாலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

உருப்படி இலக்கம்	பொருட்கள் மற்றும் சேவை வழங்கல் தலைப்பு / உருப்படிகள்
01.	அலுவலக எழுதுபொருட்கள் வழங்கல்
02.	அலுவலக தளபாடங்கள் வழங்கல் (உருக்கு அலுமாரி, மேசை, கதிரை ஆகிய பொருட்கள் வழங்கல்)
03.	அலுவலக உபகரணங்கள் வழங்கல் (கணிப்பான், ரோணியோ, ஸ்கேன் இயந்திரம், பிரதி எடுக்கும் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், நிழற்பிரதி இயந்திரம்)
04.	அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் பராமரிப்பு மற்றும் சேவை வழங்கல்
05.	கணினி இயந்திரம், அச்சுப் பொறி, UPS, ஸ்கேன் இயந்திரம் ஆகியன வழங்கல்
6.	கணினிச் சேவை வழங்கல் மற்றும் பழுதுபார்த்தல்
07.	நிழற்பிரதி இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்
08.	சேவை பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக வளப் பங்களிப்பை வழங்கல்
09	குடிநீர் போத்தல் வழங்கல்
10.	அச்சு சேவை வழங்கல் (அனைத்து அச்சு செயற்பாடுகள், சஞ்சிகை ஆகியன)
11.	வருட அறிக்கை தயாரித்து அச்சிட்டு வழங்கல்
12.	கணினி எழுதுபொருட்கள் வழங்கல் (Ribbon, Cartridge, Toner, N.C.R. காகிதம், 2 and 3 ply papers, USB, CD, DVD)
13.	கணினி வலையமைப்பு வழங்கல்
14.	டயர் மற்றும் டியுப் வழங்கல்
15.	மொழிபெயர்ப்புச்சேவை வழங்குதல் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)
16.	பொருட்கள் விநியோக விரைதூதர் சேவை வழங்கல் (Courier Service)
17.	வரிக் கணக்கீட்டு ஆலோசனை சேவை வழங்கல்
18.	கணினி கட்டமைப்பை அமைத்து நிறுவுவதற்கான ஆலோசனை சேவை
19.	கழிக்கப்பட்ட இரும்பு மற்றும் தகடு, அகற்றப்பட்ட டயர் டியூப் கொள்வனவு செய்தல்
20.	CCTV கெமரா பொருத்துதல் ,பராமரித்தல், பழுதுபார்த்தல்.
